



# தின பூமி

thinaboomi.com






புதுச்சேரி, வியாழன், செப்டம்பர் 21, 2023 ▸ சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ பாண்டிச்சேரி பக்கம் 8 ₹ 3.00



**இந்தியா நிலவை அடைந்து விட்டது: நிதிக்கு கையேந்தி கொண்டிருக்கிறது; பாகிஸ்தான்: நவாஸ்ஷெரீப் விமர்சனம்**

...2-ம் பக்கம்

**மகளிர் இட ஒதுக்கீடு மசோதாவை நிறைவேற்ற எதற்காக 8 ஆண்டுகள்? பாராளுமன்றத்தில் ராகுல் கேள்வி**

...3-ம் பக்கம்

**உலகக்கோப்பை தொடர்: இந்திய ஆடவர் அணியின் புதிய ஜெர்சி வெளியானது**

...7-ம் பக்கம்






● சென்னை தலைமைச்செயலகத்தில், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை சார்பில், தமிழ்நாட்டின் புத்தொழில் சூழமையை மேம்படுத்தும் வகையில் 50-க்கும் மேற்பட்ட செயல் திட்டங்களை உள்ளடக்கிய "தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க கொள்கை-2023"-னை நேற்று, முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில் அமைச்சர் தா.மோ.அன்பரசன், தலைமைச்செயலாளர் சிவ்தாஸ் மீனா ஆகியோர் கலந்து கொண்டனர்.

### பெண்களுக்கு பார்லி., சட்டமன்றங்களில் 33 சதவீத ஒதுக்கீடு வழங்கும்

# மகளிர் இட ஒதுக்கீடு மசோதா நிறைவேற்றம்

## மக்கள் தொகை கணக்கெடுப்புக்கு பிறகே அமலுக்கு வரும்

புதுடெல்லி, செப். 21-

மகளிருக்கு 33 சதவீத இட ஒதுக்கீடு அளிக்கும் மசோதா நேற்று பாராளுமன்றத்தில் நிறைவேறியது. மசோதாவுக்கு ஆதரவாக 454 வாக்குகளும், எதிராக 2 வாக்குகளும் பதிவாகின. இதன் மூலம் பாராளுமன்றம், சட்டமன்றங்களில் மகளிருக்கு 33 சதவீத இடஒதுக்கீடு அளிக்க மசோதா வழிவகை செய்யும். எனினும் இந்த மசோதா மக்கள் தொகை கணக்கெடுப்புக்கு பிறகே அமலுக்கு வரும் என தெரிகிறது.

**மசோதா தாக்கல்....**

பாராளுமன்ற சிறப்பு கூட்டத்தொடர் கடந்த 3 நாட்களுக்கு முன் தொடங்கியது. பழைய பாராளுமன்ற கட்டிடத்தில் இருந்து புதிய பாராளுமன்ற கட்டிடத்துக்கு பாராளுமன்ற கூட்டத்தொடர் நேற்று முன்தினம் இடம்பெயர்ந்தது. புதிய பாராளுமன்றத்தின் முதல் அலுவலாக மகளிர் இடஒதுக்கீடு மசோதா தாக்கல் செய்யப்பட்டது. மத்திய சட்ட அமைச்சர் அர்ஜூன்ராம் மேக்வால், மசோதாவை தாக்கல் செய்தார்.

**15 ஆண்டுகளுக்கு...**

மகளிர் இடஒதுக்கீடு மசோதா, 15 ஆண்டுகளுக்கு மக்களவை மற்றும் மாநில சட்டசபைகளில் மகளிருக்கு 33 சதவீத இடஒதுக்கீடு அளிக்க வகை செய்கிறது. பெண்களுக்கு ஒதுக்கப்படும் தொகுதிகளில் எஸ்.சி., எஸ்.டி. பிரிவினருக்கு உள்ஒதுக்கீடு அளிக்கப்படும். மகளிர் இடஒதுக்கீடு மசோதாவுக்கு காங்கிரஸ், திமுக, அதிமுக உள்ளிட்ட கட்சிகள் ஆதரவு தெரிவித்துள்ளன.

**எதிர்க்கட்சிகள்...**

முன்னதாக மசோதா மீது மக்களவையில் நேற்று விவாதம் நடைபெற்றது. மசோதாவை விரைவாக சட்டமாக்கி, வரும் பாராளுமன்றத் தேர்தலில் அமல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எதிர்க்கட்சி எம்பிக்கள் வலியுறுத்தி உள்ளனர். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பெண் எம்பி ரஞ்சீத் ரஞ்சன் கூறும்போது,

"இந்த மசோதாவை நாங்கள் வரவேற்கிறோம். மகளிர் இட ஒதுக்கீடு தேவை என்பதை காங்கிரஸ் தொடர்ந்து கூறி வருகிறது. மகளிர் இட ஒதுக்கீட்டு மசோதாவை கடந்த 2010ம் ஆண்டு மார்ச் 9-ம் தேதி மாநிலங்களவையில் நாங்கள் நிறைவேற்றினோம். ஆனால், மக்களவையில் நிறைவேறாததால் மசோதா சட்டமாகவில்லை. பாஜக உண்மையாகவே இந்த மசோதாவை விரும்பி இருந்தால், 2021-ம் ஆண்டே மக்கள் தொகை கணக்கெடுப்பை நடத்தி இருப்பார்கள் என்றார்.

திமுக மக்களவை எம்.பி கனிமொழி பேசும்போது, "இந்த மசோதா அறிமுகப்படுத்தப்பட்டுள்ள போதிலும், இது எப்போது அமலுக்கு வரும் என்பது இன்னும் தெரியவில்லை. இந்த மசோதாவை 2024 பாராளுமன்றத் தேர்தலை மனதில் கொண்டு பாஜக கொண்டு வந்திருப்பதாகவே புரிந்து கொள்ள முடிகிறது" என்றார்.

**13 ஆண்டுகளாக....**

காங்கிரஸ் மூத்த தலைவர் சோனியா காந்தி பேசும்போது, "இந்த மசோதா நிறைவேறுவதில் நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம். அதே நேரத்தில், காங்கிரஸ் தலைமையிலான முந்தைய ஆட்சிக் காலத்தில் இந்த மசோதா மாநிலங்களவையில் நிறைவேற்றப்பட்டது. அவ்வாறு நிறைவேற்றப்பட்டு 13 ஆண்டுகளாக இந்திய பெண்கள் காத்திருக்கிறார்கள்.

(கடைசி பக்கம் பார்க்க)

### மகளிருக்கு 33 சதவீத இட ஒதுக்கீடு மசோதா:

# மத்திய அரசின் தேர்தல் நேர வண்ணஜால முயற்சி

## முதல்வர் மு.க.ஸ்டாலின் விமர்சனம்

சென்னை, செப். 21-

மகளிருக்கு 33 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கும் மசோதாவை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வரவேற்கிறேன் என தெரிவித்துள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின், இந்த இடஒதுக்கீடு மசோதா மத்திய அரசின் தேர்தல் நேர வண்ணஜால முயற்சி என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் செவ்வாய்க்கிழமை மகளிர் இடஒதுக்கீடு மசோதா தாக்கல் செய்யப்பட்டது. இந்த மசோதா மீதான விவாதம் நேற்று நடைபெற்றன. தொடர்ந்து, மாநிலங்களவையில் இன்று (வியாழக்கிழமை) இந்த மசோதா தாக்கல் செய்யப்படவுள்ளன. இந்த நிலையில், மகளிர் இட ஒதுக்கீடு மசோதாவை வரவேற்றும், தொகுதி மறுவரையறை குறித்து விமர்சனம் செய்தும் முதல்வர் ஸ்டாலின் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

"மகளிர் உரிமைக்கு 75 ஆண்டு காலமாக பாடுபட்டு வரும் தி.மு.க., மகளிர் ஒதுக்கீட்டை அன்றும் வரவேற்றது. இன்றும் வரவேற்கிறது. சர்ச்சைக்குரிய வேளாண் சட்டங்கள், குடியுரிமைத் திருத்தச் சட்டம், காஷ்மீர் சிறப்பு அந்தஸ்து பறிப்பு சட்டம் மற்றும் முற்பட்ட சாதியினருக்கு 10 சதவீத இடஒதுக்கீடு வழங்கும் சட்டங்களை நிறைவேற்றுவதில் காட்டிய

(கடைசி பக்கம் பார்க்க)

### காவிரி விவகாரத்தில் தமிழக அரசின் மனு மீது

# சுப்ரீம் கோர்ட்டில் இன்று விசாரணை

புதுடெல்லி, செப். 21-

காவிரி நீர் பங்கீடு விவகாரம் தொடர்பான வழக்கு சுப்ரீம் கோர்ட்டில் இன்று விசாரணைக்கு வரும் நிலையில், தமிழகத்திற்கு தண்ணீர் திறக்கக்கோரி காவிரி மேலாண்மை ஆணையம் பிறப்பித்த உத்தரவுக்கு தடை விதிக்க வேண்டும் என்று நேற்று கர்நாடகா அரசு சார்பில் நேற்று அவசர மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டுக்கு காவிரியில் உரிய தண்ணீரை திறந்துவிட கர்நாடகா தொடர்ந்து மறுத்து வருகிறது. இதனால் தமிழகத்தின் டெல்டா மாவட்டங்களில் பயிர்கள் கருக தொடங்கி உள்ளன. காவிரியில் தமிழகத்துக்கு தர வேண்டிய தண்ணீரை உடனே திறந்து விட தமிழக அரசு வலியுறுத்தி வருகிறது.

இது தொடர்பாக காவிரி ஒழுங்காற்று குழு, மேலாண்மை ஆணையம், சுப்ரீம் கோர்ட் ஆகியவற்றில் முறையிட்டுள்ளன. இதில் தமிழகத்துக்கு வினாடிக்கு 5 ஆயிரம் கன அடி தண்ணீரை திறந்துவிட கோரி கர்நாடகாவுக்கு காவிரி மேலாண்மை ஆணையம் உத்தரவிட்டது. ஆனால் தங்களது தேவைக்கே போதுமான தண்ணீர் இல்லாததால் தமிழகத்துக்கு தண்ணீர் திறந்து விடும் சூழல் இல்லை என்று கர்நாடகா கூறி வருகிறது.

காவிரி நதிநீர் பங்கீட்டு வழக்கில் சுப்ரீம் கோர்ட்டில் பிறப்பித்த இறுதி தீர்ப்பின்படி கர்நாடக அரசு தமிழகத்துக்கு உரிய நீரை வழங்கவில்லை. இதனால் தமிழக அரசு, சுப்ரீம் கோர்ட்டில் புதிய மனு ஒன்றை தாக்கல் செய்தது. அதில், "ஆகஸ்ட் மாதத்தில் வழங்க வேண்டிய 37.9 டிஎம்சி நீரை உடனடியாக திறந்துவிடுமாறு கர்நாடக அரசுக்கு உத்தரவிட வேண்டும். செப்டம்பர் மாதத்தில் திறந்துவிட வேண்டிய 37.76 டிஎம்சி தண்ணீரை கர்நாடக அரசு திறந்துவிடுவதை உறுதி செய்ய வேண்டும்.

தமிழகத்துக்கு எஞ்சியிருக்கும் காலத்தில் திறந்துவிட வேண்டிய நீர் குறித்த உத்தரவுகளை உரிய காலத்தில் அமல்படுத்த கர்நாடக அரசுக்கு காவிரி மேலாண்மை ஆணையத்துக்கு உத்தரவிட வேண்டும் என்று சுப்ரீம் கோர்ட்டில் தமிழக அரசு செய்த மனுவில் கோரியிருந்தது. இந்த வழக்கை கடந்த ஆக.25-ம் தேதி விசாரித்த நீதிபதி பி.ஆர்.கவாய் தலைமையிலான அமர்வு, காவிரி மேலாண்மை ஆணையத்தின் அடுத்த கூட்டத்தில் எடுக்கப்படும் முடிவு, அணைகளின் நீர்மட்டம் உள்ளிட்ட விவரங்களை பிரமாண பத்திரமாக ஆணையம் தரப்பில் தாக்கல் செய்ய உத்தரவிட்டு விசாரணையை செப்டம்பர் 1-ம் தேதிக்கு ஒத்திவைத்திருந்தது.

இதைத் தொடர்ந்து, தமிழக அரசுத் தரப்பில், காவிரி வழக்கை உடனே விசாரணைக்கு எடுக்கக் கோரி முறையீடு செய்தனர். இந்த வாதத்தை ஏற்க மறுத்த நீதிபதிகள், காவிரியிலிருந்து உரிய நீரை திறந்துவிடக் கோரி தமிழக அரசுத் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவை வரும் செப்டம்பர் 21-ம் தேதி (இன்று) விசாரணைக்கு எடுத்துக் கொள்வதாக தெரிவித்தனர்.

இந்த நிலையில் டெல்லியில் கர்நாடக முதல்வர் சித்தராமையா, அம்மாநில அனைத்துக்கட்சி எம்.பி.க்களுடன் ஆலோசனை நடத்தினார். டெல்லியில் உள்ள நட்சத்திர ஓட்டலில் நடந்த இக்கூட்டத்தில் காவிரி விவகாரத்தில் அடுத்தக்கட்ட நடவடிக்கை குறித்து ஆலோசித்தனர். இதில் காவிரி மேலாண்மை ஆணைய உத்தரவுக்கு எதிராக சுப்ரீம் கோர்ட்டை நாட முடிவு எடுக்கப்பட்டது.

அதன்படி தமிழகத்துக்கு வினாடிக்கு 5 ஆயிரம் கன அடி திறந்துவிட காவிரி மேலாண்மை ஆணைய உத்தரவுக்கு தடை விதிக்க கோரி கர்நாடக அரசு சார்பில் சுப்ரீம் கோர்ட்டில் நேற்று அவசர மனு தாக்கல் செய்யப்பட்டது. அதில், தமிழகம் வினாடிக்கு 25 ஆயிரம் கனஅடி தண்ணீர் கேட்டபோது எங்களிடம் சொற்ப அளவு தண்ணீர் இருந்தாலும் 10 ஆயிரம் கன அடி தண்ணீர் திறந்து விட்டோம். அதன்படி 5 ஆயிரம், 3 ஆயிரம் கன அடி என எங்களால் இயன்ற அளவுக்கு திறக்கப்பட்டது.

தற்போது தண்ணீர் திறந்து விடுவதற்கான சாத்தியமே இல்லை. எங்களுக்கே 120 டி.எம்.சி.க்கு மேல் தேவைப்படுகிறது.

இந்த சூழலில் தமிழ்நாட்டுக்கு தண்ணீர் திறந்து விட முடியாது. இதை கருத்தில் கொள்ளாமல், காவிரி மேலாண்மை ஆணையம் பிறப்பித்த உத்தரவுக்கு தடை விதிக்க வேண்டும் என்று மனுவில் கூறப்பட்டுள்ளது. காவிரி தொடர்பான வழக்கு இன்று விசாரணைக்கு வரும் நிலையில் கர்நாடக அரசு அவசர மனுவை தாக்கல் செய்து உள்ளது குறிப்பிடத்தக்கது.

முன்னதாக காவிரி விவகாரம் தொடர்பாக தமிழ்நாடு அனைத்துக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று முன்தினம் அமைச்சர் துரைமுருகன் தலைமையில் (செவ்வாய்க்கிழமை) மத்திய நீர்வளத்துறை அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத்தை சந்தித்து மனு அளித்தது குறிப்பிடத்தக்கது.

# அக்.9-ம் தேதி கூடுகிறது தமிழக சட்டப்பேரவை

## சபாநாயகர் அப்பாவு அறிவிப்பு

சென்னை, செப். 21-

"வருகின்ற அக்டோபர் 9-ம் தேதி காலை 10 மணிக்கு தலைமைச் செயலகத்தில் உள்ள சட்டமன்ற வளாகத்தின், பேரவை மண்டபத்தில் சட்டமன்றம் கூட இருக்கிறது" என்று சபாநாயகர் அப்பாவு தெரிவித்துள்ளார்.மேலும் அன்றைய தினம் நடப்பு நிதி ஆண்டுக்கான கூடுதல் செலவினங்களுக்கான மானியக் கோரிக்கை அறிமுகம் செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

சென்னை தலைமைச் செயலகத்தில் சபாநாயகர் அப்பாவு புதன்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியது: "வருகின்ற அக்டோபர் 9-ம் தேதி காலை 10 மணிக்கு தலைமைச் செயலகத்தில் உள்ள சட்டமன்ற வளாகத்தில், பேரவை மண்டபத்தில் சட்டமன்றம் கூட இருக்கிறது. அன்றைய தினம், 2023-24-ம் ஆண்டுக்கான கூடுதல் செலவினங்களுக்கான மானியக் கோரிக்கையினை தமிழக நிதி மற்றும் மேலாண்மைத் துறை அமைச்சர் சட்டமன்றத்தில் அறிமுகம் செய்வார்" என்றார். மேலும், அன்றைய தினம் அலுவல் ஆய்வுக்குழுக் கூட்டத்தை நடத்தி, கூட்டத்தொடரை எத்தனை நாள் நடைபெறும் என்பது முடிவு செய்யப்படும் என்று அவர் கூறினார்

அப்போது அவரிடம் பாராளுமன்றத்தில், அறிமுகம் செய்யப்பட்டுள்ள மகளிருக்கான 33 சதவீத இடஒதுக்கீடு நிறைவேறப்பட்டால், தமிழகத்திலும் நிறைவேற்றப்படுமா என்று கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அவர், "பாராளுமன்றத்தில் சட்டம் நிறைவேற்றினால், சட்டமன்றத்துக்கும் சேர்த்துதானே நிறைவேற்றுவார்கள். நிச்சயமாக நிறைவேற்றப்படும்" என்றார். மேலும், "அந்தச் சட்டத்தை நிறைவேற்றுவார்கள் என்ற நம்பிக்கை உங்களுக்கு இருக்கிறதோ என்று செய்தியாளர்களிடம் சபாநாயகர் அப்பாவு கேள்வி எழுப்பினார்.

"பாராளுமன்றத்தில் மகளிருக்கான 33 சதவீத இடஒதுக்கீடு மசோதாவை புதிய பாராளுமன்றக் கட்டிடத்தில் அறிமுகப்படுத்தியுள்ளனர், அவ்வளவுதான். அது நடைமுறைக்கு வருமா என்பது மிகப்பெரிய கேள்விக்குறி என்பதால்தான் பாராளுமன்றத்தில் அனைத்துக் கட்சியினரும் பேசியுள்ளனர்" என்று கூறினார்.

மகளிர் இடஒதுக்கீடு மசோதா நடைமுறைக்கு வரும் என்று நம்பிக்கையில்லையா என்ற கேள்விக்கு பதிலளித்த அவர், "அப்படி என்றால், 2008-ல் இருந்து அது தொடங்கியிருக்கிறது. மறைந்த பிரதமர் ராஜீவ் காந்தி காலத்திலும் நிறைய மசோதாக்கள் கொண்டு வரப்பட்டுள்ளது. மேலவையில் ஒப்புதல் பெறப்பட்டு, மக்களவைக்கு கொண்டு வரப்பட்டது. இறுதியில், 15வது பாராளுமன்றக் கூட்டத்தொடர் முடிந்துபோன போது அதுவும் முடிந்துபோய் விட்டது.

இந்த முயற்சியை 2014-ல் பாஜக தலைமையிலான மத்திய அரசு எடுத்திருந்தால் நூறு சதவீதம் நம்பியிருப்போம். இது தேர்தல் வரப்போகிறது, அதற்கு முன்பாக மகளிருக்கு 33 சதவீதம் இடஒதுக்கீடு என்று கூறுகின்றனர். தமிழகத்தில் அனைவருமே என்ன சொல்கிறார்கள் என்றால், தமிழக முதல்வர், கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டத்தின் மூலம் 1 கோடியே 6 லட்சத்து 50 ஆயிரம் பெண்களுக்கு மாதம் ரூ.1000 வழங்கி, அவர்களது முகத்தில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளார். இதனால், மகளிருக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில், இதுபோல 33 சதவீத இடஒதுக்கீடு அறிவிப்பை மத்திய அரசு வெளியிட்டுள்ளதாக பேசிக் கொள்கின்றனர்" என்றார்.

# 9 மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு

சென்னை, செப். 21-

தமிழகத்தில் தேனி உள்ளிட்ட 9 மாவட்டங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தகவல் தெரிவித்துள்ளது.

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது, இன்று (21-09-2023): தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒருசில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும். கோயம்புத்தூர் மாவட்ட மலைப்பகுதிகள், நீலகிரி, கோயம்புத்தூர், தேனி, திண்டுக்கல், சேலம், தர்மபுரி, கள்ளக்குறிச்சி, திருச்சிராப்பள்ளி மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் ஒருசில இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

22-09-2023: தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒருசில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். கோயம்புத்தூர் மாவட்டத்தின் மலைப்பகுதிகள், நீலகிரி, தேனி, திருப்பூர், திண்டுக்கல், சேலம், தர்மபுரி, கள்ளக்குறிச்சி, திருச்சிராப்பள்ளி, நாமக்கல், ஈரோடு, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர் மற்றும் கரூர் மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது.


## மார்க்கெட் விலை நிலவரம்



| BSE | NSE |
|---|---|
| -796.00 | -231.90 |
| பாயின்ட் 66800.84 | பாயின்ட் 19901.4 |



**தங்கம்**
1 சவரன் ₹44,400
1 கிராம் ₹5,550



**வெள்ளி**
1 கிலோ ₹78,300
1 கிராம் ₹78.30

**டாலர்** ₹82.98

**பெட்ரோல்** ₹102.63
**டீசல்** ₹94.24



### எல் நினோ தாக்குதல் எதிரொலி:

# பெருவில் 544 மாவட்டங்களில் அவசரநிலை பிரகடனம் அறிவிப்பு



**லிமா, செப். 21-**

எல் நினோ தாக்குதல் எதிரொலியாக பெரு நாட்டில் 544 மாவட்டங்களில் அவசர நிலை பிரகடனம் அறிவிக்கப் பட்டுள்ளது.

அமேசான் மழைக் காடுகள் நிரம்பிய வட அமெரிக்க நாடு பெரு ஆகும். இதன் தலைநகர் லிமா. பெரு நாட்டில், கடந்த 13-ம் தேதி அன்று அந்நாட்டின் தேசிய சிவில் பாதுகாப்பு நிறுவனம், நீர் நிலை குறித்த தனது தொழில்நுட்ப அறிக்கையில் எல் நினோ தாக்குதல் 2024 கோடை காலம் வரை இருக்கும் என எச்சரித்தது. இதனையடுத்து பெரு நாட்டில் நேற்று முன்தினம் தொடங்கி 2 மாத காலத்திற்கு 544 மாவட்டங்களுக்கு அவசரகால நிலை பிரகடனம் செய்யப் பட்டுள்ளது.

வரவிருக்கும் எல் நினோ நிகழ்வினால் அங்கு பெரும் வறட்சியும் அதன் காரணமாக குடிநீர் தட்டுப்பாடும் ஏற்பட விருப்பதாக வல்லுனர்கள் தெரிவித்திருப்பதால் இந்த முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. நிலைமையை சமாளிக்க அந்நாட்டின் மத்திய, மாநில மற்றும் உள்ளூர் அரசாங்க அமைப்புகளும் தேசிய சிவில் பாதுகாப்பு நிறுவனமும் ஒருங்கிணைந்து செயல் படுகின்றன.

இந்நிலையில் அமெரிக்காவில் தற்போது நடைபெற்று வரும் ஐக்கிய நாடுகளின் கூட்டமைப்பின் பொது சபையின் சந்திப்பில் பேசிய பெரு நாட்டு அதிபர் டினா பொலுவார்டே எல் நினோ நிகழ்வை எதிர்கொள்ள பன்னாட்டு கூட்டு முயற்சியும் ஒப்பந்தமும் அவசியம் என வலியுறுத்தினார்.

மத்திய மற்றும் கிழக்கு பசிபிக் கடலின் மேற்புரத்தில் ஏற்படும் அதிகப்படியான வெப்பமயமாதலால் அமெரிக்கா உட்பட உலகின் பல நாடுகளில் பருவகால மாற்றங்களில் சில வருட கால இடைவெளிகளில் ஒரு சமச்சீரற்ற நிலை உருவாகிறது. இதன் காரணமாக அதிக வறட்சி, அதிக மழைபொழிவு என வானியல் சூழ்நிலை மாறி மாறி திகழ்கிறது. இதன் காரணமாக குடிநீர் தட்டுப்பாடும், வெள்ளம், புயல் போன்ற இயற்கை சீற்றங்களும் அதிகம் உருவாகின்றன. இந்நிகழ்வை எல் நினோ என சுற்றுச்சூழல் வல்லுனர்கள் அழைக்கின்றனர்.

பல வருடங்களாகவே இந்த சிக்கலை சமாளிக்க உலக நாடுகள் ஒன்றிணைய வேண்டும் என வானிலை நிபுணர்கள் கோரிக்கை வைத்து வருகின்றனர்.

**மரம் மனிதனின் உரம்**

### அம்பானி இல்ல சதுர்த்தி விழாவில் அட்லி, நயன்தாரா ஜோடிகள் பங்கேற்பு

**மும்பை, செப். 21-**

மும்பையில் உள்ள தொழிலதிபர் முகேஷ் அம்பானியின் ஆன்டிலியா இல்லத்தில் விநாயகர் சதுர்த்தி விழா செவ்வாய்க் கிழமை இரவு மிக பிரமாண்டமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த விழாவில் கலந்து கொள்ள அரசியல் தலைவர்கள், இந்திய திரைத்துறையினர், விளையாட்டு வீரர்கள், தொழிலதிபர்கள் மற்றும் பல்வேறு துறைகளை சார்ந்த பிரபலங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இதில், பல்வேறு பிரபலங்கள் கலந்து கொண்ட நிலையில், தமிழ் திரைத்துறையை சேர்ந்த இயக்குநர் அட்லியும் அவரது மனைவியும், இயக்குநர் விக்னேஷ் சிவன் - நடிகை நயன்தாரா தம்பதியினரும் கலந்து கொண்டனர். இந்த நிலையில், இரு ஜோடிகளின் புகைப்படங்களும் இணையத்தில் வைரலாகி வருகிறது.

### சென்னையில் பெண்களுக்கான நடமாடும் ஒப்பனை அறை துவக்கம்

**சென்னை, செப். 21-**

பெண்களுக்கான நடமாடும் ஒப்பனை அறையை சென்னை மாநகராட்சி நேற்று தொடங்கியுள்ளது.

சென்னை மாநகராட்சி சார்பில் நிர்பயா திட்டத்தின் நிதியின் கீழ் ரூ. 4.37 கோடி மதிப்பில் 15 நடமாடும் மகளிர் ஒப்பனை அறை வாகனங்கள் நேற்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இந்த வாகனத்தில் கழிவறை, முகம் பார்க்கும் கண்ணாடி, சானிட்டரி நாப்கின், கைக் கழுவும் திரவம், உடை மாற்றும் சிறிய அறை, தாய்ப்பால் ஊட்டும் அறை உள்ளிட்டவை இடம்பெற்றுள்ளன.

இந்த திட்டத்தை நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு தொடங்கி வைத்தார். இந்த நிகழ்வில், சென்னை மாநகராட்சி மேயர் பிரியா, மாநகராட்சி ஆணையர் ராதாகிருஷ்ணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### ஈரான் சிறையில் இருந்து 5 அமெரிக்கர்கள் விடுதலை

**டோகா, செப். 21-**

அணுசக்தி ஒப்பந்தத்தில் இருந்து வெளியேறியதால் ஈரான் மீது அப்போதைய அமெரிக்க அதிபர் பொருளாதார தடைகளை விதித்தார். மேலும் தென்கொரியாவுக்கு கச்சா எண்ணெய் ஏற்றுமதி செய்த ரூ. 49,138 கோடியை ஈரானுக்கு கிடைக்க செய்யாமல் முடக்கினார்.

இதற்கிடையே, அமெரிக்கா, ஈரான் இடையே கைதிகள் பரிமாற்றம் ஒப்பந்தம் போடப்பட்டது. அதன் பேரில் அமெரிக்காவுக்கு உளவு பார்த்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு ஈரானில் சிறை தண்டனை அனுபவிக்கும் 5 அமெரிக்கர்களை விடுவிக்க ஈரான் ஒப்புக்கொண்டது.

இந்த ஒப்பந்தத்தின் கீழ் பொருளாதார தடையால் முடக்கப்பட்டிருந்த ரூ. 49,138 கோடியை அமெரிக்கா விடுவித்தது. மேலும் அமெரிக்க சிறையில் உள்ள ஈரானியர்கள் 5 பேரை விடுவிக்கவும் ஆலோசனை நடக்கிறது.

இந்நிலையில், கைதிகள் பரிமாற்ற ஒப்பந்தத்தின் கீழ் விடுவிக்கப்பட்ட அவர்கள் கத்தார் தலைநகர் டோகாவுக்கு விமானம் மூலம் அனுப்பி வைக்கப்பட்டனர். அவர்களை கத்தாருக்கான அமெரிக்க தூதர் டேவிஸ் நேரில் சென்று வரவேற்றார்.

### இந்தியா நிலவை அடைந்து விட்டது:

# நிதிக்கு கையேந்தி கொண்டிருக்கிறது பாகிஸ்தான்: நவாஸ் ஷெரீப் விமர்சனம்

**லாகூர், செப். 21-**

இந்தியா நிலவை அடைந்து விட்ட சூழலில், உலக நாடுகளிடம் பாகிஸ்தான் கையேந்திக் கொண்டிருக்கிறது என பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் தெரிவித்துள்ளார்.

லாகூரில் நடைபெற்ற பாகிஸ்தான் முஸ்லீம் லீக் - நவாஸ் கட்சியின் பொதுக் கூட்டத்தில் வீடியோ கான்பரன்சிங் மூலம் பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் உரையாற்றினார். அப்போது அவர் பேசியதாவது,

இந்தியா நிலவை அடைந்து விட்டது. ஜி-20 கூட்டங்களை நடத்திக் கொண்டிருக்கிறது. ஆனால் அதே நேரத்தில், பாகிஸ்தான் பிரதமர் நாடு, நாடாகச் சென்று நிதிக்காக கையேந்திக் கொண்டிருக்கிறார். இந்தியா செய்த சாதனைகளைப் பாகிஸ்தானால் ஏன் செய்ய முடியவில்லை. இதற்கெல்லாம் இங்கு யார் பொறுப்பு என்று பேசினார்.

கொரோனா காலகட்டத்துக்குப் பிறகு பாகிஸ்தான் கடுமையான பொருளாதார நெருக்கடிகளை சந்தித்து வருகிறது. கடந்த ஆண்டு ஷெபாஷ் ஷெரீப் பிரதமராக பதவியேற்ற பின்னும், சீரான பொருளாதார நிலையை பாகிஸ்தானால் எட்ட முடியவில்லை. இதன் தொடர்ச்சியாகவே நவாஸ் ஷெரீப் கடுமையான விமர்சனங்களை ஷெபாஷ் ஷெரீப் அரசின்மீது முன்வைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

2019-ல் அல்அஜிசியா மில் ஊழல் வழக்கில் ஏழு ஆண்டுகள் சிறை தண்டனை பெற்று தற்போது மருத்துவ காரணங்களுக்காக லண்டனில் இருக்கும் நவாஸ் ஷெரீப் வரும் அக்டோபர் 21-ம் தேதி நாடு திரும்புவதாக அறிவித்துள்ளார். பாகிஸ்தானில் நவம்பர் 6-ம் தேதியை பொதுத் தேர்தல் அறிவிக்கப் பட்டுள்ளதை தொடர்ந்து நாடு திரும்புவதாக நவாஸ் ஷெரீப் அறிவித்துள்ளார்.

# டுவிட்டர் பயனாளர்களிடமிருந்து மாதாந்திர கட்டணம் வசூலிக்க எலான் மஸ்க் திட்டம்

**வாஷிங்டன், செப். 21-**

எக்ஸ் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ள டுவிட்டர் சமூக வலைத்தளத்தை பயன்படுத்தும் அனைத்து பயனாளர்களிடமிருந்தும் மாதாந்திர கட்டணம் வசூலிக்க திட்டமிடப்பட்டுள்ளதாக எலான் மஸ்க் தெரிவித்துள்ளார்.

டுவிட்டர் வலைத்தளத்தை தன் வசமாக்கியது முதல் டெஸ்லா அதிபர் எலான் மஸ்க் அதிரடியாக பல்வேறு மாற்றங்களை செய்து வருகிறார். டுவிட்டரின் பெயரை எக்ஸ் என்று மாற்றியதுடன் ஊழியர்கள் குறைப்பு பணம் கொடுத்து பிரிமியம் அக்கௌன்ட் உள்ளிட்ட பல மாற்றங்களை செய்துள்ளார்.

இந்த நிலையில் அமெரிக்கா சென்றுள்ள இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவை எலன் மஸ்க் சந்தித்து உரையாடினார். இந்த உரையாடலில் செயற்கை நுண்ணறிவான ஏ.ஐ குறித்து விவாதிக்கப்பட்டது.

அப்போது கருத்து சுதந்திரத்தை பாதுகாப்பதற்கும் வெறுப்பு பேச்சுக்கு எதிராக போராடுவதற்கும் இடையே டுவிட்டரின் சமநிலையை ஏற்படுத்துமாறு எலான் மஸ்க்கை நெதன்யாகு கேட்டுக்கொண்டார். இதற்கு போலி கணக்குகளின் நடமாட்டமே காரணம் என்ற எலான் மஸ்க் இதனை தடுக்க வரும் காலத்தில் எக்ஸ் தளத்தை முழுமையான கட்டண வலைத்தளமாக்க முடிவு செய்துள்ளதாக கூறினார்.

எக்ஸ் இணையதளத்திற்கு ஒரு கட்டண சுவரை அமைப்பதன் மூலம் தான் போலி கணக்குகளை முழுவதுமாக ஒழிக்க முடியும் என்று எலான் மஸ்க் குறிப்பிட்டுள்ளார். தற்போது பிரிமியம் சேவைகளுக்கு மட்டுமே பயனர்களிடம் கட்டணம் வசூலிக்கப்படும் நிலையில் விரைவில் 100 சதவீத கட்டண வலைத் தளமாக டுவிட்டரை மாற்ற எலான் மஸ்க் திட்டமிட்டிருக்கிறார். எனினும் பயனாளர்களிடம் இருந்து எவ்வளவு கட்டணம் வசூலிக்கப்படும் சந்தா செலுத்துவதால் கிடைக்கும் அம்சங்கள் என்பது குறித்த விவரங்களை பகிரவில்லை.

# உக்ரைன் தானிய இறக்குமதி தடையை நீக்கியதற்கு எதிர்ப்பு

### பல்கேரியாவில் விவசாயிகள் போராட்டம்

**கீவ், செப். 21-**

உக்ரைன் தானியங்களை இறக்குமதி செய்வதற்கு விதிக்கப்பட்ட தடையை முடிவுக்கு கொண்டு வருவதை எதிர்த்து பல்கேரியாவில் டிராக்டர்களை அணிவகுத்து நிற்க செய்து விவசாயிகள் தங்களது எதிர்ப்பை பதிவு செய்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்தது முதலே உக்ரைனில் இருந்து தானியங்கள் ஏற்றுமதி செய்யப்படுவது பெருமளவில் குறைந்துள்ளது. நிலைமையை சமாளிக்க குறைந்த விலைக்கு தங்கள் நாட்டு தானியங்களை உக்ரைன் ஏற்றுமதி செய்தது.

இதனால் தங்கள் கூட்டமைப்பில் உள்ள நாடுகளில் விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள் என்று கருதிய ஐரோப்பிய யூனியன் உக்ரைனில் இருந்து தானியங்களை இறக்குமதி செய்ய தடை விதித்தது.

இந்நிலையில், உக்ரைன் மீதான தடையை பல்கேரியா அரசு முடிவுக்கு கொண்டு வந்ததால் அங்குள்ள விவசாயிகள் போராட்டத்தில் குதித்துள்ளனர். சோபியா பகுதியில் நூற்றுக்கணக்கான டிராக்டர்களுடன் கூடிய விவசாயிகள் அவற்றை அணிவகுக்க செய்து தாங்கள் எதிர்ப்பை பதிவு செய்தனர்.

### 21-09-2023




**மேஷம்:-** வழக்குகளை ஒத்திப் போடுவது நல்லது. அதிகாரிகள் ஆணைகளை தவறாது ஏற்று நடந்தால் முன்னேற்றம் ஏற்படும். மனதில் எண்ணியபடி எண்ணிய காரியங்கள் ஏற்றம் தரும்.

**ரிஷபம்:-** இனிய பேச்சாலும், சாதுர்யத்தால், காரியங்கள் யாவற்றிலும். வெற்றி அடைவது, அனைவரையும் கவர்வீர்கள். புதிய உத்தியோக வாய்ப்புகள், பதவி உயர்வு ஆகியவற்றை எதிர்பார்க்கலாம்.

**மிதுனம்:-** பயணத்தில் சுகானுபவங்கள் ஏற்படும். நண்பர்களின் உதவி நாட மறுக்காது உதவி செய்வார். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் ஏற்படும். வாழ்க்கையில் இனிய மாற்றங்களை எதிர்பார்க்கலாம்.

**கடகம்:-** பெண்களின் ஆரோக்கியத்தில் அக்கறை செலுத்துங்கள். வண்டி வாகனங்களில் செல்லும் போது மிகவும் எச்சரிக்கையுடன் நிதானமாக செயல்படுங்கள். எல்லா விதத்திலும் செலவுகள் கூடும்.

**சிம்மம்:-** எடுத்த காரியங்கள் அனைத்தும் ஏனோ தானோ என முடிக்கும் சூழ்நிலை உருவாகும். இயலாமை காரணமாக இல்லத்தில் உள்ளவர்கள் மீது ஏற்படும் எரிச்சலை குறைத்தால், இரத்த அழுத்தம் எகிராது.

**கன்னி:-** மனையாளின் ஒத்துழைப்பு மட்டற்ற மகிழ்ச்சி தரும். தனவரவு கூடும். புதிய நண்பர்கள் சேர்க்கையால், புதிய விஷயங்களைக் கற்றுக் கொள்வீர்கள். எண்ணிய எண்ணியாங்கு நடக்கும்.

**துலாம்:-** வீட்டிலும் வெளியிலும் வீண் வாக்குவாதங்களை தவிர்ப்பது நல்லது. அக்கறையுடன் படித்தால், கல்வித் தடைகளைத் தகர்க்கலாம். பயணங்களில் கவனம் தேவை.

**விருச்சிகம்:-** சீராக, நாகரீகமாக, மிடுக்கான உடை உடுத்தி, மற்றவர்களை கவரும் வண்ணம் நடந்துகொள்வீர்கள். உங்கள் தேஜஸ் கூடும். தேவைக்கு அதிகமாகவே தனவரவு உண்டாகும்.

**தனுசு:-** எதிர்பாராத விதமாக வேறு இடத்திற்கு பணி மாற்றம் ஏற்படலாம். மங்கையரால் ஏற்படும் மாறாத செலவுகளால், கடன் பெறும் சூழ்நிலை உருவாகலாம். உண்ணவும் நேரமின்றி உழைக்க நேரிடும்.

**மகரம்:-** உங்கள் மதிப்பு மரியாதை கூடும். விருப்பங்கள் யாவும் நிறைவேறும். அதிகாரத்தில் உள்ளவர்கள் ஆதரவால் முன்னேற்றம் கிடைக்கும். நம்பிக்கைக்கு உரியவர்கள் நட்பு கிடைக்கும்.

**கும்பம்:-** சீரான வருமானத்தால் பொருளாதார நிலை திருப்திகரமாக இருக்கும். வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். பணியில் இருப்பவர்களுக்கு பதவி உயர்வும் கிடைக்கும்.

**மீனம்:-** தொழில் பயணங்களால் வெற்றி கிட்டும். ஆராய்ச்சி மேற்கொள்ளும் எண்ணம் எழும். வியாபாரிகளுக்கு, வாடிக்கையாளர்களின் ஆதரவால் இலாபம் அதிகரிக்கும்.

### சங்கமம் - நம்ம ஊரு திருவிழா:

# சென்னை உள்பட 9 மாவட்டங்களில் நடத்த கலை பண்பாட்டு துறை ஏற்பாடு

**சென்னை, செப். 21-**

சென்னை, காஞ்சிபுரம் உள்பட 9 மாவட்டங்களில் சங்கமம்-நம்ம ஊரு திருவிழா நடத்த கலை பண்பாட்டு துறை ஏற்பாடுகளை செய்து வருகிறது.

இதுகுறித்து கலை பண்பாட்டுத்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

சென்னையில் கடந்த பொங்கல் விழாவையொட்டி 4 நாட்கள் 18 இடங்களில் சென்னை சங்கமம் - நம்ம ஊரு திருவிழா நடைபெற்றது. இது அனைத்து தரப்பு மக்களின் வரவேற்பை பெற்றதால், இந்த ஆண்டு மேலும் 8 முக்கிய நகரங்களுக்கு விரிவுபடுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

இதையடுத்து சென்னை, கோவை, தஞ்சாவூர், வேலூர், சேலம், திருநெல்வேலி, காஞ்சிபுரம், மதுரை, திருச்சி ஆகிய இடங்களில் சங்கமம் - கலைத்திருவிழாவை நடத்தும் வகையில் நாட்டுப்புற கலை விழாக்கள் அக்டோபர், டிசம்பர் மாதங்களில் முதற்கட்டமாக நடத்தப்பட உள்ளது.

இந்த கலைவிழா மூலம் 3 ஆயிரம் நாட்டுப்புறக் கலைஞர்கள் பயன் அடைவார்கள். இதைத் தொடர்ந்து சென்னையில் அடுத்த ஆண்டு பொங்கல் பண்டிகையின் போது பிரமாண்டமாக சங்கமம்-நம்ம ஊரு திருவிழா பல்வேறு இடங்களில் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த விழா மூலம் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கலைஞர்கள் பயன்பெறுவார்கள்.

சங்கமம் - நம்ம ஊரு திருவிழாவில் பங்குபெற விரும்பும் கலைக்குழுக்கள் தங்கள் கலைத் திறமையை வெளிப்படுத்தும் வகையில் 5 நிமிடம் ஓடக்கூடிய வகையில் வீடியோவை குறுந்தகடு அல்லது பென் டிரைவ்-ல் பதிவு செய்து, கலை பண்பாட்டுத் துறைக்கு www.artandculcure.tn.gov.in என்ற இணையதளத்தில் விண்ணப்பத்தை பதிவிறக்கம் செய்து பூர்த்தி செய்து எங்களது மண்டல கலை பண்பாட்டு மைய அலுவலகங்களுக்கு அக்டோபர் 6-ம் தேதிக்குள் பதிவு தபாலில் அனுப்ப வேண்டும்.

இந்த விண்ணப்பங்களை வைத்து கலைஞர்களை தேர்ந்தெடுத்து நம்ம ஊரு திருவிழா கலை நிகழ்ச்சிகளில் பங்கேற்க வாய்ப்புகள் அளிக்கப்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# அரை மணி நேரத்தில் நிறைவடைந்த புதுவை சட்டப் பேரவைக் கூட்டம்

**புதுச்சேரி, செப். 21-**

புதுச்சேரி சட்டப்பேரவைக் கூட்டம் தொடங்கிய அரை மணி நேரத்தில் நேற்று நிறைவு பெற்றது.

புதுவை சட்டப்பேரவை கூட்டம் நேற்று காலை சபாநாயகர் ஆர். செல்வம் தலைமையில் நடைபெற்றது. முதல்வர் ரங்கசாமி, எதிர்க்கட்சித் தலைவர் சிவா, காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்கள் உள்ளிட்ட அனைவரும் கலந்து கொண்டனர். துணை சபாநாயகர் ராஜவேலு உடல்நலக் குறைவால் பங்கேற்கவில்லை.

இந்த கூட்டம் தொடங்கியவுடன் இரங்கல் தீர்மானம் வாசிக்கப்பட்டது. அதையடுத்து புதுச்சேரி அரசு பள்ளி மாணவர்களுக்கான இடஒதுக்கீடு வழங்கிய மத்திய அரசை பாராட்டியும், சந்திரயான் -3 விண்கலம், ஜி-20 மாநாடு வெற்றிகரமாக நடத்தியதற்கு மத்திய அரசுக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

மேலும் சட்டப்பேரவை உறுப்பினர்கள் தகுதி இழப்பை தடுத்தல் மற்றும் சேவை வரி தொடர்பான மூன்று சட்ட முன் வரைவுகள் தாக்கல் செய்யப்பட்டன. அப்போது மக்கள் பிரச்சனைகளை பேச வேண்டும் என தி.மு.க. உறுப்பினர்கள் கூச்சலிட்டனர். அதனை தொடர்ந்து அவர்கள் வெளிநடப்பு செய்தனர். இந்த நிலையில் அரை மணி நேரத்தில் பேரவைக் கூட்டத்தை தேதி குறிப்பிடாமல் ஒத்திவைப்பதாக சபாநாயகர் ஆர். செல்வம் அறிவித்தார்.

# மகளிர் இடஒதுக்கீடு மசோதாவை வரவேற்கிறேன்: கமலஹாசன்

**சென்னை, செப். 21-**

புதிய பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் மகளிர் இடஒதுக்கீடு முதல் மசோதா தாக்கல் செய்யப்பட்டதற்கு மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசன் தனது டுவிட்டர் பக்கத்தில் பாராட்டு தெரிவித்துள்ளார்.

நமது பாராளுமன்ற இருக்கை புதிய வீட்டிற்கு மாறியுள்ளது. இந்த புதிய பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட முதல் மசோதா மகளிர் இட ஒதுக்கீடு மசோதா. இதனை நமது தேசத்தின் மிகப் பெரிய சிறுபான்மையினரான இந்திய பெண்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட நீண்ட கால அநீதியை சரி செய்வதற்கு வழிவகுக்கும் என மகிழ்ச்சி அடைகிறேன். நான் முழு மனதுடன் பாராட்டுகிறேன்.

பாலின சமத்துவத்தை உறுதி செய்யும் நாடுகள் எப்போதும் செழிக்கும். இந்த மசோதா அடுத்த மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் எல்லை நிர்ணய நடவடிக்கைக்கு பிறகு தான் நடைமுறைக்கு வருகிறது. இந்த மசோதா மக்களவை மற்றும் மாநில சட்ட சபைக்கு மட்டுமே பொருந்தும்.

மேல்சபை மற்றும் மாநில சட்ட கவுன்சில்களுக்கும் நீட்டிக்கப்பட வேண்டும். எந்த ஒரு உறுதியான நடவடிக்கையின் உதவியும் இல்லாமல் சட்டமன்ற அமைப்புகளில் பெண்களுக்கு விகிதாசார பிரதிநிதித்துவம் கிடைக்கும் நாளை நான் எதிர் நோக்குகிறேன்.

இவ்வாறு அதில் குறிப்பிட்டுள்ளார்.

### பேரறிஞர் அண்ணா குறித்த பேச்சு:

# அண்ணாமலைக்கு தி.மு.க.வினர் கண்டனம் தெரிவிக்காதது ஏன்?

### முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ கேள்வி

**மதுரை, செப் 21-**

அண்ணாவை பற்றி சர்ச்சைக்குரிய வகையில் பேசிய அண்ணாமலைக்கு தி.மு.க.வினர் கண்டனம் தெரிவிக்காதது ஏன்? என்று முன்னாள் அமைச்சர் செல்லூர் கே. ராஜூ கேள்வி எழுப்பி உள்ளார்.

பேரறிஞர் அண்ணாவின் பிறந்தநாள் முன்னிட்டு மதுரை மாநகர் மாவட்ட அ.தி.மு.க. சார்பில் மேற்கு 6-ம் பகுதி செயலாளர் விளாங்குடி கே.ஆர். சித்தன் தலைமையில் விளாங்குடியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் செல்லூர் கே. ராஜூ சிறப்புரை ஆற்றினார். இதில் நிர்வாகிகள் வில்லாபுரம் ராஜா, எம் எஸ் பாண்டியன், ஆர். அண்ணாதுரை, பா குமார், சக்தி மோகன், பரவை ராஜா, வி.பி.ஆர். செல்வகுமார்,கு.திரவியம், எம்.எஸ். கே. மல்லன், சோலைராஜா, ஏ.பார்த்திபன், பைக்காரா கருப்புசாமி, முத்துவேல், மார்கெட் மார்நாடு, இளைஞரணி கண்ணன், மலைச்சாமி, பைக்காரா செழியன், கரிசல்பட்டி சேகர், முத்து முருகன், கந்தன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

இந்த கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் செல்லூர்



ராஜூ பேசியதாவது,

தமிழக அரசியல் வரலாற்றில் ஒரு மாற்றத்தை உருவாக்கியவர் அண்ணா. அண்ணா இருக்கும் வரை கலைஞரை முன்னிலைப்படுத்தவில்லை தாய் எப்படி அனைத்து பிள்ளைகளும் ஒரே மாதிரி வலப்பாரோ அதேபோன்றுதான் அண்ணா அனைவரையும் ஒன்றாக நினைத்தார்.பல தலைவர்களை உருவாக்கிய பெருமை அண்ணாவிற்கு உண்டு. புற்றுநோயால் பாதிக்கப்பட்ட காலத்திலும் ஆணுக்கு பெண் நிகர் என்ற சட்டத்தை கொண்டு வந்தார்.

கலைஞர் கருணாநிதியின் குடும்பத்தை அண்ணா தான் காப்பாற்றினார். இதை 1970-ம் ஆண்டு பேரறிஞர் அண்ணா இல்லையென்றால் எங்கள் குடும்பமே நடுத்தெருவுக்கு வந்து இருக்கும் என முரசொலி மாறனே சொல்லியிருக்கின்றார். அப்படிப்பட்ட தலைவரை கருணாநிதியின் குடும்பம் மறக்கலாமா? அண்ணாவை பற்றி ஒருவர்(அண்ணாமலை) இழிவாக பேசிய போது கூட்டணியில் இருந்த நாங்களே குரல் கொடுத்தோம். ஆனால் தி.மு.க.வினர் அதற்கு கண்டனம் ஏதும் தெரிவிக்கவில்லை. கடவுளே வந்தாலும் நாங்கள் விடமாட்டோம். .நாங்கள் எம்.ஜி.ஆரின் தொண்டர்கள்.

ஆனால் தி.மு.க.வினர் அமலாக்க துறை ரெய்டு வந்து விடுமோ என பயந்து எதுவும் பேசவில்லை. ஆர். எஸ்.பாரதி மட்டும் பேசினால் போதுமா? தி.மு.க. கொதித்து எழுந்திருக்க வேண்டாமா? அண்ணா, எம்.ஜி.ஆர்.ஜெயலலிதா இருந்த போது கூட வாரிசு அரசியல் செய்யவில்லை, இன்று தி.மு.க மு.க.ஸ்டாலின், உதயநிதி ஸ்டாலின் என வாரிசு அரசியல் செய்கின்றனர். அடுத்து இன்பநிதி என்று சொல்கிறார்கள். ஏழைகள் படும் துன்பங்கள் எல்லாம் முதல்வருக்கு தெரியவில்லை. செந்தில் பாலாஜியை நீக்கினால் ஊழல் தெரிந்து விடும் என அமைச்சரவையில் நீக்காமல் வைத்துள்ளனர் என்றார்.

# தமிழ்நாடு புத்தொழில் புத்தாக்க கொள்கை-2023

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்

**சென்னை, செப். 21-**

சென்னை தலைமைச் செயலகத்தில் நேற்று முதல்வர் மு.க. ஸ்டாலின், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை சார்பில் தமிழ்நாட்டின் புத்தொழில் சூழலை மேம்படுத்தும் வகையில் 50-க்கும் மேற்பட்ட செயல் திட்டங்களை உள்ளடக்கிய தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்கக் கொள்கை 2023-ஐ வெளியிட்டார்.

மேலும், தமிழ்நாடு பட்டியலினத்தவர், பழங்குடியினர் புத்தொழில் நிதித் திட்டத்தின் கீழ் 8 நிறுவனங்களுக்கு 10 கோடியே 85 லட்சம் ரூபாய் பங்கு நிதி வழங்குவதற்கான ஒப்புதல் ஆணைகளையும் முதல்வர் வழங்கினார்.

இப்புதிய புத்தொழில் மற்றும் புத்தாக்கக் கொள்கையானது,

தமிழகத்தில் உள்ள புத்தொழில் நிறுவனங்களின் உருவாக்கத்தை அதிகரிப்பதற்கும், அந்நிறுவனங்களின் விரிவாக்கத்திற்கு உறுதுணையாகவும் இருக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும், மாநிலத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தி குறியீடு மற்றும் சமூக மூலதனம் இரண்டிலும் அவற்றின் பங்களிப்புகளை அதிகரிப்பதற்கும் உந்து சக்தியாக இருக்கும்.

தற்போது புத்தொழில் என்பதற்கான வரையறை அம்சங்களுடன், பட்டியலினத்தவர், பழங்குடியினர் சமூகத்தினர், பிற துறைகளில் ஏற்கனவே பயன்பாட்டில் உள்ள புதுமையான மாதிரிகளை பயன்படுத்தி தங்கள் சார்ந்த சமூகங்களின் பொருளாதார மற்றும் சமூகப் பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் விதமாக ஒரு நிறுவனத்தினை உருவாக்கினால், அந்த நிறுவனமும் புத்தொழில் என்று மாநில அரசால் அங்கீகரிக்கப்படும்.

பிற துணிகர முதலீட்டு நிறுவனங்களின் வழியாக முதலீடு செய்யும் பெரு நிதியம் ஒன்று ரூ. 100 கோடி மதிப்பில் உருவாக்கப்படும். இந்த பெரு நிதியமானது வட்டார அளவில் செயல்படும் புத்தொழில் நிறுவனங்கள், ஊரக வாழ்வாதார மேம்பாடு, பசுமைத் தொழில்நுட்பம் மற்றும் பெண்களால் நடத்தப்படும் புத்தொழில் நிறுவனங்களில் முதலீடு செய்வதை நோக்கமாகக் கொண்டு செயல்படும் தனியார் துணிகர முதலீட்டு நிறுவனங்களில் முதலீடு செய்வதற்கு சிறப்புரிமை அளிக்கும்.

தொடக்க நிலையில் உள்ள புத்தொழில் நிறுவனங்களுக்கு தேவையான பொருட்கள் மற்றும் சேவைகளை பல்வேறு நிறுவனங்களிடம் இருந்து நியாயமான விலையில் பெறக் கூடிய வகையில் அத்தகைய தொகுப்பு அடங்கிய ஸ்டார்ட் அப் ஸ்மார்ட் கார்ட் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

ஒடுக்கப்பட்ட சமூகங்களை சார்ந்தவர்களால் நடத்தப்படும் புத்தொழில் நிறுவனங்களுக்கு தேவையான பயிற்சிகள், ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களை அளிக்கும் சமூக நீதி தொழில் வளர் மையம் நிறுவப்படும்.

புத்தொழில் முனைவில் ஈடுபடும் பெண்களின் பிரத்யேக தேவைகளை கருத்தில் கொண்டு பல்வேறு சிறப்பு சங்கங்களுடன் ஒரு தொழில் வளர் மையம் அமைக்கப்படும்.

மாற்றுத்திறனாளிகள் மற்றும் மூன்றாம் பாலினத்தவர்களால் உருவாக்கப்படும் புத்தொழில் நிறுவனங்களுக்கு ரூ.5 லட்சம் மானியம், டான்சீட் திட்டத்தில் சிறப்புரிமை மற்றும் இலவச தொழில் வளர் காப்பான் போன்ற வாய்ப்புகள் வழங்கப்படும்.

நிகழ்ச்சியில், அமைச்சர் தா.மோ. அன்பரசன், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை செயலாளர் (பொறுப்பு) அருண்ராய், தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் தலைமை நிர்வாக அலுவலர் சிவராஜா ராமநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

4, 5-ம் வகுப்பு அரசு பள்ளி மாணவர்களுக்கான

# காலாண்டு தேர்வு வினாத்தாள் வாட்ஸ் அப்பில் வெளியானது

**சென்னை, செப். 21-**

4, 5-ம் வகுப்பு படிக்கும் அரசுப் பள்ளி மாணவர்களுக்கான காலாண்டு வினாத்தாள் வாட்ஸ் அப்பில் வெளியாகி உள்ளது அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. தமிழகத்தில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் காலாண்டு தேர்வுகள் கடந்த 15-ம் தேதி தொடங்கி 27-ம் தேதி வரை நடக்கிறது. இந்த தேர்வுக்கான வினாத்தாள் தயாரிப்பு பணிகள் சம்பந்தப்பட்ட மாவட்ட கல்வி அதிகாரிகள் மற்றும் ஆசிரியர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டது. இந்த வினாத்தாள்களை அரசு பள்ளிகளின் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் வெளியிட்டு ஒவ்வொரு பள்ளிகளிலும் தேவைக்கேற்ப பதிவிறக்கம் செய்து கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த நிலையில் 4, 5-ம் வகுப்பு படிக்கும் அரசுப் பள்ளி மாணவர்களுக்கான காலாண்டு வினாத்தாள் வாட்ஸ் அப்பில் வெளியாகி உள்ளது.

தமிழ், ஆங்கிலம், கணிதம், அறிவியல், சமூக அறிவியல் ஆகிய 5 பாடங்களின் வினாத்தாள்களுமே வாட்ஸ்அப்பில் வெளியாகி உள்ளது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. வினாத்தாள் வாட்ஸ்அப்பில் வெளியானதால் பள்ளி ஆசிரியர்களும் கடும் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

---

# சீமான் வழக்கை 11 ஆண்டாக நிலுவையில் வைத்தது ஏன்..?

## சென்னை ஐகோர்ட் கேள்வி

**சென்னை, செப். 21-**

சீமான் வழக்கை 11 ஆண்டுகளாக நிலுவையில் வைத்தது ஏன்? என்று சென்னை ஐகோர்ட்டு கேள்வி எழுப்பியுள்ளது.

நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் மீது நடிகை விஜயலட்சுமி அளித்த புகாரில் 2011-ம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட வழக்கை ரத்து செய்ய கோரி சீமான் வழக்கு தொடர்ந்திருந்தார். இந்த வழக்கு சென்னை ஐகோர்ட்டில் நீதிபதி ஆனந்த் வெங்கடேஷ் முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது. விசாரணையின் போது சீமான் மீதான வழக்கை 11 ஆண்டுகளாக நிலுவையில் வைத்திருந்தது ஏன்? என்று நீதிபதி கேள்வி எழுப்பினார்.

மேலும் இது தொடர்பாக போலீசார் விளக்கம் அளிக்க வேண்டும் என்றும் விஜயலட்சுமியின் புகார்கள், வாபஸ் பெற்ற விவரங்களை போலீசார் தாக்கல் செய்யவேண்டும் என்றும் நீதிபதி உத்தரவிட்டார். மேலும் வழக்கு தொடர்பான ஆவணங்களை போலீசாருக்கு வழங்கவேண்டும் என்று சீமான் தரப்புக்கு நீதிபதி உத்தரவிட்டு வழக்கின் விசாரணையை வருகிற 26-ந்தேதிக்கு ஒத்திவைத்தார்.

---

# மகளிர் இட ஒதுக்கீடு மசோதாவை நிறைவேற்ற எதற்காக 8 ஆண்டுகள்?

## பார்லி.யில் ராகுல்காந்தி கேள்வி

**புதுடெல்லி, செப். 21-**

மகளிர் இட ஒதுக்கீடு மசோதாவை நிறைவேற்ற எதற்காக 8 ஆண்டுகள்? என மக்களவையில் ராகுல்காந்தி கேள்வி எழுப்பியுள்ளார்.

மகளிர் இட ஒதுக்கீடு மசோதா தொடர்பாக மக்களவையில் ராகுல்காந்தி எம்.பி., பேசியதாவது:- மகளிர் இட ஒதுக்கீடு மசோதா முழுமை பெறாமல் உள்ளது. பஞ்சாயத்துராஜ் சட்டத்தின் மூலம் மகளிருக்கு அதிக அதிகாரம் கிடைத்தது. மகளிர் இடஒதுக்கீடு மசோதாவில் ஓ.பி.சி. இட ஒதுக்கீடு வழங்காதது வருத்தமளிக்கிறது.

ஓபிசி இடஒதுக்கீட்டின் படி பாராளுமன்றம், சட்டமன்றம் நீதித்துறைகளில் கடைபிடிக்க முடிகிறதா? மகளிர் இடஒதுக்கீடு மசோதாவை நிறைவேற்ற எதற்காக 8 ஆண்டுகள்? ஒரு சில நபர்களின் கட்டுப்பாட்டில் நாடு உள்ளது என்றார். ராகுல் காந்தியின் உரைக்கு எதிர்ப்பு தெரிவித்து பாஜக எம்.பிக்கள் முழுக்கம் எழுப்பினர்.

---

புதிய பாராளுமன்றத்திற்கு

# ஜனாதிபதியை அழைக்கவில்லை: அமைச்சர் உதயநிதி குற்றச்சாட்டு

**மேலூர், செப். 21-**

புதிய பாராளுமன்றத்திற்கு நடிகைகளை அழைத்தனர், ஜனாதிபதியை அழைக்கவில்லை என்று அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் குற்றச்சாட்டியுள்ளார்.

மதுரை மாவட்டம் மேலூரில் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கும் நிகழ்ச்சி நேற்று நடந்தது. நிகழ்ச்சியில் அமைச்சரும், மாநில இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு பேசியதாவது:-

திராவிட மாடல் தி.மு.க. அரசானது மக்கள் நலனில் அக்கறை கொண்டு பல்வேறு திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. கடந்த மாதம் 20-ந்தேதி மதுரையில் ஒரு மாநாடு நடைபெற்றது. அது என்ன மாநாடு? என்று உங்களுக்கே தெரியும். இந்த மாநாட்டில் புளியோதரை நன்றாக இருந்ததா? பொங்கல் நன்றாக இருந்ததா? என்று மட்டும் தான் பேசப்பட்டது. ஆடல், பாடல் நிகழ்ச்சிகளுடன் 32 தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. ஆனால் நீட் தேர்வு ரத்து குறித்து தீர்மானம் எதுவும் ஏன் நிறைவேற்றவில்லை? ஆனால் அதே நாளில் தி.மு.க. சார்பில் மருத்துவம் படிக்க விரும்பும் மாணவர்களின் எதிர்காலம் நலன் கருதி நீட் தேர்வுக்கு எதிராக மாநில அளவில் உண்ணாவிரத போராட்டம் நடைபெற்றது.

சனாதனம் குறித்து அண்ணா கூறிய கருத்துக்களை அ.தி.மு.க.வினர் தைரியமாக மக்களிடம் சொல்வார்களா? அண்மையில் புதிய பாராளுமன்றம் திறப்பு விழா நடந்தது. இதில் தமிழகத்தில் இருந்து சாமியார்கள் அழைத்துச் செல்லப்பட்டனர். சாமியார்களுக்கும், பாராளுமன்றத்திற்கும் என்ன சம்பந்தம்? மக்கள் பிரதிநிதிகள் கொண்ட பாராளுமன்ற திறப்பு விழாவில் நாட்டின் முதல் குடிமகளாக உள்ள ஜனாதிபதி திரௌபதி முர்முவை கூட பா.ஜனதா அரசு அழைக்கவில்லை. காரணம் அவர் மலைவாழ் சமூகத்தை சேர்ந்தவர் என்பதாலும், கணவரை இழந்தவர் என்பதாலும் அழைக்கவில்லை. இது தான் பா.ஜனதாவின் சனாதன அரசு. புதிய பாராளுமன்ற விழாவில் ஜனாதிபதியை அழைக்கவில்லை. ஆனால் அதற்கு சம்பந்தமில்லாமல் இந்தி நடிகைகளை அழைத்துள்ளார்கள். வருகிற பாராளுமன்ற தேர்தலுக்கு அனைவரும் தயாராக இருக்க வேண்டும். முதல்வர் செயல்படுத்தியுள்ள மகளிர் உரிமைத்தொகை திட்டம், மாணவர்களுக்கு காலை உணவு திட்டம், புதுமைப் பெண் திட்டம் போன்றவற்றை பொதுமக்களிடம் எடுத்துக்கூற வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

---

வரி ஏய்ப்பு புகார் எதிரொலி:

# தமிழ்நாட்டில் 40 இடங்களில் வருமான வரித்துறை சோதனை

**சென்னை, செப். 21-**

வரி ஏய்ப்பு புகாரை அடுத்து தமிழகத்தில் 40-க்கும் மேற்பட்ட இடங்களில் வருமான வரித்துறை அதிகாரிகள் நேற்று (புதன்கிழமை) காலை முதல் சோதனை நடத்தினர்.

வருமான வரி ஏய்ப்பு செய்த புகாரின் அடிப்படையில் 4 தனியார் நிறுவனங்களுக்கு சொந்தமான பல்வேறு இடங்களில் சோதனை நடைபெற்றது. சென்னை துரைப்பாக்கம், பள்ளிக்கரணை, நீலாங்கரை, எண்ணூர், நாவலூர் உள்பட 30-க்கும் மேற்பட்ட இடங்களில் நூற்றுக்கணக்கான வருமான வரித்துறை அதிகாரிகள் சோதனையில் ஈடுபட்டனர்.

செங்கல்பட்டு, படூர், சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் வருமான வரித் துறை சோதனை நடத்தப்பட்டது. செங்கல்பட்டு மாவட்டம் படூர், சென்னை துரைப்பாக்கத்தில் தனியார் நிறுவனம் என சோதனை நடத்தப்பட்டது. சென்னை மற்றும் புறநகரில்30க்கும் மேற்பட்ட வாகனங்களில் சென்று வருமான வரித் துறையினர் சோதனை நடத்தினர்.

சென்னை எம்ஜிஆர் நகர் சப்தகிரி காலனியில் உள்ள தனியார் நிறுவனம், சென்னை திநகர் பார்த்தசாரதிபுரம் பகுதியில் உள்ள நிறுவனம் போன்றவற்றில் வருமானவரித்துறை அதிகாரிகள் சோதனை நடத்தினர். இதேபோல துரைப்பாக்கம், பள்ளிக்கரணை, நீலாங்கரை, நாவலூர், ஓ.எம்.ஆர்., எண்ணூர் உள்ளிட்ட இடங்களில் உள்ள நிறுவனங்களில் வருமான வரித்துறையினர் அதிரடி சோதனையில் ஈடுபட்டனர்.

---

# மகளிர் இடஒதுக்கீடு மசோதாவுக்கு அ.தி.மு.க. முழு ஆதரவு: எடப்பாடி

**புது டெல்லி, செப். 21-**

மகளிர் இடஒதுக்கீடு மசோதாவுக்கு அ.தி.மு.க ஆதரவு அளிப்பதாக அக்கட்சியின் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற சிறப்பு கூட்டத்தொடர் கடந்த 18-ம் தேதி தொடங்கியது. பழைய பாராளுமன்ற கட்டிடத்தில் இருந்து புதிய பாராளுமன்ற கட்டிடத்துக்கு பாராளுமன்ற கூட்டத்தொடர் நேற்று முன் தினம் இடம்பெயர்ந்தது. புதிய பாராளுமன்றத்தின் முதல் அலுவலாக மகளிர் இடஒதுக்கீடு மசோதா தாக்கல் செய்யப்பட்டது. மத்திய சட்ட அமைச்சர் அர்ஜுன்ராம் மேக்வால், மசோதாவை தாக்கல் செய்தார்.

மகளிர் இடஒதுக்கீடு மசோதா, 15 ஆண்டுகளுக்கு மக்களவை மற்றும் மாநில சட்டசபைகளில் மகளிருக்கு 33 சதவீத இடஒதுக்கீடு அளிக்க வகை செய்கிறது. பெண்களுக்கு ஒதுக்கப்படும் தொகுதிகளில் எஸ்.சி., எஸ்.டி. பிரிவினருக்கு உள்ஒதுக்கீடு அளிக்கப்படும்.

இந்த நிலையில், மகளிருக்கு இட ஒதுக்கீடு மசோதாவுக்கு அ.தி.மு.க. முழு ஆதரவு தெரிவித்துள்ளது.

இது குறித்து அக்கட்சியின் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில்,

பெண்களைப் பாதுகாப்பது மற்றும் அவர்களது பொருளாதாரத்தை மேம்படுத்துவது மட்டும் உண்மையான பெண் சுதந்திரம் ஆகாது. நாட்டை வழி நடத்துவதிலே பெண்களுக்கு உரிய பங்கு வழங்கப்பட வேண்டும் என்ற கருத்தை முன்வைத்து தமிழகத்தில் உள்ளாட்சி பதவிகளில் மகளிருக்கு 33 சதவீத இட ஒதுக்கீடும், பின்னர் அதையே 2016-ல் 50 சதவீத இடஒதுக்கீடாக உயர்த்தி வழங்கி பெண் இனத்திற்கே பெருமை சேர்த்தவர் அம்மா ஜெயலலிதா தான்.

அதே போல் 1991-ல் முதன்முதலாக ஆட்சி அமைத்த போது தான் 31 பெண் சட்டமன்ற உறுப்பினர்கள் அம்மாவுடன் தமிழக சட்டமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டனர்,

மகளிருக்கு இட ஒதுக்கீடு வழங்குவதில் இந்தியாவிற்கே முன்னோடியாக திகழ்ந்தது அ.தி.மு.க. மட்டும் தான் என்பதில் பெருமை கொள்கிறேன்.

அதனை முன்மாதிரியாக கொண்டு பாராளுமன்றத்தில் இந்தியா முழுவதற்கும் நிறைவேற்றப்பட்டுள்ள புதிய மகளிர் இடஒதுக்கீடு மசோதாவை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பில் வரவேற்கிறேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

---

அமைச்சர் செந்தில் பாலாஜியின் ஜாமீன் மனு:

# தள்ளுபடி செய்தது சென்னை முதன்மை செசன்சு கோர்ட்

**சென்னை, செப். 21-**

அமைச்சர் செந்தில் பாலாஜியின் ஜாமீன் மனுவை தள்ளுபடி செய்து சென்னை முதன்மை செசன்சு கோர்ட்டு உத்தரவிட்டுள்ளது.

சட்டவிரோத பண பரிமாற்ற தடை சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சென்னை புழல் சிறையில் இருந்து வரும் அமைச்சர் செந்தில் பாலாஜி ஜாமீன் கோரி சென்னை முதன்மை செசன்சு கோர்ட்டில் மனு தாக்கல் செய்தார். இந்த மனு நீதிபதி எஸ்.அல்லி முன்னிலையில் கடந்த 15-ந்தேதி விசாரணைக்கு வந்தது.

அப்போது செந்தில் பாலாஜி சார்பில் ஆஜரான மூத்த வக்கீல் கபில்சிபில், "சட்டவிரோத பண பரிமாற்றம் நடந்ததற்கு எந்த ஆதாரங்களும் இல்லை. வேலைக்காக பணம் கொடுத்ததாக கூறும் யாரும் நேரடியாக செந்தில் பாலாஜியிடம் பணத்தை கொடுக்கவில்லை. அவரின் உதவியாளர்கள் என கூறப்படும் கார்த்திகேயன், சண்முகம் ஆகியோர் மூலம் தான் பணத்தை கொடுத்ததாக கூறப்படுகிறது. அரசியல் பழிவாங்கும் நடவடிக்கையாக செந்தில் பாலாஜி மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஒருவர் மீது வழக்குப்பதிவு செய்த பின்னர் அவர் குற்றம் செய்தாரா? இல்லையா? என்பதை விசாரணை அமைப்புதான் நிரூபிக்க வேண்டும். வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் தற்போது அமலாக்கத்துறையிடம் உள்ள நிலையில் சாட்சிகளை கலைத்து விடுவார் என்பதை ஏற்க முடியாது. அனைத்து ஆவணங்களும் டிஜிட்டல் முறையில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளதால் அவற்றை திருத்த முடியாது. செந்தில் பாலாஜியால் தற்போது 30 நிமிடங்களுக்கு மேல் நிற்க முடியாது. அவர், எங்கும் தப்பித்து செல்ல மாட்டார். வேண்டுமென்றால் அவரது பாஸ்போர்ட்டை கோர்ட்டில் ஒப்படைக்கிறோம்" என்று கூறினார். அமலாக்கத்துறை சார்பில் ஆஜரான மத்திய அரசின் கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் ஏ.ஆர்.எல்.சுந்தரேசன், "சட்டவிரோத பண பரிமாற்றம் நடந்ததற்கான முகாந்திரம் உள்ளதால் தான் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. செந்தில் பாலாஜி மீதான வழக்கு அரசியல் பழிவாங்கும் நடவடிக்கை என்ற வாதத்தை சுப்ரீம் கோர்ட் ஏற்கனவே நிராகரித்துள்ளது. இந்த முறைகேடு இடைத்தரகர்கள் மூலம் நடந்துள்ளது. பணம் கொடுத்த சிலருக்கு வேலை கிடைத்துள்ளது. சிலருக்கு வேலை கிடைக்கவில்லை.

செந்தில்பாலாஜி இன்னும் அமைச்சராக உள்ளார். அவர் சக்தி வாய்ந்த நபராக இருப்பதால் சாட்சிகளை கலைக்க வாய்ப்பு உள்ளது. ஜாமீன் கோருவதற்கு உடல் நிலையை ஒரு காரணமாக கூற முடியாது. அமலாக்கத்துறை பதிவு செய்த வழக்கில் 2.5 ஆண்டுகளாக சிறையில் இருப்பவர்களும் உள்ளனர். அமலாக்கத்துறை விசாரணை முடிந்து குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுவிட்டதால் செந்தில்பாலாஜிக்கு ஜாமீன் வழங்கக்கூடாது" என்று வாதாடினார்.

இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி, செந்தில் பாலாஜி ஜாமீன் மனு மீது 20-ம் தேதி தீர்ப்பு வழங்கப்படும் என்று அறிவித்தார். இந்த நிலையில் இந்த வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது அமைச்சர் செந்தில் பாலாஜியின் ஜாமீன் மனுவை தள்ளுபடி செய்து சென்னை முதன்மை செசன்சு கோர்ட்டு நீதிபதி அல்லி உத்தரவிட்டார்.

---

கண்டலேறு அணையில் இருந்து

# பூண்டி ஏரிக்கு தண்ணீர் வரத்து 1,030 கனஅடியாக அதிகரிப்பு

**திருவள்ளூர், செப். 21-**

கண்டலேறு அணையில் இருந்து பூண்டி ஏரிக்கு தண்ணீர் வரத்து 1,030 கனஅடியாக அதிகரித்துள்ளது.

சென்னை நகர் மக்களின் குடிநீர் ஆதாரமாக பூண்டி ஏரி விளங்குகிறது. இந்த ஏரியில் மழை நீர் மற்றும் கிருஷ்ணா நதிநீர் பங்கீடு திட்டத்தின் படி ஆந்திர மாநிலம் நெல்லூர் அருகே உள்ள கண்டலேறு அணையிலிருந்து பெறப்படும் தண்ணீரை சேமித்து வைத்து தேவைப்படும் போது புழல், செம்பரம்பாக்கம், சோழவரம், ஜமீன் கொரட்டூர் ஏரிகளுக்கு திறந்து விடப்படுவது வழக்கம். கிருஷ்ணா நதிநீர் பங்கீடு திட்டத்தின் படி கடந்த மே 1-ம் தேதி கண்டலேறு அணையில் இருந்து திறந்து விடப்பட்ட தண்ணீர் 3-ம் தேதி பூண்டி ஏரிக்கு வந்தடைந்தது. அப்போதிலிருந்து தொடர்ந்து தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. இந்த நிலையில் கடந்த சில நாட்களாக பூண்டி ஏரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பலத்த மழை கொட்டி வருகிறது. இதனால் ஏரிக்கு நீர்வரத்து அதிகரித்து வருகிறது. கடந்த 18-ம் தேதி வரை வினாடிக்கு 890 கனஅடி வீதம் தண்ணீர் வந்தது. நேற்று முன்தினம் காலை முதல் நீர்வரத்து அதிகமாகியது. மழை நீர் வினாடிக்கு 650 கனஅடியாகவும், கிருஷ்ணா நீர் வினாடிக்கு 380 கனஅடியாகவும் மொத்தம் வினாடிக்கு 1.030 கனஅடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது.

பூண்டி ஏரியின் உயரம் 35 அடியாகும். இதில் 3.231 டி.எம்.சி தண்ணீர் சேமித்து வைக்கலாம். நேற்று முன்தின மாலை நிலவரப்படி ஏரியின் நீர் மட்டம் 33.22 அடியாக பதிவாகியது. 2.586 டி எம். சி. தண்ணீர் இருப்பு உள்ளது. பூண்டி ஏரியிலிருந்து புழல் ஏரிக்கு இணைப்பு கால்வாய் வழியாக வினாடிக்கு 380 கன அடி, சென்னை குடிநீர் வாரியத்திற்கு பேபி கால்வாய் வழியாக 40 கன அடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது.

---

# திருப்பதியில் கூண்டில் சிக்கிய 6-வது சிறுத்தை

**திருப்பதி, செப். 21-**

ஆந்திர மாநிலத்தில் திருமலை நடைப்பாதையில் பக்தர்களை அச்சுறுத்தி வந்த 6-வது சிறுத்தை சிக்கியுள்ளது.

திருமலை ஏழுமலையானை தரிசனம் செய்ய திருப்பதி அலிபிரியில் இருந்து திருமலைக்கு பாதயாத்திரையாக நெல்லூரைச் சேர்ந்த குடும்பத்தினருடன் சென்ற 6 வயது சிறுமியை சிறுத்தை தாக்கி உயிரிழந்தார். இதனைத் தொடர்ந்து, சிறுத்தையை பிடிப்பதற்காக திருமலை திருப்பதி தேவஸ்தானம் மற்றும் வனத்துறை இணைந்து பல்வேறு இடங்களில் கூண்டுகள் வைத்தனர். இந்த நிலையில் திருப்பதி அலிபிரி நடைப்பாதையில் பக்தர்களை அச்சுறுத்தி வந்த 5வது சிறுத்தை சிக்கிய நிலையில், (செப்.20) நேற்று ஆறாவது சிறுத்தை பிடிப்பட்டுள்ளது. நரசிம்ம சுவாமி கோயில் பகுதியில் வைக்கப்பட்ட கூண்டில் சிறுத்தை சிக்கியது. பிடிப்பட்ட சிறுத்தை உயிரியல் பூங்காவிற்கு கொண்டு செல்வதாக வனத்துறையினர் தெரிவித்தனர். மேலும் பக்தர்கள் கவனமுடன் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

---

சென்னை உள்ளிட்ட 3 மாவட்டங்களில்

# விரைவில் உயரும் ஆட்டோ கட்டணம்?

**சென்னை, செப். 21-**

இன்னும் மூன்று மாதங்களில், சென்னை மாநகராட்சி மற்றும் அதனை சுற்றியுள்ள மூன்று மாவட்டங்களிலும் ஆட்டோ கட்டணம் உயர்த்தப்படவிருக்கிறது.

இந்த தகவல், தமிழக அரசு, சென்னை உயர் நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கு விசாரணையின்போது அளித்த பதிலில் தெரிய வந்துள்ளது.

தமிழக அரசின், கட்டண மறுசீரமைப்பு ஆணையம் அளிக்கும் பரிந்துரையின்படி, சென்னை உள்ளிட்ட மாவட்டங்களில் ஆட்டோ கட்டணம் உயர்த்தப்படவிருப்பதாக, சென்னை உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி சஞ்சய் வி. கங்கபுர்வாலா மற்றும் நீதிபதி பி.டி. ஆதிகேசவலு ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு தமிழக அரசு சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு, எரிபொருள் விலை மற்றும் போக்குவரத்து செலவுகளை கருத்தில் கொண்டு, இந்த ஆணையமானது, முதல் 1.8 கிலோ மீட்டருக்கு ரூ.40ஐ கட்டணமாகவும், அதன்பிறகு, ஒவ்வொரு கிலோ மீட்டருக்கும் ரூ.18 என்பதையும் நிர்ணயம் செய்துகொள்ளலாம் என்று பரிந்துரைத்திருந்தது. தற்போது, அடிப்படைக் கட்டணமாக அதாவது 1.8 கிலோ மீட்டருக்கு ரூ.25 நிர்ணயிக்கப்பட்டு, அதன்பிறகு ஒவ்வொரு கிலோ மீட்டருக்கும் ரூ.12 ஐ கட்டணமாக வசூலித்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது.

ஆனால், அந்த வேளையில், ஆட்டோ ஓட்டுநர்கள் சங்கங்கள், தமிழக அரசின் இந்த பரிந்துரையை நிராகரித்ததோடு, ஓலா, ரேப்பிடோ போன்று தமிழக அரசே ஒரு செயலியை அறிமுகம் செய்து, அதில் ஆட்டோ கட்டணம் மட்டுமில்லாமல், காத்திருக்கும் நேரம், போக்குவரத்து நெரிசல் உள்ளிட்ட அனைத்தையும் கருத்தில் கொண்டு கட்டணம் நிர்ணயிக்க வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தனர்.

---

# நாகையில் இருந்து இலங்கைக்கு அக்டோபரில் பயணிகள் கப்பல்

## அமைச்சர் எ.வ.வேலு தகவல்

**நாகை, செப். 21-**

நாகப்பட்டினம் துறைமுகத்தில் இருந்து இலங்கைக்கு அக்டோபர் முதல் வாரத்தில் பயணிகள் விரைவு கப்பலை இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக அமைச்சர் எ.வ. வேலு தெரிவித்தார்.

நாகப்பட்டினம் துறைமுகத்தில் நடைபெற்று வரும் பணிகளை நேற்று அமைச்சர் எ.வ. வேலு ஆய்வு செய்தார். அப்போது அவர் கூறியதாவது:- நாகப்பட்டினம் துறைமுகத்தில் இருந்து, இலங்கையில் உள்ள காங்கேசதுறைமுகத்திற்கு 150 பயணிகள் பயணிக்கும் விரைவு பயணியர் கப்பல் இயக்குவதற்கான நடவடிக்கைகள் தமிழ்நாடு கடல்சார் வாரியம், ஒன்றிய அரசின் துறைமுகங்கள், கப்பல் மற்றும் நீர்வழிப் போக்குவரத்து துறை மற்றும் வெளியுறவுத் துறை மூலம் பணிகளை மேற்கொண்டு வருகிறது. மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள இந்திய கப்பல் போக்குவரத்து கழகம் விரைவு பயணியர் கப்பல் போக்குவரத்தை நாகப்பட்டினம் துறைமுகத்தில் இருந்து இயக்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது. இந்த பயணியர் கப்பல் பயணம், வெளிநாட்டு பயணம் என்பதால் ஒன்றிய அரசின் சி.ஐ.எஸ்.எப். பாதுகாப்பு அதிகாரிகள் மூலம் கையாள மத்திய அரசிடம் வலியுறுத்தப்பட்டு உள்ளது. நாகப்பட்டினம் துறைமுகத்தில் அனைத்து வசதிகளும் ஏற்படுத்தப்பட்டு அக்டோபர் மாதம் முதல் வாரத்தில், தமிழக அரசுடன் இணைந்து பயணிகள் கப்பல் போக்குவரத்தினைத் துவக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. இலங்கை மக்கள் குறிப்பாக, தமிழ் மக்கள் தங்களின் கல்வி, மருத்துவம், உணவுப் பொருட்கள், வணிகம், ஆன்மீகம் மற்றும் சுற்றுலா ஆகிய தேவைகளுக்கு மிகவும் பயனுள்ளதாக அமைவதுடன், தமிழகத்தில் உள்ள டெல்டா மாவட்டங்கள் குறிப்பாக ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்ட பகுதிகள், கலாச்சாரப் பகிர்வு, பொருளாதாரம் ஆகியவற்றில் மிக ப்பெரிய வளர்ச்சியைப் பெறும். இவ்வாறு அவர் கூறினார்.

---

### தலைவர்கள் சொல்வதை படிங்க....



நீண்டகாலமாக நடத்தப்படாமல் இருக்கும் மக்கள் தொகை மற்றும் சாதிவாரி கணக்கெடுப்புக்கான பணிகளை உடனடியாக தொடங்குவதோடு, இடஒதுக்கீடு மசோதாவின் மூலம் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயப் பெண்களுக்கான பிரதிநிதித்துவம் போதுமான அளவு இருப்பதை மத்திய அரசு உறுதி செய்ய வேண்டும்.

- டி.டி.வி. தினகரன்



கூட்டணி குறித்து தேசிய தலைமை தகுந்த நேரத்தில் சரியான முடிவு எடுக்கும். கூட்டணிக்காக மற்றொரு கட்சியின் கொள்கையை ஏற்றுக்கொள்ள முடியாது. தமிழகத்தில் தற்போது கூட்டணிக்குள் இருக்கும் சலசலப்பு சரி செய்யப்படும். தமிழக பாஜக தலைவர் அண்ணாமலையின் என் மண், என் மக்கள் யாத்திரை எல்லா இடத்திலும் சிறப்பாக நடக்கிறது.

- வானதி சீனிவாசன்



பெண்களுக்கு சட்டமன்றம், பாராளுமன்றத்தில் 33 சதவீத இடஒதுக்கீடு வழங்க பிரதமர் மோடி முடிவெடுத்துள்ளார். இது பெண்கள் பொது வாழ்க்கை க்கு வர உதவியாக இருக்கும். இது வரவேற்கதக்கது. இந்த இடஒதுக்கீடு ந டைமுறைக்கு வரும் போது, புதுவை மாநிலத்தில் 11 பெண் எம்.எல்.ஏக்களு ம், தமிழகத்தில் 77 பெண் எம்.எல்.ஏ.க்களும், 13 பெண் எம்.பி.க்களும் இருப்பர்.

- தமிழிசை



பெண்களுக்கான இடஒதுக்கீடு மசோதா கண்துடைப்பு, மகளிர் இடஒதுக்கீடு மசோதா மக்களவை, மாநிலங்களவையில் நிறைவேறுவது கடினம். 2029-ம் ஆண்டு தேர்தலின்போதும், இதே 33 சதவீத இட ஒதுக்கீடு மசோதா தாக்கல் செய்யப்பட வாய்ப்பு உள்ளது. ஒரே நாடு, ஒரே தேர்தல் என்பது பாஜகவின் அரசியல் தந்திரமாகும். இது அரசியல் சாசனத்திற்கு எதிரான ஒன்று.

- பிருந்தா காரத்




மதுரை துவாரகா மகாலில் நடந்த நிகழ்வில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மகளிர் உரிமை தொகைக்கான வங்கி பரிவர்த்தனை அட்டைகளை நேற்று பயனாளிகளுக்கு வழங்கினார். அருகில் அமைச்சர் பி. மூர்த்தி, சிறப்பு திட்ட செயலாக்கத் துறை அரசு செயலாளர் தாரேஸ் அகமது, கலெக்டர் சங்கீதா, மேயர் இந்திராணி பொன்வசந்த், ஆணையாளர் பிரவீன்குமார், எம்.எல்.ஏ.க்கள் தளபதி, வெங்கடேசன், திட்ட இயக்குனர் மோனிகா ராணா, துணை மேயர் நாகராஜன் ஆகியோர் உள்ளனர்.

# தேனியில் நாளை விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்: கலெக்டர் ஷஜீவனா தகவல்

**தேனி, செப். 21-**

தேனி மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நாளை (22.09.2023 ) காலை 11.00 மணியளவில் அன்று நடைபெற உள்ளது என மாவட்ட கலெக்டர் ஷஜீவனா தெரிவித்துள்ளார்.

தேனி மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வருகின்ற 22.09.2023 வெள்ளிக்கிழமை அன்று கலெக்டர்.ஷஜீவனா தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெறவுள்ளது. எனவே, தேனி மாவட்டத்தைச் சார்ந்த விவசாயிகள், விவசாய சங்க பிரதிநிதிகள் மற்றும் அந்தந்த வட்டாரத்தில் உள்ள வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறைகள் சம்பந்தமான திட்டங்கள் மற்றும் குறைகளை விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் கலந்து கொண்டு தெரிவிக்கலாம். மேலும், தங்களது கோரிக்கைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடம் மனுக்களாக வழங்கலாம்.

விவசாயிகளிடமிருந்து பெறப்படும் மனுக்கள், சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அனுப்பி, அதன் மீது தனி கவனம் செலுத்தி உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு, அடுத்து நடைபெறும் கூட்டத்தில் விவசாயிகளிடம் நேரிடையாக தெரிவிக்கப்படும். எனவே, விவசாயிகள் மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகள், இக்கூட்டத்தில் கலந்து கொள்ளலாம். மேலும், இக்கூட்டத்தில் கிஷான் கடன் அட்டை வழங்கிட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதால் விருப்பமுள்ள விவசாயிகள் தங்களது, ஆதார், வங்கி கணக்கு நகல், அடங்கல் மற்றும் சிட்டா ஆகிய ஆவணங்களோடு வருகை புரிந்து விண்ணப்பங்களை பெற்று, பூர்த்தி செய்து கொடுத்து பயன்பெறலாம் என மாவட்ட கலெக்டர் ஷஜீவனா தெரிவித்துள்ளார்.

### ஆணையாளர் மீனா தலைமையில்

# ஒட்டன்சத்திரம் நகராட்சியில் டெங்கு விழிப்புணர்வு ஆலோசனை கூட்டம்



**ஒட்டன்சத்திரம்.செப்.21**

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் நகராட்சி பொது சுகாதாரதுறையின் சார்பில் விஷ காய்ச்சல்களில் இருந்து பொதுமக்களை காக்கும் பொருட்டு ஒட்டன்சத்திரம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள சுமார் 20க்கும் மேற்பட்ட அரசு மற்றும் தனியார் மருத்துவமனை, கிளினிக்குகள், மருத்துவ ஆய்வகங்கள் இவைகளில் பணியாற்றும் பணியாளர்கள், செவிலியர்கள் மருத்துவர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்ட டெங்கு உள்ளிட்ட வைரஸ் காய்ச்சல் முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்த ஆலோசனை கூட்டம் நகராட்சி ஆணையாளர் மீனா தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பேசிய ஆணையாளர் மீனா மருத்துவமனை மற்றும் அதனை சுற்றியுள்ள வளாகங்களை தூய்மையாக வைக்க வேண்டும் மருத்துவமனை பகுதிகளில் கொசுக்கள் உற்பத்தியாகாத வண்ணம் கழிவு நீர் தேங்கியிருந்தால் அதனை உடனே அப்புறப்படுத்த வேண்டும் என்றும் மருத்துவமனைக்கு காய்ச்சல் சிகிச்சைக்காக வரும் நோயாளிகளின் விவரங்கள் முழுவதுமாக பதிவு செய்யப்பட்டு அது குறித்த தகவல்களை உடனடியாக நகராட்சி நிர்வாகத்திற்கு தெரியப்படுத்த வேண்டும் என தெரிவித்தார்.

மேலும் மருத்துவமனை மற்றும் கிளினிக்குகள் ஆய்வகங்கள் உள்ளிட்டவைகளிலிருந்து வெளியேறும் மருத்துவ கழிவுகளை பொது இடங்களில் கொட்டவோ தீ வைக்கவோ அனுமதி இல்லை எனவும் மருந்து கழிவுகளை குப்பைகளில் கொட்டினால் மருத்துவமனையின் உரிமம் ரத்து செய்யப்படும் எனவும் ஆணையாளர் எச்சரிக்கை விடுத்துள்ளார். கூட்டத்தில் துப்புரவு ஆய்வாளர் ராஜ் மோகன் உள்ளிட்ட நகராட்சி பணியாளர்கள் அலுவலர்கள் கலந்து கொண்டனர்

# திருமங்கலம் பாஸ்ட்புட் கடைகளில் அதிகாரிகள் அதிரடி சோதனை

## 60 கிலோ ஷவர்மா சிக்கன் பறிமுதல்

**திருமங்கலம்.செப்.21.**

திருமங்கலம் நகரிலுள்ள பாஸ்ட்புட் கடைகளில் உணவு பாதுகாப்புத்துறை மற்றும் நகராட்சி சுகாதார அதிகாரிகள் இணைந்து நடத்திய அதிரடி சோதனையில் மறு பயன்பாட்டிற்காக பிரீசரில் வைக்கப்பட்டிருந்த 60கிலோ ஷவர்மா சிக்கன் பறிமுதல் செய்யப்பட்டது.

நாமக்கல் பரமத்தி சாலையிலுள்ள தனியார் உணவகத்தில் ஷவர்மா சிக்கன் சாப்பிட்ட 14வயது சிறுமி உயிரிழந்ததை தொடர்ந்து தமிழகம் முழுவதிலும் உள்ள பாஸ்ட்புட் கடைகளில் சோதனை நடத்திட தமிழக சுகாதாரத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் உத்தரவிட்டார்.இதனை தொடர்ந்து தமிழகம் முழுவதிலும் உணவு பாதுகாப்புதுறை அதிகாரிகள் மற்றும் உள்ளாட்சி அதிகாரிகள் இணைந்து பாஸ்ட்புட் மற்றும் ஷவர்மா சிக்கன் விற்பனை செய்திடும் கடைகளில் சோதனை நடத்தி கெட்டுப்போன சிக்கன் வகைகளை பறிமுதல் செய்து வருகின்றனர்.இதன் ஒருபகுதியாக மதுரை மாவட்டம் திருமங்கலம் நகரிலுள்ள பாஸ்ட்புட் கடைகளில் நேற்று உணவு பாதுகாப்புத்துறை அதிகாரி சந்திரசேகரன் மற்றும் திருமங்கலம் நகராட்சி சுகாதார ஆய்வாளர் சிக்கந்தர் மற்றும் நகராட்சி பணியாளர்கள் திடீரென்று சோதனை நடத்தினார்கள். அப்போது 9க்கும் மேற்பட்ட கடைகளில் ஆய்வு மேற்கொண்டதில் 60கிலோ ஷவர்மா சிக்கனை மறுபயன்பாட்டிற்கு பிரீசரில் வைத்திருந்தது கண்டுபிடிக்கபட்டு பறிமுதல் செய்யப்பட்டது. பின்னர் அவைகள் நகராட்சி குப்பை கிடங்கில் போடப்பட்டு அழிக்கப்பட்டது.இது தொடர்பாக மறுபயன்பாட்டிற்காக ஷவர்மா சிக்கனை பிரீசரில் வைத்திருந்த பாஸ்ட்புட் கடைக்காரர்களிடமிருந்து ரூ.5ஆயிரம் அபராதம் விதிக்கப்பட்டது. மேலும் கெட்டுப்போன கிரில் சிக்கன் மற்றும் ஷவர்மா சிக்கனை மறுபயன்பாடு செய்திடும் பாஸ்ட்புட் கடைக்காரர்கள் மீது உணவு பாதுகாப்பு சட்டத்தின் கீழ் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

மழைத்துளி
மண்ணின்
உயிர்துளி

### பழனி முருகன் கோவிலில்

# அக். 1-முதல் பக்தர்களின் செல்போன், கேமராவை பாதுகாக்க கட்டணம் வசூல்



**பழனி, செப். 21-**

அறுபடை வீடுகளில் 3-ம் படை வீடான பழனி முருகன் கோவிலுக்கு வரும் பக்தர்கள் பலர் தங்கள் செல்போன் மூலம் கருவறையில் உள்ள மூலவரை படம் பிடித்து சமூக வலைதளங்களில் வெளியிட்டு வந்தனர். மேலும் அனுமதியின்றி கேமராக்கள் கொண்டு வந்து படம் பிடிக்கும் சம்பவங்களும் நடந்து வருகிறது. இதனை தவிர்க்கும் வகையில் வருகிற அக்டோபர் 1-ம் தேதி முதல் பக்தர்கள் கொண்டு வரும் செல்போன் மற்றும் கேமராக்களை அடிவாரத்தில் உள்ள பாதுகாப்பு அறையில் வைக்க கட்டணம் வசூலிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து கோவில் ஆணையர் மாரிமுத்து வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

பழனி கோவிலுக்கு புகைப்படம், வீடியோ எடுக்கும் கருவிகள், செல்போன் கொண்டு வருவதை தவிர்க்க வேண்டும். இத்தகைய சாதனங்களை படிப்பாதை, வின்ச், ரோப்கார் நிலையங்களில் அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு மையங்களில் வைக்க வேண்டும். இதற்கு கட்டணமாக செல்போனுக்கு ரூ.5 வசூலிக்கப்படும். தரிசனம் முடிந்த பிறகு அதனை பக்தர்கள் பெற்றுக்கொள்ளலாம். இதற்கான வசதிகள் கோவில் நிர்வாகம் சார்பில் செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

# அருப்புக்கோட்டையில் மாநில தேனீ வளர்ப்பு பயிற்சி துவக்க விழா

**அருப்புக்கோட்டை, செப். 21-**

அருப்புக்கோட்டை வேளாண் அறிவியல் நிலையத்தில் விருதுநகர் தேனி வாரியம், புதுடெல்லி இணைந்து நடத்தும் மாநில அளவிலான தேனீ வளர்ப்பு பயிற்சி துவக்க விழா நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு திட்ட ஒருங்கிணைப்பாளர் செல்வி ரமேஷ் வரவேற்று பேசினார். கலெக்டரின் நேர்முக உதவியாளர் நாச்சியார் அம்மாள் தேனி வளர்ப்பின் முக்கியத்துவத்தை விளக்கிக் கூறினார். தோட்டக்கலை துணை இயக்குனர் கார்த்திக் தேனி வளர்ப்பில் அரசுத்துறை திட்டங்கள் குறித்து பேசினார். நிகழ்ச்சியில் பேராசிரியர் உஷாராணி தேனிகளின் வகைகளை பற்றி விளக்கி கூறினார். பேராசிரியர் வேணுதேவன் பயிற்சி மகசூல் அதிகரிப்பு பற்றி விளக்கம் அளித்தார். பேராசிரியர் நல்ல குரும்பன் தேனிலிருந்து தயாரிக்கப்படும் மதிப்பு கூட்டப்பட்ட பொருள்கள் பற்றி விளக்கிக் கூறினார். நிகழ்ச்சியில் தேனி வளர்ப்போர், வேளாண்மை அறிவியல் நிலைய அலுவலர்கள், விவசாயிகள் கலந்து கொண்டனர்.

# நத்தம் அருகே தோட்டத்து வீட்டில் இருந்த நல்லபாம்பு



**நத்தம், செப். 21-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே கோமனாம்பட்டியை சேர்ந்தவர் ஆனந்தன் (46). இவரது தோட்டத்து வீட்டில் உள்ளே நல்லபாம்பு ஒன்று இருப்பதைக் கண்டு நத்தம் தீயணைப்பு துறையினருக்கு தகவல் தெரிவித்தார்.அதன்பேரில் சம்பவ இடத்திற்கு சென்ற நத்தம் தீயணைப்பு நிலைய அலுவலர் லெட்சுமணன் உள்ளிட்ட வீரர்கள் தோட்டத்து வீட்டில் உள்ளே பதுங்கியிருந்த நல்லபாம்பை லாவகமாக கருவி மூலம் பிடித்தனர். பின்னர் அந்த பாம்பு வனத்துறையினரிடம் ஒப்படைக்கபட்டு வனப்பகுதிக்குள் விடப்பட்டது. இதைப் போலவே நத்தம் அருகே பாப்பாபட்டியில் மனோஜ் (40). என்பவரது வீட்டில் உள்ளே இருந்த நல்லபாம்பு தீயணைப்பு துறையினரால் பிடிக்கபட்டது.

# கமுதியில் கீரந்தை முத்துராமலிங்க தேவரின் நினைவு தினம் அனுசரிப்பு




**கமுதி செப் :21**

அகில இந்திய பார்வர்ட் பிளாக் கட்சியின் முன்னாள் மாநில செயலாளர் மற்றும் மீனவர் அணி தலைவர் ப.கீரந்தை எஸ்.கே.முத்துராமலிங்கத்தேவர் அவர்களின் 31 நினைவு தினம் அனுசரிக்கப்பட்டது, முக்குலத்தோர் முன்னேற்ற சங்கத்தின் தலைவரும், பார்வர்ட் பிளாக் கட்சியின் மாவட்ட அமைப்பு செயலாளர் ப.கீரந்தை மு.வீரப்பெருமாள் அவர்கள் புகைப்படத்திற்க்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்,நிகழ்ச்சியில் குடுத்தினர்கள், கட்சியின் நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டார்கள்.

### மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் தலைமையில் இன்று

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்கும் முன்னாள் சபாநாயகர் சேடபட்டி முத்தையா நினைவேந்தல் - பொற்கிழி வழங்கும் விழா



**திருமங்கலம், செப். 21-**

தி.மு.க இளைஞரணி செயலாளர்,தமிழக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்றிடும் முன்னாள் சபாநாயகர் சேடபட்டி இரா.முத்தையாவின் முதலாமாண்டு நினைவேந்தல் நிகழ்ச்சி,தி.மு.க மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கிடும் விழா மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் தலைமையில் முத்தப்பன்பட்டியில் இன்று நடைபெறுகிறது.இவ்விழாவில் மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர், அமைச்சர் பி.மூர்த்தி,மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி ஆகியோர் முன்னிலை வகித்து சிறப்பிக்கின்றனர்.

மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க சார்பில்,மாவட்ட கழகச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் ஏற்பாட்டின் பேரில் திருமங்கலம் அருகே முத்தப்பன்பட்டியிலுள்ள சேடபட்டியார் திடலில் முன்னாள் சபாநாயகர் சேடபட்டி இரா.முத்தையாவின் முதலாமாண்டு நினைவேந்தல் நிகழ்ச்சி மற்றும் தி.மு.க மூத்த முன்னோடிகள் 1500 பேருக்கு தலா ரூ.10ஆயிரம் பொற்கிழி மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கிடும் விழா இன்று காலை வெகு சிறப்பாக நடைபெறுகிறது. இந்த விழா மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் தலைமையிலும் மாவட்டச் செயலாளர்கள் அமைச்சர் பி.மூர்த்தி,கோ.தளபதி எம்.எல்.ஏ.,ஆகியோர் முன்னிலையிலும் சிறப்புடன் நடைபெறுகிறது.பல்லாயிரக் கணக்கானோர் பங்கேற்றிடும் இவ்விழாவில் தி.மு.க இளைஞரணி செயலாளரும், தமிழக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு தி.மு.க மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கி கௌரவித்தும்,நினைவேந்தல் நிகழ்ச்சியில் கலந்து கொண்டும் எழுச்சி உரையாற்றுகிறார்.இதனைதொடர்ந்து கழக முன்னோடிகளுக்கும்,கட்சியினருக்கும் அறுசுவை உணவு வழங்கப்படுகிறது

இந்நிகழ்வுகளில் அமைச்சர் பெருமக்கள்,நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், கழக மாநில,மாவட்ட நிர்வாகிகள்,தலைமை செயற்குழு, பொதுக்குழுஉறுப்பினர்கள், ஒன்றிய,நகர,பகுதி, வட்டகழக,பேரூர் கழகசெயலாளர்கள், நிர்வாகிகள்,அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள்,துணை அமைப்பாளர்கள்,கழக முன்னோடிகள், கழக உடன்பிறப்புகள் என அனைவரும் அலைகடலென திரண்டு வந்து அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு பங்கேற்றிடும் விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்திடுமாறு மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் அன்புடன் அழைப்பு விடுத்துள்ளார்.

### தீபாவளி பண்டிகையை முன்னிட்டு

# கோ-ஆப்டெக்ஸ் சிறப்பு தள்ளுபடி விற்பனையை துவக்கி வைத்தார் விருதுநகர் கலெக்டர் ஜெயசீலன்



**விருதுநகர், செப். 21-**

விருதுநகர் தெப்பம் பஜாரில் அமைந்துள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தில் நேற்று தீபாவளி பண்டிகையை முன்னிட்டு 30 சதவீத சிறப்பு தள்ளுபடி முதல் விற்பனையினை கலெக்டர் ஜெயசீலன் குத்துவிளக்கேற்றி, முதல் விற்பனையை தொடங்கி வைத்தார்.

பின்னர் மாவட்ட கலெக்டர் தெரிவித்ததாவது:

கோ-ஆப்டெக்ஸ் என அனைவராலும் அழைக்கப்படும் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம், 1935-ம் ஆண்டு துவக்கப்பட்டு தொடர்ந்து 88 ஆண்டுகளாக தமிழ்நாட்டில் உள்ள கைத்தறி நெசவாளர்களுக்கும், வாடிக்கையாளர்களுக்கும் சிறப்பான முறையில் சேவை புரிந்து வருகிறது. கைத்தறி ரகங்களின் விற்பனையை அதிகரிக்க தமிழக அரசு ஆண்டுதோறும் பண்டிகை காலங்களில் 30 சதவீத சிறப்பு தள்ளுபடி வழங்கி வருகிறது.

எதிர்வரும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு பட்டு, பருத்தி கைத்தறி ரகங்களுக்கு 30 சதவீதம் சிறப்பு தள்ளுபடி வழங்கப்படுகிறது. வாடிக்கையாளர்களைக் கவரும் வண்ணம் பலவித வடிவமைப்புகளில் மென்பட்டு சேலைகள், பருத்திசேலைகள், படுக்கை விரிப்புகள், தலையணை உறைகள் மற்றும் நவீன காலத்திற்கு உகந்தமான இரகங்கள் தீபாவளி பண்டிகைக்காக தருவிக்கப்பட்டுள்ளது.

காஞ்சிபுரம் பட்டு சேலைகள், சேலம் பட்டு சேலைகள், திருப்புவனம் பட்டு சேலைகள் மற்றும் கோயம்புத்தூர் மென்பட்டு சேலைகள் விற்பனைக்கு தயாராக உள்ளது. மேலும், பாரம்பரிய ரகங்களை புதுப்பிக்கும் விதமாக கண்டாங்கி சேலைகள், கைத்தறி சுங்கிடி சேலைகள், காஞ்சி காட்டன் சேலைகள், கோவை கோரா காட்டன் சேலைகள், சேலம் காட்டன் சேலைகள், பரமக்குடி காட்டன் சேலைகள், திண்டுக்கல் காட்டன் சேலைகள் மற்றும் அருப்புக்கோட்டை காட்டன் சேலைகள் ஏராளமாக தருவிக்கப்பட்டுள்ளது.

மேலும் நவீன யுக ஆடவர்களை கவரும் விதமாக லினன்/பருத்தி சட்டைகள், லுங்கிகள் மற்றும் வேட்டிகள் உள்ளன. மேலும் மகளிருக்காக சுடிதார் இரகங்கள், நைட்டிகள் மற்றும்; குர்தீஸ்கள் கண்ணைக் கவரும் வண்ணங்களில் வாடிக்கையாளர்களுக்காக தருவிக்கப்பட்டுள்ளது.

கோ-ஆப்டெக்ஸ் ஜவுளி இரகங்களை மின் வணிக வலைதளமான www.cooptex.com என்ற இணையதளத்தின் மூலமும் பெற்றுக் கொள்ளலாம். விருதுநகர் விற்பனை நிலையத்தில் சென்ற ஆண்டு தீபாவளி விற்பனை ரூ.34.80 இலட்சங்கள் ஆகும். தீபாவளி 2023 விற்பனை குறியீடாக ரூ.65.00 இலட்சங்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளது என தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில், மேலாளர்கள், விற்பனையாளர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# ஒட்டன்சத்திரத்தில் பாரம்பரிய உணவு திருவிழா



**ஒட்டன்சத்திரம், செப். 21-**

.திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் கிறிஸ்த்துவ பொறியியல் மற்றும் தொழில்நுட்ப கல்லூரியில் மாவட்ட ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் சார்பில் மாவட்ட அளவிலான பாரம்பரிய உணவுத் திருவிழா கல்லூரி முதல்வர் பரிமளா கீதா தலைமையில் நடைபெற்றது.

விழாவில் குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர் போர்சியா ரூபி வரவேற்புரையாற்றினார். மாவட்ட ஆசிரியர் பயிற்சி பள்ளி முதல்வர் இளங்கோவன் பாரம்பரிய உணவுகளின் நன்மைகள் கொடுத்து எடுத்துரைத்தார். மாவட்ட குழந்தை பாதுகாப்பு நல அலுவலர் சிவக்குமார், மாவட்ட சமூக நல அலுவலர் பூங்கொடி பாரம்பரிய உணவுகளின் பற்றி செயல்முறை விளக்கம் அளித்தனர். உணவுத் திருவிழா போட்டியில்வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. முடிவில் குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர் அமுதகலாநன்றி கூறினார்



விழுப்புரத்தில் விநாயகர் சதுர்த்தி விழா முடிவடைந்த நிலையில் விநாயகர் சிலைகளை நீரில் கரைப்பதற்காக வாகனங்களில் பாதுகாப்புடன் எடுத்துச் செல்லப்பட்டது.

# செஞ்சி தொகுதியில் விடுபட்ட மகளிருக்கு கலைஞர் உரிமைத்தொகை பெறுவதற்கு சிறப்பு முகாம்

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் ஆய்வு



**செஞ்சி செப் -21**

அண்ணா பிறந்தநாளான செப்டம்பர் 15ஆம் தேதி 1 கோடியே 6 லட்சத்து 50 ஆயிரம் மகளிர்களுக்கு கலைஞர் மகளிர் உரிமைத்தொகை வழங்கும் நிகழ்ச்சியை காஞ்சிபுரத்தில் முதலமைச்சர் தொடங்கி வைத்தார்.

இதைத்தொடர்ந்து அந்தந்த மாவட்டங்களில் அமைச்சர் பெருமக்கள் மற்றும் சட்டமன்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் நிகழ்ச்சியில் பங்கேற்று கலைஞர் மகளிர் உரிமை தொகை திட்டம் பெறுவதற்கான வங்கி பரிவர்த்தன அட்டையை வழங்கினர்.

இத்திட்டத்தில் விடுபட்ட மகளிர்கள் அந்தந்த பகுதியில் நடைபெறும் சிறப்பு முகாம்களில் பங்கேற்று மீண்டும் விண்ணப்பிக்கலாம் என்றும் அதில் தகுதியானவர்களுக்கு மீண்டும் கலைஞர் உரிமைத் தொகை வழங்கப்படும் என தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்கள் அறிவித்திருந்தார்.

அந்த வகையில் செஞ்சி தொகுதியில்பதிவு செய்து விடுபட்டவர்களுக்கு செஞ்சி வட்டாட்சியர் அலுவலகத்தில் சிறப்பு முகாம் நடைபெற்று வருகிறது.

இந்த சிறப்பு முகாமை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்.அப்போது ஏராளமான மகளிர்கள் அனைத்து சான்றுகளும் சரியாக வழங்கியும் தங்களது பெயர்கள் விடுபட்டுள்ளதாக அமைச்சர் செஞ்சி மஸ்தான் இடம் புகார் தெரிவித்தனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முறையாக பதிவு செய்தஅனைத்து மகளிர்களுக்கும் அவர்களின் இல்லத்திற்கு அரசு அதிகாரிகள் நேரில் சென்று ஆய்வு செய்து தகுதியான அனைத்து குடும்பங்களுக்கும் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை வழங்குவதற்கு முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளதாக அமைச்சர் செஞ்சி மஸ்தான் தெரிவித்தார்

ஆய்வின்போது செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார்,வட்டாட்சியர் கார்த்திகேயன்,மாவட்ட விவசாய அணி தலைவர் அஞ்சாஞ்சேரிகணேசன் வட்ட வழங்கல் அலுவலர் மலர்விழி, ஆகியோர் உடன் இருந்தனர்.

# தனது தொகுதியில் வருவாய் சார்ந்த எந்த பணிகளும் நடைபெறவில்லை

## பாஜக எம்எல்ஏ சட்டசபை வாயிலில் தர்ணா

**புதுச்சேரி செப். 21,**

தனது தொகுதியில் வருவாய்த்துறை சார்ந்த எந்த பணிகளும் நடைபெறவில்லை என கூறி ஆளுங்கட்சி பாஜக எம்எல்ஏ கல்யாணசுந்தரம் சட்டப்பேரவை படிக்கட்டில் அமர்ந்து தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டதால் பரபரப்பு ஏற்பட்டது புதுவை பாஜக எம்.எல்.ஏ. கல்யாணசுந்தரம் தனது தொகுதியில் இலவச மனைப்பட்டா வழங்குவது உள்ளிட்ட வருவாய்த்துறை சார்ந்த பணிகள் நடைபெறவில்லை என குற்றம்சாட்டியிருந்தார்.

இதற்காக சட்டசபை கூடும் நாளில் தர்ணா போராட்டம் நடத்தப்போவதாகவும் அறிவித்து சபாநாயகர் செல்வத்திடம் கடிதம் அளித்திருந்தார்.

இந்நிலையில் புதுவை சட்டசபை இன்று காலை கூடியது. காலை 9 மணிக்கு சட்டசபைக்கு வந்த பாஜக எம்.எல்.ஏ. கல்யாணசுந்தரம் சட்டசபையின் படிக்கட்டில் அமர்ந்து தர்ணா போராட்டத்தை தொடங்கினார்.இதனையடுத்து சுயேச்சை எம்.எல்.ஏ. அங்காளன் சட்டசபைக்கு வந்தார். அவரும் கல்யாண சுந்தரத்துக்கு ஆதரவாக படிக்கட்டில் அமர்ந்து தர்ணாவில் ஈடுபட்டார். தனது தொகுதியிலும் இதே பிரச்சினை நிலவுவதாக குற்றம்சாட்டினார்.

இதனையடுத்து சட்டப்பேரவைக்கு வந்த சபாநாயகர் செல்வம், தர்ணாவில் ஈடுபட்ட எம்.எல்.ஏ.களை சமரசம் செய்து, தனது அறைக்கு கையோடு அழைத்துச்சென்றார். இதனால் எம்.எல்.ஏ.கள் தர்ணா அரை மணி நேரத்தில் முடிவடைந்தது. முன்னதாக செய்தியாளர்களிடம் பேசிய கல்யாணசுந்தரம் எம்எல்ஏ,

வருவாய்த்துறை சார்ந்த எந்த பணிகளும் எனது தொகுதியில் நடைபெறவில்லை. வருவாய்த்துறை செயலரான மாவட்ட ஆட்சியரை சந்திக்க முயற்சித்தால் அவர் எம்.எல்.ஏ.க்களை சந்திப்பது இல்லை. அவர் முதலமைச்சர் அருகிலேயே அமர்ந்து கொள்கிறார். எம்.எல்.ஏ.க்கள் கூறும் பணிகளை கலெக்டர் செய்வதில்லை என குற்றம்சாட்டினார்.

# ஈச்சூர் கிராமத்தில் பனைவிதைகள் நடும் விழா: ஒன்றிய,பேரூராட்சி தலைவர்கள் தொடங்கி வைத்தனர்



**செஞ்சி செப் -21**

விழுப்புரம் மாவட்டம் வல்லம் ஒன்றியம் மேல் சேவூர் ஊராட்சிக்குஉட்பட்ட ஈச்சூர்கிராமத்தில் உள்ளஏரிக்கரை பகுதியில்முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞரின் நூற்றாண்டு பிறந்தநாள் விழாவைமுன்னிட்டு பனை விதிகள் நடும் நிகழ்ச்சி நடைபெற்றது.நிகழ்ச்சிக்கு வல்லம் ஒன்றிய பெருந்தலைவர் அமுதா ரவிக்குமார் தலைமை தாங்கினார். ஊராட்சி மன்ற தலைவர் ராஜகோபால் முன்னிலை வகித்தார் .ஒன்றிய கவுன்சிலர் கம்சலாமாரிமுத்து அனைவரையும் வரவேற்றார் .

நிகழ்ச்சியில் செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான்கலந்து கொண்டு 1000 பனை விதைகள் நடும் நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் வல்லம் தெற்கு ஒன்றிய செயலாளர் துரை மாவட்ட கவுன்சிலர் சசிகலா மோகனசுந்தரம் மாவட்ட பிரதிநிதி கண்ணன், ஊராட்சி மன்ற துணைத் தலைவர் பரிதா அன்வர், வார்டு உறுப்பினர் பாபு கிளை கழக செயலாளர்கள்பாஸ்கர், கோவிந்தராஜ், வேலு,சுப்பிரமணி, தகவல் தொழில்நுட்ப அணி பிரகாஷ் ஏரி நீர் பாசன சங்க தலைவர் ராஜ்குமார் உள்ளிட்டோர் கலந்துகொண்டார். மேல் சேவூர் ஒன்றிய குழு உறுப்பினர் கம்சலா மாரிமுத்து ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர் பிரபு நன்றி கூறினார்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
No. 61, Cuddalore Main Road, Mudaliyarpet, Puducherry-4.
Ph:0413-2280613
E-Mail: pondyedi@thinaboomi.com
RNI.Regn No.Pontam 2002/7660
EDITOR: S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

மக்கள் பிரச்சனைகளை பேச வாய்ப்பு அளிக்காததால்

# புதுச்சேரி சட்டசபை கூட்டத்தில் இருந்து திமுக-காங்கிரஸ் எம்எல்ஏக்கள் வெளிநடப்பு



**புதுச்சேரி செப் 21,**

புதுச்சேரி சட்டப்பேரவை நேற்று நேற்று காலை 9.30 மணிக்கு கூடியது. இரங்கல் குறிப்புக்கு பிறகு எதிர்கட்சி எம்எல்ஏக்கள் எதிர்கட்சித்தலைவர் இரா. சிவா தலைமையில் ஒட்டுமொத்தமாக எழுந்து பேசினர். எதிர்கட்சி த்தலைவர் இரா. சிவா, மகளிருக்கு ரூ.ஆயிரம் வழங்கும் திட்டத்தை அனைத்து தொகுதிகளிலும் செயல்படுத்தாதது, தொகுதியளவில் நடைபெற வேண்டிய பணிகள், மக்கள் நல பணிகளை செயல்படுத்தாதது ஆகியவை குறித்த சபையில் விவாதிக்க வேண்டும். அனைத்து பிரச்சனைகளுக்கும் தலைமை செயலாளரும், அதிகாரிகளும்தான் காரணம் என கூறுகின்றனர். அது குறித்தும் விவாதிக்க வேண்டும் என கூறினார். இதைத்தொடர்ந்து திமுக எம்எல்ஏக்களும், காங்கிரஸ் எம்எல்ஏக்களும் இதே கருத்தை வலியுறுத்தினர். அப்போது சபாநாயகர் குறுக்கிட்டு, அலுவல் முடிந்தவுடன் பேச அனுமதிப்பதாகவும், உறுப்பினர்கள் அனைவரும் அமரும்படியும் கேட்டார். ஆனால் தொடர்ந்து எதிர்க்கட்சி எம்எல்ஏக்கள் பேசினர். இதனால் சபையில் கூச்சல், குழப்பம் நிலவியது. 9.45 மணியளவில், சட்டசபையில் மக்கள் பிரச்சினைகளை பேச அனுமதிக்காததை கண்டித்து வெளிநடப்பு செய்வதாக்கூறி எதிர்க்கட்சித்தலைவர் இரா. சிவா வெளிநடப்பு செய்தார். அவருடன் திமுக எம்எல்ஏக்கள் ஏ.எச்.எம். நாஜிம், வி. அனிபால்கென்னடி, இரா. செந்தில்குமார், எல். சம்பத், நாகதியாகராஜன், காங்கிரஸ் எம்எல்ஏக்கள் மு. வைத்தியநாதன், ரமேஷ்பரம்பத் ஆகியோரும் வெளிநடப்பு செய்தனர்.

இதையடுத்து சபாநாயகர் செல்வம், சந்திராயன், ஜி20 மாநாடு வெற்றி ஆகியவற்றுக்கு பிரதமருக்கு நன்றியும், பாராட்டும் தெரிவித்து பேசினார். அப்போது மீண்டும் எதிர்க்கட்சி எம்எல்ஏக்கள் இரா. சிவா தலைமையில் சபைக்கு வந்தனர். அவர்கள் சபாநாயகர் இருக்கை முன்பு நின்று, அலுவல் பட்டியலில் இல்லாததை எப்படி பேசலாம்? என கேள்வி எழுப்பினர். அதற்கு சபாநாயகர், நன்றி அறிவிப்பு அலுவல் பட்டியலில் இடம்பெறாது என தெரிவித்தார். இதனால் சபாநாயகரிடம் சிறிதுநேரம் வாக்குவாதத்தில் ஈடுபட்ட எதிர்க்கட்சி எம்எல்ஏக்கள் மீண்டும் சபையிலிருந்து வெளிநடப்பு செய்தனர்.

சர்வதேச இளைஞர் தினவிழாவை முன்னிட்டு

# மாரத்தான் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு பரிசுத்தொகை,பாராட்டுச்சான்றிதழ்கள்

## விழுப்புரம் மாவட்ட கலெக்டர் சி.பழனி வழங்கினார்



**விழுப்புரம் செப் 21,**

விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டு துறையின் சார்பில் சர்வதேச இளைஞர் தினவிழா - 2023 முன்னிட்டு நடைபெற்ற மாரத்தான் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவியர்களுக்கு பரிசுத்தொகை மற்றும் பாராட்டுச்சான்றிதழ்களை கலெக்டர் டாக்டர் சி.பழனி வழங்கினார்.

கலெக்டர் தெரிவிக்கையில் தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு துறையின் சார்பில் விழுப்புரம் மாவட்ட கல்லூரிகளில் செயல்பட்டு வரும் செஞ்சுருள் சங்க மாணவமாணவிகள் மூலம் எய்ட்ஸ் எச்.ஐ.வி காசநோய் இரத்ததானம் மற்றும் போதை ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதன் ஒரு பகுதியாக “சர்வதேச இளைஞர் தின விழா-2023” முன்னிட்டு 5 கி.மீ “மாரத்தான்” ஓட்டத்தை 30.08.2023 அன்று விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள கல்லூரிகளில் உள்ள 700 மாணவ மாணவிகள் பங்கேற்றனர். இம்மாரத்தான் போட்டியில் ஆண்கள் பிரிவில் முதல் மூன்று இடங்களை பிடித்தவர்களுக்கும் பெண்கள் பிரிவில் முதல் மூன்று இடங்களை பிடித்தவர்களுக்கும் ஆறுதல் பரிசாக 7 நபர்கள் என மொத்தம் 13 நபர்களுக்கு பரிசுத்தொகை மற்றும் பாராட்டுச்சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.

தொடர்ந்து பல்வேறு சாலை விபத்துகளில் காயமுற்றவர்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 12 நபர்களுக்கு ரூ.9.00 - இலட்சத்திற்கான காசோலை வழங்கப்பட்டது என கலெக்டர் டாக்டர் சி.பழனி தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மாவட்ட திட்ட மேலாளர் கவிதா திருமலை மாவட்ட விளையாட்டு அலுவலர் வேல்முருகன் தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) விஸ்வநாதன் மேற்பார்வையாளர் பிரேமா உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

விழுப்புரம் மாவட்டத்தில்

# முத்தாம்பாளையம் ஏரியினை தூர்வாரி படகு குழாம் அமைத்திட அலுவலர்களுக்கு கலெக்டர் சி.பழனி ஆலோசனை



**விழுப்புரம் செப் 21,**

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி வட்டம் முத்தாம்பாளையம் ஏரியினை கலெக்டர் டாக்டர் சி.பழனி பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

கலெக்டர் தெரிவிக்கையில் விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி வட்டம் முத்தாம்பாளையம் ஏரி 145 ஏக்கர் ஏரி பரப்பளவில் உள்ளது. முத்தாம்பாளையம் ஏரியினை தூர்வாரிடவும் மழைக் கா லத் திற் குள் ளாகவே ஏரிக்கு நீர் வரும் வழித்தட பகுதிகளில் சீரமைப்பு பணிகள் மற்றும் தூர்வாரும் பணிகளை மேற்கொண்டு ஏரியில் அதிகப்படியான நீர் நிரம்புவதற்கு வழிவகை ஏற்படுத்திட வேண்டும். மேலும் ஏரியில் பெரியவர்களுக்கான நடைபாதை அமைத்திடவும் சிறியவர்கள் விளையாடும் வகையில் பொழுதுபோக்கு அம்சங்களுடன் கூடிய விளையாட்டு உபகரணங்கள் ஏற்படுத்திட வேண்டும். மேலும் சுற்றுலாத்தளமாக உருவாக்கிடும் வகையில் ஏரியில் படகு குழாம் அமைத்திடுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது என கலெக்டர் டாக்டர் சி.பழனி தெரிவித்தார்.

ஆய்வின்போது விக்கிரவாண்டி வருவாய் வட்டாட்சியர் ஆதிசக்திசிவகுமரிமன்னன் மாவட்ட சுற்றுலா அலுவலர் ஜனார்த்தனன் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.



புதுச்சேரி முருங்கப்பாக்கம் பாஸ்கரன் பிறந்த நாளையொட்டி அதிமுக பொருளாளர் ரவி பாண்டுரங்கன் நேரில் சென்று சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்தார். அருகில் அரியாங்குப்பம் தொகுதி அதிமுக செயலாளர் ராஜா மற்றும் பலர் உள்ளனர்.

23 நிமிடத்தில் முடிந்தது:

# புதுச்சேரி சட்டசபை கூட்டம்: காலவரையின்றி ஒத்திவைப்பு: சபாநாயகர் அறிவிப்பு

**புதுச்சேரி செப். 21,**

புதுச்சேரி சட்டப்பேரவைக் கூட்டம் தொடங்கிய அரை மணிநேரத்தில் முடிந்த நிலையில்,சபையை காலவரையின்றி ஒத்தி வைப்பதாக சபாநாயகர் செல்வம் அறிவித்தார் அதன் விபரம் ஆவது புதுவை சட்டசபை கூட்டம் இன்று காலை 9.30 மணிக்கு கூடும் என அறிவிக்கப்பட்டிருந்தது.ஆனால் பா.ஜனதா எம்.எல்.ஏ. கல்யாணசுந்தரம் மைய மண்டப படிக்கட்டில் அமர்ந்து தர்ணாவில் ஈடுபட்டார். அவரை சபாநாயகர் செல்வம் சமாதானப்படுத்தி தன் அறைக்கு அழைத்து சென்றார். இதனால் சட்டசபை நிகழ்வுகள் தொடங்குவதில் கால தாமதம் ஏற்பட்டது.

9.37 மணிக்கு சட்டசபை நிகழ்வுகள் தொடங்கியது. முதல் நிகழ்வாக இரங்கல் குறிப்பை சபாநாயகர் வாசித்தார்.

இதையடுத்து தேசிய ஜனநாயக கூட்டணி அரசு ஜி20 மாநாடை வெற்றிகரமாக நடத்தியுள்ளதற்கும் சந்திரயான் விண்கலத்தை வெற்றிகரமாக விண்ணில் ஏவியுள்ளது ஆகியவற்றுக்கு சபாநாயகர் ஏம்பலம் செல்வம் நன்றியும், பாராட்டும் தெரிவித்தார். தொடர்ந்து சட்டசபையில் தணிக்கை துறை தலைவரின் அறிக்கையை முதல்-அமைச்சர் ரங்கசாமி சமர்ப்பித்தார்.இந்த மசோதாக்கள் குரல் ஓட்டெடுப்பு மூலம் நிறைவேற்றப்பட்டது. தொடர்ந்து காலை 10 மணிக்கு சபையை காலவரையின்றி ஒத்தி வைப்பதாக சபாநாயகர் செல்வம் அறிவித்தார். இதனால் புதுவை சட்டசபை 23 நிமிடத்தில் முடிவடைந்தது.

# சாராயம் கடத்திய 3 பேருக்கு 2 ஆண்டுகள் சிறை: விழுப்புரம் கோர்ட் தீர்ப்பு

**விழுப்புரம் செப் 21,**

விழுப்புரம் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவில் கடந்த 2016 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் ஆசூர் கிராமம் புதுப்பாளையம் ரோட்டில் விழுப்புரம் மதுவிலக்கு போலீசார் வாகன தணிக்கையில் ஈடுபட்ட போது நான்கு சக்கர வாகனத்தில் 500 லிட்டர் பாண்டிச்சேரி சாராயம் கடத்தி வந்த நபர்களை கைது செய்த மதுவிலக்கு வழக்கு விழுப்புரம் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண் II-ல் இன்று விசாரணைக்கு வந்தது.

இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட குற்றவாளி புதுச்சேரி மாநிலம் ஆண்டியார் பாளையத்தைச்சேர்ந்த நடராஜன் மகன் ராஜா வயது (36) மற்றும் விழுப்புரம் மாவட்டம் மாசூர் கிராமத்தைச் சேர்ந்த பெருமாள் மகன் கார்த்திபன் வயது (23) அதே ஊரைச் சேர்ந்த ஏழுமலை மகன் மாரி (எ) அய்யனார் 34ஆகியோர்களுக்கு குற்றவியல் நீதித்துறை நடுவர் அகிலா இரண்டு ஆண்டு கடுங்காவல் சிறை தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

ரூ 1.20 கோடி செலவில்

# மகேந்திரவாடி பள்ளி கட்டிட அடிக்கல் விழா

## எம்எல்ஏ, மாவட்ட கவுன்சிலர் பங்கேற்பு



**அரக்கோணம் செப் 21**

இராணிப்பேட்டை மாவட்டம் நெமிலி ஒன்றியத்தில் தினமும் ஒரு திட்ட பணிகள் என நாள்தோறும் அரசு திட்ட பணிகள் நிறைவேற்ற பட்டு வருகிறது. அந்த அடிப்படையில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் காந்தி வழிகாட்டுதலின் பேரில் நேற்றும் மகேந்திரவாடி ஊராட்சியில் நபார்டு திட்டத்தின் கீழ் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு ரூ 1.20 கோடி செலவில் ஆறு வகுப்பறை கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது. இந்த விழாவிற்கு ஊராட்சி மன்ற தலைவர் பி.பரணிகுமார் தலைமை தாங்கினார்.

சிறப்பு அழைப்பாளராக சோளிங்கர் தொகுதி எம்எல்ஏ ஏ.எம்.முனிரத்தினம் மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினரும் மாவட்ட திட்ட குழு உறுப்பினருமான சுந்தரம்மாள் பெருமாள் ஆகியோர் கலந்து கொண்டு அடிக்கல் நாட்டினார்கள் இதில் ஒன்றிய செயலாளர்கள் எஸ்.ஜி.சி.பெருமாள், ரவிச்சந்திரன் மகேந்திரவாடி ஊராட்சி மன்ற துணை தலைவர் முருகேசன் பள்ளி தலைமை ஆசிரியர் ரவி பொது பணி துறை அலுவலர் வேல்முருகன் கட்சி அவை தலைவர் அ.சீனிவாசன், துணை செயலாளர்கள் சரளா முரளி, செல்வம் மற்றும் மகேந்திரவாடி கழக முன்னோடிகள் மற்றும் பொது மக்கள் வளரும் விழாவில் கலந்துக் கொண்டனர்.

# அரக்கோணம் தொகுதி அதிமுக சார்பில் அண்ணா பிறந்த நாள் பொதுக்கூட்டம்



**அரக்கோணம் செப் 20**

அரக்கோணம் நகரில் அரக்கோணம் சட்ட மன்றத் தொகுதி அதிமுக சார்பில்

அண்ணா பிறந்த நாள் பொதுக் கூட்டம் நேற்று இரவு நடைபெற்றது. இந்த கூட்டத்திற்கு பொது குழு உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி தலைமை தாங்கினார். ஒன்றிய செயலாளர் ஏஎல்.விஜயன் வரவேற்றார்.

ஷியாம் குமார், செல்வம், அன்பரசு, எம்பி. சோமசுந்தரம் மற்றும் பொன் செல்வம் ஆகியோர் துவக்கவுரை ஆற்றினார்கள் பத்மநாபன், பூபதி, பூஷணம் தாமு, கந்தன், ஜிகே. பாபுஜி, சரவணன், அலெக்சாண்டர், டில்லி பாபு, ஜானகிராமன் மற்றும் பூர்ணிமா ஆகியோர் முன்னணி லை வகித்தனர். அமைப்பு சாரா ஓட்டுனர் அணி செயலாளர் சங்கதாஸ், மாவட்ட செயலாளர் சு. ரவி எம்எல்ஏ மற்றும் நகர செயலாளர் பாண்டுரங்கன் ஆகியோர் சிறப்பு உரையாற்றினர்கள்.

மேலும் வக்கீல் ஆறுமுகம், அப்பு, ஆகியோரும் பேசினர். மாவட்ட தொழிற்நுட்ப பிரிவு ஹரிஹரன், அரிகலபாடி ஒன்றிய கவுன்சிலர் வினோத் குமார், பூண்டி பிரகாஷ், கீதா சுந்தர், மீனா ரகுபதி, நரேஷ்காந்த், அம்மனூர் கேஆர்.சீனிவாசன், தக்கோலம் பேரூராட்சி நகரக் கழக துணைச் செயலாளரும், வக்கீலுமான க.சுதாகர் எம்சி, அம்மா பேரவை நகர செயலாளர் ஸ்ரீதர் எம்ஜிஆர் மன்ற செயலாளர் பூபாலன் அம்மா பேரவை தலைவர் ஜலநாதன் எம்சி, பஞ்சாயத்து தலைவர்கள் மோசூர் சம்பத், கேசாவரம் நவாப், கர்ணா பிரபாகரன், ஜான் விக்டர், சுகந்தி வினோதினி, ஆர்.ராஜசேகர் உள்ளிட்ட திரளானவர்கள் கலந்து கொண்டனர்.

CHANGE OF NAME
I, SIVACOUMAR, Son of Codandapany aged about 45 years, R/o. No. 72, Mariamman Koil Street, Navarkulam, Lawspet, Puducherry -605008, declare that my name shall henceforth be known as SIVACOUMARE.
C. SIVACOUMARE



சென்னை வடகிழக்கு மாவட்ட திமுக அயலக அணி மாவட்ட துணை அமைப்பாளராக நியமிக்கப்பட்ட திருவொற்றியூர் எம்.தயானந்த ராஜ் என்கிற கார்த்திக் சட்டப்பேரவை உறுப்பினர் கே.பி. சங்கர் மற்றும் நிர்வாகிகளை சந்தித்து வாழ்த்து பெற்றார். அவருடன் திமுக நிர்வாகிகள் உள்ளனர்.



திருவொற்றியூர் கிழக்கு பகுதி 10 வது வட்ட அதிமுக சார்பில் பூத் கமிட்டி அமைப்பதற்கான ஆலோசனை கூட்டம்பகுதிசெயலாளர் அஜாக்ஸ்எஸ்.பரமசிவம்தலைமையில்நடைபெற்றது. கூட்டத்திற்கான ஏற்பாடுகளை வட்டசெயலாளர் அரிமா டி.எஸ்.பிரகாஷ் செய்திருந்தார். கூட்டத்தில் வட்ட நிர்வாகிகள் எஸ்.சூரியபாபு எஸ்.சுதன்பி.ராஜேந்திரன் விநாயகம் பலராமன்ஆர்.மைதிலி எஸ்.தனசேகர் ஜெ.ஆனந்த் ஆர்.ரகு ஜி.கற்பகம் கலந்து கொண்டனர்.

# சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வடகிழக்குப் பருவமழைக்கு முன்னதாக சாலைப் பணிகளை தரமாகவும், விரைவாகவும் முடித்திட வேண்டும்: அமைச்சர் கே.என்.நேரு அலுவலர்களுக்கு அறிவுறுத்தல்



**சென்னை,செப்.21**

சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் சாலைப் பணிகள், மழைநீர் வடிகால் பணிகள், வளர்ச்சித் திட்டப்பணிகள் மற்றும் வடகிழக்குப் பருவமழை முன்னேற்பாட்டுப் பணிகள் குறித்து சென்னை மாநகராட்சி, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், சென்னை மெட்ரோ இரயில், மின்துறை, நெடுஞ்சாலைத்துறை உள்ளிட்ட தொடர்புடைய துறை அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம் அமைச்சர் திரு. கே.என்.நேரு தலைமையில் (20.09.2023) ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் நடைபெற்றது.

**ஆய்வு கூட்டம்**

இக்கூட்டத்தில் நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் பேசும்போது தெரிவித்ததாவது: தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையில் வடகிழக்குப் பருவமழை முன்னேற்பாட்டு பணிகளை மேற்கொள்ள அனைத்து துறை அலுவலர்களுடனான வெள்ளத்தடுப்பு மேலாண்மை தொடர்பாக ஆய்வுக் கூட்டம் நேற்று நடைபெற்றது.

பொதுமக்களுக்கு இடையூறு மற்றும் பாதிப்பு ஏற்படாத வகையில் வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள துறை வாரியான அலுவலர்களுக்கு அறிவுரைகளை வழங்கியுள்ளார்கள். மேலும், ஒவ்வொரு துறைகளிலும் என்னென்ன பணிகள் நடைபெற்று வருகின்றன எனக் கேட்டறிந்து, வடகிழக்குப் பருவமழையை முன்னிட்டு ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை விரைந்து முடித்து, சாலை வெட்டுக்கள் மற்றும் சேதமடைந்த சாலைகளை உடனடியாக சீர்செய்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அவரகளின் அறிவுரையின்படி, பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைபெற்று வரும் சாலைப்பணிகளை தரமாகவும், மக்களுக்கு இடையூறின்றியும் வடகிழக்குப் பருவமழை தொடங்குவதற்கு முன்னதாக விரைந்து முடித்திட வேண்டும். சாலைகளில் இதரப் பணிகளுக்காக மேற்கொள்ளப்பட்டுள்ள சாலை வெட்டுக்களை உடனடியாக சீர்செய்திட வேண்டும். சென்னை மெட்ரோ இரயில், சென்னை குடிநீர் வாரியம், மின்துறை, நெடுஞ்சாலைத் துறை உள்ளிட்ட தொடர்புடைய துறைகளுடன் ஒருங்கிணைந்து பணிகளை தாமதமின்றி முடித்திட வேண்டும். பணிகள் மேற்கொள்ளும் இடங்களில் மக்களுக்கு உரிய பாதுகாப்பு தடுப்புகளை செய்திட வேண்டும். நடைபெற்று வரும் மழைநீர் வடிகால் பணிகளை இம்மாத இறுதிக்குள் முடித்திட வேண்டும். மழைநீர் வடிகால் இணைப்பு இல்லாத இடங்களில் உடனடியாக இணைப்புகளை ஏற்படுத்தும் பணிகளை செய்து முடிக்க வேண்டும். மழைநீர் வடிகால், ஆறுகள், கால்வாய்கள் உள்ளிட்ட அனைத்து நீர் நிலைகளிலும் தூர்வாரும் பணிகளை தொடர்ந்து மேற்கொண்டு முடித்திட வேண்டும்.

வடகிழக்குப் பருவமழையை எதிர்நோக்கி பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்வதுடன் அனைத்து அலுவலர்களும் விழிப்புணர்வுடன் பணியாற்றிட வேண்டும். சுரங்கப்பாதைகளிலும், இதர எப்பகுதிகளிலும் மழைநீர் தேங்காமல் இருப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். நிவாரண மையங்களை தயார்நிலையில் வைத்திட வேண்டும் என அமைச்சர் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

**பேட்டி**

செய்தியாளர் சந்திப்பில் நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது: தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வடகிழக்குப் பருவமழை முன்னேற்பாட்டு பணிகளை மேற்கொள்வது தொடர்பாக அனைத்து துறை அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டத்தினை நேற்று நடத்தினார்கள். பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மழைநீர் வடிகால் பணிகள், மழைநீர் வடிகால் இணைப்பு பணிகள் மற்றும் சாலைப் பணிகள் எவ்வாறு நடைபெற்று வருகிறது எனவும், என்ன நிலையில் உள்ளது என்பது பற்றியும் கேட்டறிந்தார். மேலும், சென்னை குடிநீர் வாரியம் சார்பில் எந்தெந்த இடங்களில் குழாய்கள் போடப்பட்டுள்ளது. அங்கு சாலைகள் எவ்வாறு உள்ளது என்பது பற்றியும் சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் விரிவாகக் கேட்டறிந்து அறிவுரைகளை வழங்கியுள்ளார்கள்.

அதனைத் தொடர்ந்து, இன்று நடைபெற்ற கூட்டத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி, நெடுஞ்சாலைத்துறை, மின்துறை, சென்னை குடிநீர் வாரியம், சென்னை மெட்ரோ ஆகிய துறைகளை சார்ந்த அலுவலர்களிடம் எந்தெந்த இடங்களில் சாலைகள் பழுதடைந்துள்ளது எனக் கேட்டறிந்து, அவற்றிற்கான காரணங்களை ஆராய்ந்து ஒரு வார காலத்திற்குள் அவற்றை சரி செய்ய ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது.

மின்துறை மற்றும் சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில் புதிய பணிகள் எதுவும் மேற்கொள்ளாமல், ஏற்கனவே தொடங்கப்பட்ட பணிகளை விரைந்து முடித்திடவும், சேதமடைந்த சாலைகளை உடனடியாக சீர் செய்திடவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள மழைநீர் வடிகால்களில் இணைப்புகள் இல்லாத இடங்களில் மழைநீர் வடிகால் இணைப்புகள் மேற்கொள்ள பணிகள் நடைபெற்று வருகிறது. இந்தப் பணிகளை விரைவில் முடிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. இணைப்பு பணிகள் முடிவுறாத இடங்களில் பாதுகாப்பு கருதி தடுப்புகள் அமைக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றார்.

இந்நிகழ்வுகளில், மேயர் ஆர்.பிரியா துணை மேயர்மு.மகேஷ்குமார் ஆணையாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், கூடுதல் தலைமைச் செயலாளர்/தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்ராஜேஷ் லக்கானி, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், கூடுதல் காவல் ஆணையாளர் (போக்குவரத்து) .ஆர்.சுதாகர், மாநகராட்சி கூடுதல் ஆணையாளர்கள்சங்கர்லால் குமாவத்,, (சுகாதாரம்) ஆர்.லலிதா, (வருவாய் (ம) நிதி) இணை ஆணையாளர் (பணிகள்) டாக்டர் ஜி.எஸ்.சமீரன், , வட்டார துணை ஆணையாளர்கள்.எம். சிவகுரு பிரபாகரன், (வடக்கு) எஸ்.ஷேக் அப்துல் ரஹ்மான், (மத்தியம்) .எம்.பி.அமித், (தெற்கு) மாமன்ற ஆளுங்கட்சித் தலைவர், நிலைக்குழுத் தலைவர்கள், மண்டலக்குழுத் தலைவர்கள் மற்றும் தொடர்புடைய துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# வெள்ளியூர் கிராமத்தில் பிரதமர் நரேந்திர மோடி பிறந்தநாளை முன்னிட்டு மாபெரும் மருத்துவ முகாம்

**ஊத்துக்கோட்டை, செப்-21.**



திருவள்ளூர் மாவட்டம் வெங்கல் அடுத்த வெள்ளியூர் கிராமத்தில் திருவள்ளூர் மேற்கு மாவட்டம் திருவள்ளூர் வடக்கு ஒன்றிய பாஜக சார்பாக பாரத பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் 73-வது பிறந்தநாளை முன்னிட்டு ஒன்றிய தலைவர் பி.ஜி.எஸ். ஹரி சதீஷ் தலைமையில் மாபெரும் மருத்துவ முகாம் மற்றும் அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் மாவட்ட தலைவர் ராஜசிம்ம மகேந்திரா என்கின்ற அஸ்வின் குமார் மற்றும் மருத்துவ பிரிவு மாவட்ட தலைவர் லோகேஷ் பிரபு ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு மருத்துவ முகாம் மற்றும் அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சியை துவக்கி வைத்தனர்.

இந்த நிகழ்ச்சியில் ஒன்றிய பொதுச் செயலாளர்கள் ஏழுமலை, பார்த்தசாரதி, ஒன்றிய பொருளாளர் கார்த்திகேயன், பொருளாதார பிரிவு மாவட்ட செயலாளர் நரேஷ், மருத்துவ பிரிவு ஒன்றிய தலைவர் தமிழ் குமரன், ஒன்றிய செயலாளர் குணசேகர், பட்டியலணி ஒன்றிய தலைவர் பிரபாகர், தகவல் தொழில்நுட்ப பிரிவு ஒன்றிய தலைவர் நரேஷ், விவசாய அணி ஒன்றிய தலைவர் அருண் பிரகாஷ், விளையாட்டு பிரிவு மேம்பாட்டு பிரிவு ஒன்றிய தலைவர் சர்மா உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர். இந்த மருத்துவ முகாமில் சுமார் 300க்கும் மேற்பட்ட பொது மக்கள் கலந்து கொண்டு மருத்துவ சிகிச்சை பெற்றனர். மேலும் இந்த மருத்துவ முகாமை சிறப்பாக ஏற்பாடு செய்த ஏ.சி.எஸ் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மக்கள் தொடர்பு அலுவலர் கோவிந்தராஜன் மற்றும் மருத்துவர் குழுவினருக்கு திருவள்ளூர் வடக்கு ஒன்றிய பாஜக சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து சுமார் 500க்கும் மேற்பட்ட அன்னதானம் வழங்கப்பட்டது.

# மழைகாலம் தொடங்குவதால் தொற்று நோய் பரவாமல் இருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்: கவுன்சிலர்கள் கோரிக்கை

**சென்னை செப் 21-**



மழைகாலம் தொடங்குவதால் தொற்று நோய் பரவாமல் இருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வளசரவாக்கம் மண்டல குழு கூட்டத்தில் கவுன்சிலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.வளசரவாக்கம் மண்டல அலுவலகத்தில் மாமன்ற உறுப்பினர்கள் வார்டு குழு கூட்டம் மண்டல குழு தலைவர் நொளம்பூர் வே.ராஜன் தலைமையில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம்.க.கணபதி பங்கேற்று கவுன்சிலர்களின் குறைகளை கேட்டறிந்தார்.

இந்த கூட்டத்தில் மாமன்ற உறுப்பினர்கள் பேசியதாவது:-144 வது வார்டு திமுக கவுன்சிலர் எம்.இ.ஸ்டாலின் பேசும் போது :-எனது வார்டுக்கு உட்பட்ட மதுரவாயல் பிள்ளையார் கோயில் தெரு, பெருமாள் கோயில் தெரு, உள்ளிட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை மற்றும் குடிநீர் இணைப்பு இல்லை , ஆக உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறினார்.மேலும் எம்.இ ஸ்டாலின் கூறுவகையில் ஐந்து நாட்களுக்கு ஒரு முறை லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்படுவதால் , பிளாஸ்டிக் தொட்டிகளில் தண்ணீர் சேமித்து வைத்து பயன்படுத்திவருகின்றனர்.இதனால் டெங்கு காய்ச்சல் அதிகரித்துள்ளது. இதற்கு தீர்வுகாண வேண்டும் என்றார்.

இதே போல் 147 வது திமுக கவுன்சிலர் ரமணி மாதவன் பேசியதாவது:- மதுரவாயல் கிருஷ்ணா நகர் உள்ளிட்ட பகுதிகளில் அடிக்கடி மின் தடை ஏற்பட்டு வருகிறது. இதனால் அங்கு வசிக்கும் மக்கள் அவதிக்கு உள்ளகியுள்ளனர்.மின் வாரிய அதிகாரிகள் போனை எடுப்பத்தில்லை .

மேலும் சிதமடைந்த மின் கம்பங்களை மழை காலத்திற்கு முன்பு சீர்மைக்க அமைக்க வேண்டும் . உடனடியாக மின் வாரிய ஊழியர்கள் , அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தால் பெரும் விபத்தைக்களை தவிர்க்கலாம் .என்றார் அவர்.

இதில் 148 வது வார்டு அமமுக கவுன்சிலர் வி.வி.கிரிதரன் பேசியதாவது:-எனது 148 வது வார்டுக்கு உட்பட்ட அனைத்து பகுதிகளிலும் குடிநீர் மற்றும் பாதள சாக்கடை பணிகள் முடிந்த சாலைகளில் தார் சாலை அமைக்க சீர் செய்யப்படும் போது ,குடிநீர், கழிவு நீர் குழாய் சேதமடைந்த விடுகிறது.இதனால் பணிகள் கிடப்பில் போட வேண்டிய நிலை உள்ளது.காமராஜர் சாலை , மேட்டுகுப்பம், பிரதான சாலை உள்ளிட்ட பகுதிக்களில் புதிய மின் கம்பங்கள் போட பட்டு வருகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

இதே போல் 152 வது வார்டு திமுக கவுன்சிலர் பாரதி பேசியதாவது:-எனது வார்டில் மெட்ரோ ரயில் பணியால் அடிக்கடி குடிநீர் குழாய் சேதமடைந்து வருகிறது.இதனால் மாதத்தில் பல நாட்களில் வீடுகளுக்கு குடிநீர் கிடைப்பதில்லை உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் .

அத்துடன் பாதாள சாக்கடைகள் சேதமடைந்த காரணத்தால் கழிவு நீர் குடிநீரில் கலந்து வருகிறது. இதனால் நோய் தொற்று அபாயம் ஏற்பட்டுள்ளது. என்று கூறினார்.

முடிவில் பேசிய மண்டல குழு தலைவர் நொள்ம்பூர் வே.ராஜன் மாமன்ற உறுப்பினர்கள் உங்களது கோரிக்கைகளுக்கு நடவடிக்கை எடுக்க மேயர் பிரியாவிடம் வலியுறுத்திகிறேன் என்று கூறினார்.

# டிஜேஎஸ் பப்ளிக் பள்ளியில் முதியோர்களுக்கான சிறப்பு நிகழ்ச்சி




**கும்மிடிப்பூண்டி,செப்.21-**

கும்மிடிப்பூண்டி அடுத்த பெருவாயில் அமைந்துள்ள டி ஜே எஸ் பப்ளிக் பள்ளியில் மாணவ மாணவிகளின் தாத்தா பாட்டி அவர்களுக்கு சிறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு டி.ஜே. எஸ். கல்வி குழும தலைவரும் கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜே. கோவிந்தராஜன் அவர்கள் தலைமை தாங்கி சிறப்பு உரையாற்றினார். மாணவர்கள் முதியோர்களிடமிருந்து நல்ல பண்புகளை கற்றுக் கொள்ள வேண்டும் அதேபோன்று குழந்தைகளுக்கு பெரியோர்கள் நல்ல சிறப்பு வாய்ந்த வரலாறுகளையும் அவர்களுக்கு சமுதாயத்தில் வாழக்கூடிய அளவிற்கு நல்ல பண்புகளையும் பழக்கவழக்கத்தையும் சொல்லித் தர வேண்டும் மாணவர்கள் பெரியோர்களை அலட்சியப்படுத்தாமல் சொல்வதை கேட்க வேண்டும் மேலும் முதியோர்கள் குடும்பத்திற்கு சிறப்பு வாய்ந்தவர்களாக இருக்கின்றனர் அவர்கள் நல்ல முறையில் ஆரோக்கியத்துடன் இருக்க நல்ல உணவு முறைகளை கையாள வேண்டும் என்று சிறப்புராட்டினர். தொடர்ந்து முதியோர்களுக்கு பல்வேறு போட்டிகள் வைக்கப்பட்டன போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளும் வழங்கினார். முன்னதாக டிஜேஎஸ் கல்விகுழுமத்தின் இயக்குனரும் பப்ளிக் பள்ளியின் தாராளமான டி ஜேஜி.தமிழரசன் வரவேற்றனர். பள்ளி முதல்வர் அசோக் முன்னிலை வகித்தனர் உடன் மாணவர்களும் ஆசிரியர்களும் மற்றும் பொதுமக்கள் திமுக கழக நிர்வாகி குணசேகர் ஆகியோர் கலந்து கொண்டனர்.



திமுக முப்பெரும் விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் பேரறிஞர் அண்ணா விருதுபெற்றமுன்னாள் அமைச்சர் க.சுந்தரத்தை மாவட்ட பிரதிநிதி பி.எஸ்.சைலஸ் தலைமையில் பகுதி துணைச் செயலாளர் பிரபாவதி மணி,மாவட்டபிரதிநிதிகள்க. கார்த்திகேயன், ப.சந்தான கிருஷ்ணன்,மீஞ்சூர் எஸ்.கதிரவன்,இரா.கணேசன், வாழப்பாடி செந்தில் ஆகியோர் வேட்டி சால்வை இனிப்பு வழங்கி கவரவித்தனர்.

# முகப்பேர் மேற்கு பகுதியில் திருக்குடை ஊர்வலம்



**சென்னை செப் 21-**

ஆந்திர மாநிலம் திருப்பதியில் நடக்கும் பிரம்மோற்சவத்திற்குகாக 'ஹிந்து தர்மார்ர்ந்த சமிதி சார்பில் 19 வது ஆண்டு திருக்குடை உற்சவ ஊர்வலம் நடந்தது. சென்னை சென்ன கேசவ பெருமாள் கோயில் இருந்து கடந்த 16 ம் தேதியன்று துவங்கியது. கடந்த திங்கள்கிழமை அன்று வில்லிவாக்கம் தாமோதரபெருமாள் கோயிலுக்கு சென்றது. கடந்த திங்கள் கிழமை அன்று மாலை அங்கிருந்து புறப்பட்டு பாடி வழியாக மேற்கு முகப்பேர் ரெட்டிப்பாளையம் ஆட்டோ நிறுத்தம் அருகில் உள்ள

தேவி மாரியம்மன் கோயிலில் இந்த திருக்குடை ஊர்வலம் வந்தடைந்தது.அப்போது ஹிந்து தர்மார்தத் சமிதியின் அறங்காவலர் ஆர்.ஆர்.கோபால் ஜியை , திருப்பதிகுடை முகப்பேர் பொறுப்பாளர் எம்.ஸ்ரீபதி ஆகியோரை அதிமுக 91 வது மேற்கு வட்ட செயலாளர் .வி. லட்சுமணன் வரவேற்றார்.அப்போது வி.பாபு, உள்ளிட்ட ஊர் பொது மக்கள் திருக்குடை மற்றும் பெருமாளின் பொற்பாதங்கள், தசாவதார உற்சவர்சிலைகளை பகுதி பரவசத்துடன் தரிசனம் செய்தனர்.பின்னர் அம்பத்தூர் வழியாக திருமுல்லைவாயில் வழியாக திருகுடை ஊர்வலம் திருவள்ளூர் வழியாக திருப்பதி சென்றது.

# கைதான யூடியூபர் டி.டி.எப். வாசன், ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் அனுமதி

**சென்னை செப் 21-**

பிரபல யூடியூபர் டி.டி.எப். வாசன். இவர் கடந்த 17-ந் தேதி காஞ்சிபுரம் அருகே பாலுசெட்டிசத்திரம் பகுதியில் சென்னை-பெங்களூரு நெடுஞ்சாலையில் மோட்டார் சைக்கிளில் அதிவேகமாக சென்றபோது வீலிங் செய்தார்.

அப்போது நிலைதடுமாறி கீழே விழுந்ததில் அவரது வலது கை முறிந்தது. அவரது மோட்டார் சைக்கிள் பல அடி தூரத்துக்கு பறந்து போய் விழுந்தது.இந்த காட்சி சமூக வலைதளங்களில் பரவியதை தொடர்ந்து டி.டி.எப். வாசனை நேற்று முன் தினம் காலை பாலுசெட்டிசத்திரம் போலீசார் அதிரடியாக கைது செய்தனர்.

அவர் மீது பொதுமக்களுக்கு அச்சுறுத்தும் வகையில் வாகனம் ஓட்டுதல், மரணம் விளைவிக்கும் வகையில் குற்றம் செய்தல், மற்றவர்களின் உயிருக்கு அல்லது தனிப்பட்ட பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்படுத்துதல் உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டது. அவரது ஓட்டுனர் உரிமத்தை ரத்து செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது.

இதைத்தொடர்ந்து காஞ்சிபுரம் கோர்ட்டில் ஆஜர்படுத்தப்பட்ட டி.டி.எப்.வாசனை 15 நாட்கள் நீதிமன்ற காவலில் சிறையில் அடைக்க நீதிபதி உத்தரவிட்டார்.இதற்கிடையே டி.டி.எப்.வாசன், தனக்கு கைஎலும்பு முறிவு ஏற்பட்ட இடம் மற்றும் இடுப்பு பகுதியில் அதிகம் வலி எடுப்பதாக கூறியதாக தெரிகிறது. இதையடுத்து நேற்று இரவு டி.டி.எப்.வாசனை சிகிச்சைக்காக சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவமனைக்கு போலீசார் அழைத்து வந்தனர்.அங்கு அவருக்கு பரிசோதனைகள் எடுக்கப்பட்டு உள்ளது. தொடர்ந்து அவர் ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். சிகிச்சை முடிந்ததும் அவர் புழல் சிறையில் அடைக்கப்படுவார் என்று தெரிகிறது.

குடிபோதையில் வாகனத்தை ஓட்டாதே!
குடும்பத்தை சோகத்தில் ஆழ்த்தாதே!!

# புதுவண்ணாரப்பேட்டையில் வழிப்பறியில் ஈடுபட்ட 5 வாலிபர்கள் கைது

**சென்னை செப் 21-**

புதுவ.உ.சி. நகரை சேர்ந்த நரேஷ் குமார், ஆகாஷ் என்கிற குள்ள பெட்டா, சந்தோஷ் ஆகிய 3 பேரை புது வண்ணாரப்பேட்டை போலீஸ் இன்ஸ்பெக்டர் மற்றும் போலீசார் கைது செய்தனர்.

வண் ணா ரப் பேட்டை சுனாமி குடியிருப்பைச் சேர்ந்தவர் ராஜேஷ். இவர் நேற்று அதே பகுதியில் உள்ள அம்மணி அம்மன் தெருவில் சென்று கொண்டிருந்தபோது மர்ம கும்பல் அவரை வழிமறித்து கத்திமுனையில் மிரட்டி பணத்தை பறித்து தப்பிச் சென்றனர்.இதுதொடர்பாக அதே பகுதி வ.உ.சி. நகரை சேர்ந்த நரேஷ் குமார், ஆகாஷ் என்கிற குள்ள பெட்டா, சந்தோஷ் ஆகிய 3 பேரை புது வண் ணா ரப் பேட்டை போலீஸ் இன்ஸ்பெக்டர் கிருஷ்ணராஜ் மற்றும் போலீசார் கைது செய்தனர்.

இதேபோல் சேணி அம்மன் கோவில் தெருவில் வழிப்பறியில் ஈடுபட்டு துரைப்பாக்கம் கண்ணகி நகரை சேர்ந்த நரேஷ், லோகேஷ் ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

# சென்னையில் காதலிக்க மறுத்த கல்லூரி மாணவிக்கு கத்திக்குத்து

**சென்னை செப் 21-**

சென்னை பெரும்பாக்கம் பகுதியை சேர்ந்த மாணவி ஒருவர் வண்டலூர் அருகே உள்ள தனியார் கல்லூரியில் டிப்ளமோ முதலாம் ஆண்டு படித்து வருகிறார். வழக்கம் போல் கல்லூரிக்கு செல்ல மேடவாக்கம் பேருந்து நிலையத்தில் மாணவி காத்திருந்தார்.

**கத்திகுத்து**

அப்போது அங்கே வந்த ஒரு இளைஞர், ஆள்நடமாட்டம் இல்லாத இடத்திற்கு மாணவியை இழுத்துச் சென்றுள்ளார். அப்போது தன்னை காதலிக்கும்படி வற்புறுத்தியுள்ளார். அப்போது அந்த பெண் காதலிக்க மறுத்த போது, அந்த வாலிபர் பெண்ணின் கை, கால், முகத்தில் கத்தியால் தாக்கிவிட்டு ஓடிவிட்டார்.

**வலைவீச்சு**

குரோம்பேட்டையில் முதலுதவி பெற்று, ஸ்டான்லி மருத்துவமனையில் மேல்சிகிச்சைக்காக மாணவி அனுமதிக்கப்பட்டுள்ளார். மாணவியை கத்தியால் குத்திய இளைஞரை பிடிக்க தனிப் படை அமைக்கப்பட்டுள்ளது.

## உலகக்கோப்பை கிரிக்கெட் தொடர்:
# இந்திய ஆடவர் அணியின் புதிய 'ஜெர்சி' வெளியீடு

**புதுடெல்லி, செப். 21-**

உலகக்கோப்பை தொடருக்கான இந்திய அணியின் ஜெர்சி வெளியிடப்பட்டுள்ளது.




**10 அணிகள் ...**

இந்தியாவில் வரும் அக்டோபர், நவம்பர் மாதங்களில் 50 ஓவர் உலகக் கோப்பை தொடர் நடைபெற உள்ளது. இந்த தொடரில் இந்தியா, பாகிஸ்தான், இங்கிலாந்து, நியூசிலாந்து, ஆஸ்திரேலியா உள்ளிட்ட 10 அணிகள் கலந்து கொள்கின்றன. உலகக்கோப்பை தொடரின் தொடக்க ஆட்டத்தில் இங்கிலாந்து - நியூசிலாந்து அணிகள் அகமதாபாத்தில் மோத உள்ளன.

**புதிய ஜெர்சி...**

இந்திய அணி தனது தொடக்க ஆட்டத்தில் ஆஸ்திரேலியாவை அக்டோபர் 8 ஆம் தேதி சென்னையில் சந்திக்கிறது. இந்த நிலையில் உலகக்கோப்பை தொடருக்கான இந்திய அணியின் ஜெர்சி வெளியிடப்பட்டுள்ளது. அடிடாஸ் நிறுவனம் இந்திய அணியின் உலகக் கோப்பை ஜெர்சியை வடிவமைத்துள்ளது.

# ஐசிசி ஒருநாள் தரவரிசை: முகமது சிராஜ் முதலிடம்

**புதுடில்லி, செப். 21-**

ஆசிய கோப்பை 2023 இறுதிப்போட்டிகளுக்குப் பிறகு முகமது சிராஜ் உலகின் நம்பர் 1 ஒருநாள் பந்து வீச்சாளராக ஆனார். இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் முகமது சிராஜ், ஐசிசி ஒருநாள் தரவரிசையில் 8 இடங்கள் முன்னேறி உலகின் நம்பர் 1 பந்துவீச்சாளராக மாறியுள்ளார்.




சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐசிசி) வீரர்களுக்கான புதிய தரவரிசை பட்டியலை நேற்று வெளியிட்டுள்ளது. இதில் ஒருநாள் போட்டிகளின் பந்துவீச்சாளர்களின் தரவரிசையில் இந்திய வீரர் சிராஜ் முதலிடத்திற்கு முன்னேறியுள்ளார். சமீபத்தில் நடைபெற்ற ஆசிய கோப்பை தொடரில் சிராஜ் சிறப்பாக செயல்பட்டார். இலங்கைக்கு எதிரான ஆசிய கோப்பை இறுதிப்போட்டியில் சிராஜ் 6 விக்கெட்டுகளை வீழ்த்தினார். இதனால் அவர் முதலிடத்திற்கு முன்னேறியுள்ளார். ஆஸ்திரேலியாவின் ஜோஸ் ஹேசில்வுட் 2வது இடத்திலும், நியூசிலாந்து வீரர் டிரெண்ட் போல்ட் 3வது இடத்திலும் உள்ளனர். லும் இந்திய வீரர் குல்தீப் யாதவ் 9வது இடத்தில் உள்ளார்.

# அணியில் அஸ்வின் ? அகர்க்கர் பதில்

எதிர்வரும் உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரில் இந்திய அணியில் அக்சர் படேலுக்கு மாற்றாக அஸ்வின் இடம் பிடிப்பாரா என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது. இந்த நிலையில் அது குறித்து இந்திய அணியின் தேர்வுக் குழு தலைவர் அகர்க்கர் பதில் அளித்துள்ளார். அண்மையில் நிறைவடைந்த ஆசிய கோப்பை தொடரின் சூப்பர்-4 சுற்றில் வங்கதேச அணிக்கு எதிரான போட்டியில் அக்சர் படேல் காயமடைந்தார். இறுதிப் போட்டியில் அவருக்கு மாற்றாக வாஷிங்டன் சுந்தர் களம் கண்டார். ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் அனுபவ சுழற்பந்து வீச்சாளர் அஸ்வின் மற்றும் வாஷிங்டன் சுந்தர் என இருவரும் உள்ளனர்.

"அக்சர் படேலுக்கு ஏற்பட்டுள்ள காயத்தில் இருந்து அவர் விரைந்து குணம் பெறுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. இருந்தாலும் இடைப்பட்ட நேரத்தில் அஸ்வின் மற்றும் வாஷிங்டன் சுந்தரை ஆஸ்திரேலிய தொடருக்காக தேர்வு செய்துள்ளோம். இந்த தொடரில் அவர்களின் செயல்பாட்டை கருத்தில் கொள்வோம். இறுதி முடிவு அக்சரின் காயத்தை பொறுத்து சரியான நேரத்தில் எடுக்கப்படும். அவர் ஃபிட்டாக இருப்பார் என நம்புகிறோம். அப்படி இல்லாமல் மாற்று தேவை இருந்தால் அந்த வழியை பின்பற்றுவோம்" என அகர்க்கர் தெரிவித்துள்ளார்.

# சாஹல் மனைவி குறித்து நெகிழ்ச்சி

உலகக்கோப்பை தொடருக்கான இந்திய அணியில் சாஹலை எடுக்காதது பெரும் விவாதத்தை ஏற்படுத்தியது. சாஹல் பந்துவீச்சில் சிறப்பாக செயல்பட்டாலும் பேட்டிங் ஆட தெரிந்த சுழற்பந்து வீச்சாளர் தேவை என்பதால் சாஹல் அணியிலிருந்து கழட்டி விடப்பட்டுள்ளார். இந்நிலையில் உலகக்கோப்பையில் கலந்து கொள்ள சாஹலுக்கு கிடைக்காத வாய்ப்பு அவரது மனைவி தனஸ்ரீ வர்மாக்கு கிடைத்துள்ளது. அதாவது இந்தியாவில் நடைபெற உள்ள உலகக் கோப்பை தொடரை பிரபலப்படுத்தும் விதமாக பாடல் ஒன்றை ஐசிசி வெளியிடவுள்ளது. இந்த பாடலில் பாலிவுட் நடிகர் ரண்வீர் சிங் நடித்துள்ளார். இந்த பாடலுக்கு 'தில் ஜாஷ்ன் போலே' என்று பெயரிடப்பட்டுள்ளது, இந்த பாடலை பிரபல இசையமைப்பாளர் ப்ரீதம் இசையமைத்துள்ளார்.



இந்நிலையில் சிறந்த நடனக்கலைஞரான தனஸ்ரீ வர்மா உலகக்கோப்பை தொடருக்காக ஐசிசி வெளியிடும் பாடலில் ரன்வீர் சிங்குடன் நடனம் ஆடி உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. தனஸ்ரீ வர்மா பிரபல யூடியூபர் ஆவார். சிறந்த நடன கலைஞரான அவர் நடனம் கற்றுக் கொடுத்தும் வருகிறார். தனது யூடியூப் சேனலில் நடனம் ஆடி அதை வீடியோவாக பகிர்ந்து வருகிறார். சாஹலை திருமணம் செய்யும் முன்பு இருந்தே அவர் வட இந்திய அளவில் யூடியூபில் பிரபலமானவராக இருந்தார். சுமார் 55 லட்சம் பேர் அவரை இன்ஸ்டாகிராமில் பின் தொடர்ந்து வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## மகளிர் இடஒதுக்கீடு மசோதா விரைவில் சட்டமாக்கப்பட்டு
# 2024 தேர்தலிலே அமல்படுத்த வேண்டும்
## பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் வலியுறுத்தல்

**புதுடெல்லி, செப். 21-**

மகளிர் இடஒதுக்கீடு மசோதா விரைவில் சட்டமாக்கப்பட்டு, வரக்கூடிய 2024 மக்களவைத் தேர்தலில் அமல்படுத்தப்பட வேண்டும் என்று மக்களவையில் எதிர்க்கட்சி எம்பிக்கள் வலியுறுத்தியுள்ளனர்.

சட்டமன்றங்களிலும், பாராளுமன்றத்திலும் மகளிருக்க 33 சதவீத இட ஒதுக்கீடு வழங்குவதற்கான சட்டத்தைக் கொண்டு வரும் நோக்கில் அதற்கான மசோதா புதிய பாராளுமன்றத்தில் நேற்று அறிமுகப்படுத்தப்பட்டது. இதையடுத்து, இந்த மசோதா மீது மக்களவையில் நேற்று விவாதம் நடைபெற்று பிறகு நிறைவேறியது. தற்போதைய நிலையில் இந்த மசோதா நிறைவேற்றப்பட்டாலும் உடனடியாக சட்டமாக ஆகாது.

நாடு முழுவதும் தொகுதி மறுவரையறை செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டு, அதன் பிறகே இந்தச் சட்டம் அமலுக்கு வரும் என மசோதாவில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நிலையில், இந்த மசோதாவை விரைவாக சட்டமாக்கி, வரும் பாராளுமன்றத் தேர்தலில் அமல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எதிர்க்கட்சி எம்பிக்கள் வலியுறுத்தி உள்ளனர். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பெண் எம்பி ரஞ்சீத் ரஞ்சன் கூறும்போது, "இந்த மசோதாவை நாங்கள் வரவேற்கிறோம். மகளிர் இட ஒதுக்கீடு தேவை என்பதை காங்கிரஸ் தொடர்ந்து கூறி வருகிறது. மகளிர் இட ஒதுக்கீட்டு மசோதாவை கடந்த 2010ம் ஆண்டு மார்ச் 9-ம் தேதி மாநிலங்களவையில் நாங்கள் நிறைவேற்றினோம். ஆனால், மக்களவையில் நிறைவேறாததால் மசோதா சட்டமாகவில்லை.

திமுக மக்களவை எம்.பி கனிமொழி பேசும்போது, "இந்த மசோதா அறிமுகப்படுத்தப்பட்டுள்ள போதிலும், இது எப்போது அமலுக்கு வரும் என்பது இன்னும் தெரியவில்லை. இந்த மசோதாவை 2024 பாராளுமன்றத் தேர்தலை மனதில் கொண்டு பாஜக கொண்டு வந்திருப்பதாகவே புரிந்து கொள்ள முடிகிறது" என்றார்.

காங்கிரஸ் மூத்த தலைவர் சோனியா காந்தி பேசும்போது, "இந்த மசோதா நிறைவேறுவதில் நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம். அதேநேரத்தில், காங்கிரஸ் தலைமையிலான முந்தைய ஆட்சிக் காலத்தில் இந்த மசோதா மாநிலங்களவையில் நிறைவேற்றப்பட்டது. அவ்வாறு நிறைவேற்றப்பட்டு 13 ஆண்டுகளாக இந்திய பெண்கள் காத்திருக்கிறார்கள். இன்னும் எத்தனை ஆண்டுகளுக்குக் காத்திருப்பது? இந்திய பெண்களை இவ்வாறு காத்திருக்க வைப்பது சரியா? இந்த மசோதா நிறைவேற்றப்பட்டு உடனடியாக அமல்படுத்தப்பட வேண்டும் என்றார்.

## எதிர் கட்சிகளின்
# இன்டியா கூட்டணியிலிருந்து சி.பி.எம். கட்சி திடீர் விலகல்

**டெல்லி, செப். 21-**

எதிர் கட்சிகளின் இன்டியா கூட்டணியிலிருந்து சி.பி.எம். கட்சி விலகியுள்ளது.

தற்போது பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சியில் உள்ளது. இந்நிலையில் 2024-ம் ஆண்டு பாராளுமன்ற தேர்தல் நடைபெற உள்ளது. இதில் பா.ஜ.க. கூட்டணியை எதிர் கொள்வதற்காக பல்வேறு எதிர்கட்சிகளை கொண்ட கூட்டணியை காங்கிரஸ் கட்சி உட்பட பல்வேறு கட்சிகள் இணைந்து உருவாக்கின. இந்த கூட்டணியில் மொத்தம் 28 கட்சிகள் இருந்தன. இதற்கு எதிர்கட்சிகள் 'இன்டியா' என பெயரிட்டுள்ளன. இந்த கூட்டணி கட்சிகளின் முதல் கூட்டம் ஜூன் 23 ல் பீகாரின் தலைநகர் பாட்னாவிலும் இரண்டாவது கூட்டம் ஜூலை 19 ல் பெங்களூருவிலும் மற்றும் மூன்றாவது கூட்டம் செப்டம்பர் 1ல் மும்பையிலும் நடைபெற்றன.

இந்த 3 கூட்டங்களிலும் சிபிஎம் கட்சி கலந்து கொண்டது. இந்நிலையில் தற்போது இன்டியா கூட்டணியில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளது. இந்த முடிவானது செப்டம்பர் 17 ல் டெல்லியில் நடந்த சிபிஎம் கட்சியின் பொலிட் பீரோ கூட்டத்தில் எடுக்கப்பட்டதாக அக்கட்சியின் மூத்த தலைவர் பிரகாஷ் காரத் தெரிவித்துள்ளார். மேலும் அவர் கூறியதாவது, காங்கிரஸ், திரிணாமுல் காங்கிரஸ் மற்றும் சிவசேனா கட்சிகளுடன் கூட்டணி வைக்க முடியாது. தேர்தலுக்கு பின்னர் பாஜக ஆட்சிக்கு வராமல் தடுக்க கூட்டணிக்கு வந்ததாக தெரிவித்துள்ளார்.

கேரளாவில் பல ஆண்டுகளாக காங்கிரஸ் மற்றும் சிபிஎம் கட்சிகள் மாறி மாறி ஆட்சி செய்துவருகின்றன. மேலும் மேற்குவங்கத்தில் திரிணாமுல் காங்கிரஸ் மற்றும் சிபிஎம் கட்சிகளுக்கிடையே மோதல் போக்குகள் தொடர்ந்துவருகின்றன. தற்போது கேரளாவில் தொகுதி பங்கீடு பற்றிய கேள்விக்கு கேரள மாநில சிபிஎம் கட்சி உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். எனவே இன்டியா கூட்டணியில் இருந்து விலகுவதாக சிபிஎம் கட்சி அறிவித்துள்ளது. இது அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## உலகக்கோப்பை: பாடல் வெளியீடு

**50** ஓவர் உலகக்கோப்பை தொடர் இந்தியாவில் வரும் அக்டோபர் 5ம் தேதி தொடங்குகிறது. இந்த தொடரில் இந்தியா, பாகிஸ்தான், ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, இங்கிலாந்து உள்ளிட்ட 10 அணிகள் கலந்து கொள்கின்றன. உலகக்கோப்பை தொடரின் தொடக்க ஆட்டத்தில் இங்கிலாந்து - நியூசிலாந்து அணிகள் அகமதாபாத்தில் மோத உள்ளன.

இந்திய அணி தனது தொடக்க ஆட்டத்தில் ஆஸ்திரேலியாவை சென்னையில் சந்திக்கிறது. இந்நிலையில் இந்தியாவில் நடைபெற உள்ள உலகக்கோப்பை தொடரை பிரபலப்படுத்தும் விதமாக பாடல் ஒன்றை நேற்று ஐசிசி வெளியிட உள்ளதாக கூறப்பட்டது. இந்நிலையில் அந்த பாடல் தற்போது வெளியானது. இந்த பாடலுக்கு 'தில் ஜாஷ்ன் போலே' என்று பெயரிடப்பட்டுள்ளது. இந்த பாடலுக்கு பிரபல இசையமைப்பாளர் ப்ரீதம் இசையமைத்துள்ளார். இந்த பாடலில் பாலிவுட் நடிகர் ரண்வீர் சிங் மற்றும் இந்திய கிரிக்கெட் வீரர் சாஹலின் மனைவி தனஸ்ரீ வர்மா ஆகியோர் நடித்துள்ளனர். தற்போது இந்த பாடல் சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

## நியூசி. வீரர் டிம் சௌதி விலகல்?



நியூசிலாந்து வேகப்பந்து வீச்சாளர் டிம் சௌதி உலகக் கோப்பை போட்டியில் பங்கேற்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐசிசி), பிசிசிஐ இணைந்து 50 ஓவர் ஒருநாள் உலகக் கோப்பை போட்டியை இந்தியாவில் வரும் அக். 5 முதல் நவ. 19-ஆம் தேதி வரை நடத்துகின்றன. அக். 5-ஆம் தேதி அகமதாபாதில் நடைபெறும் முதல் ஆட்டத்தில் நடப்பு சாம்பியன் இங்கிலாந்து-நியூசிலாந்து மோதுகின்றன.இந்த தொடருக்காக கேன் வில்லியம்சன் தலைமையிலான 15 பேர் கொண்ட நியூசிலாந்து அணி சமீபத்தில் அறிவிக்கப்பட்டது. இந்த அணியில் முன்னணி வேகப்பந்து வீச்சாளர் டிம் சௌதியும் இடம்பெற்றுள்ளார்.

இந்த நிலையில், இங்கிலாந்துக்கு எதிராக கடந்த வாரம் நடைபெற்ற கடைசி ஒருநாள் போட்டியில் விளையாடிய நியூசிலாந்தின் டிம் சௌதிக்கு வலது கை கட்டை விரலில் காயம் ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து, மருத்துவர்கள் ஸ்கேன் செய்து பார்த்ததில் எலும்பு முறிவு ஏற்பட்டது தெரிய வந்துள்ளது. மேலும், மருத்துவர்களின் பரிந்துரைப்படி, டிம் சௌதியின் வலது கட்டை விரலில் அறுவை சிகிச்சை மேற்கொள்ளவுள்ளதாக நியூசிலாந்து கிரிக்கெட் நிர்வாகம் தெரிவித்துள்ளது. அறுவை சிகிச்சை முடிந்த பிறகு அடுத்த வாரத்தில் உலகக் கோப்பை அணியில் டிம் சௌதி இடம்பெறுவாரா, மாட்டாரா என்பது குறித்து தெரிவிக்கப்படும் என்று அணி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

## ஜெய்ஷாவிற்கு நன்றி தெரிவித்த ரஜினி

இந்தியாவில் வரும் அக்டோபர், நவம்பர் மாதங்களில் 50 ஓவர் உலகக்கோப்பை தொடர் நடைபெற உள்ளது. இந்த தொடரில் இந்தியா, பாகிஸ்தான், இங்கிலாந்து, நியூசிலாந்து, ஆஸ்திரேலியா உள்ளிட்ட 10 அணிகள் கலந்து கொள்கின்றன. உலகக்கோப்பை தொடரின் தொடக்க ஆட்டத்தில் இங்கிலாந்து - நியூசிலாந்து அணிகள் அகமதாபாத்தில் மோத உள்ளன. இந்திய அணி தனது தொடக்க ஆட்டத்தில் ஆஸ்திரேலியாவை அக்டோபர் 8 ஆம் தேதி சென்னையில் சந்திக்கிறது.



இந்த நிலையில் நடிகர் ரஜினிக்கு இந்தியாவில் நடைபெறும் உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டிகளை காண்பதற்கான கோல்டன் டிக்கெட்டை பி.சி.சி.ஐ செயலாளர் ஜெய்ஷா வழங்கி கவுரவித்தார். இந்நிலையில், ஜெய்ஷாவிற்கு நன்றி தெரிவித்து ரஜினி சமூக வலைதளத்தில் பதிவு ஒன்றை பகிர்ந்துள்ளார். அதில், "2023-ஆம் ஆண்டு உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டிக்கான கோல்டன் டிக்கெட்டை பி.சி.சி.ஐ-யிடம் இருந்து பெற்றுக் கொண்டதில் மகிழ்ச்சி. ஜெய்ஷா உங்களை சந்தித்ததில் மகிழ்ச்சி. உங்கள் அன்பான வார்த்தைகளுக்கும் எண்ணங்களுக்கும் மிக்க நன்றி" என்று குறிப்பிட்டுள்ளார்.

# நெல்லை - சென்னை வந்தே பாரத் வரும் 24-ம் தேதி முதல் ரயில் இயக்கம்
## பிரதமர் மோடி தொடங்கி வைக்கிறார்

**நெல்லை, செப். 21-**

வருகிற 24-ம் தேதி (ஞாயிற்றுக்கிழமை) முதல் நெல்லை-சென்னை வந்தே பாரத் ரயில் இயக்கப்பட உள்ளது. பிரதமர் மோடி மான் கீ பாத் நிகழ்ச்சியில் காணொலி மூலம் தொடங்கி வைக்கிறார் என்று தென்னக ரெயில்வே கோட்ட மேலாளர் பத்மநாபன் அனந்த் தெரிவித்தார்.

இந்திய ரயில்வே சார்பில் அதிநவீன சொகுசு வசதிகள் கொண்ட வந்தே பாரத் ரயில்கள் அறிமுகம் செய்யப்பட்டு இயக்கப்பட்டு வருகிறது. தமிழகத்தில் முதன் முதலாக கடந்த ஏப்ரல் மாதம் சென்னை - கோவை இடையே அறிமுகப்படுத்தப்பட்ட வந்தே பாரத் ரயிலுக்கு அமோக வரவேற்பு கிடைத்துள்ள நிலையில், தொடர்ந்து சென்னையில் இருந்து நெல்லைக்கு வந்தே பாரத் ரயில் இயக்க தேவையான நடவடிக்கைகளை ரயில்வே துறையினர் மேற்கொண்டனர்.

இதற்காக நெல்லை சந்திப்பு ரயில் நிலையத்தில் மின்மயமாக்கல் பணிகள், வந்தே பாரத் பெட்டிகளை பராமரிக்க தேவையான முற்றிலும் மின்மயமாக்கப்பட்ட பிட்லைன் பணிகள் துரிதமாக முடிக்கப்பட்டது. தொடர்ந்து கடந்த ஆகஸ்ட் மாதம் 15-ம் தேதி சுதந்திர தின நாளில் வந்தே பாரத் ரெயில் இயக்கம் தொடங்கும் என தகவல் பரவிய நிலையில் அது தள்ளிப் போனது.

தொடர்ந்து கடந்த வாரம் நெல்லை - சென்னை இடையே இயக்கப்பட உள்ள வந்தே பாரத் ரயிலுக்கு வண்டி எண் ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதன்படி நெல்லை - சென்னை எழும்பூர் ரயிலுக்கு 20632 என்ற எண்ணும், சென்னை-நெல்லை ரயிலுக்கு 20631 என்ற எண்ணும் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இந்நிலையில் வருகிற 24-ம் தேதி (ஞாயிற்றுக்கிழமை) முதல் நெல்லை-சென்னை வந்தே பாரத் ரயில் இயக்கப்பட உள்ளது. நெல்லை ரயில் நிலையத்தில் தொடக்க விழா ஏற்பாடுகள் விறுவிறுப்பாக நடந்து வருகிறது. இந்த முன்னேற்பாடு பணிகளை ஆய்வு செய்த தென்னக ரயில்வே கோட்ட மேலாளர் பத்மநாபன் அனந்த் நிருபர்களிடம் கூறியதாவது:-

பிரதமர் மோடி வருகிற 24-ம் தேதி மான் கீ பாத் நிகழ்ச்சியின் மூலம் நாடு முழுவதும் 9 வந்தே பாரத் ரயில்களை காணொலி காட்சி மூலம் தொடங்கி வைக்கிறார். இதில் தென்னக ரயில்வே கோட்டத்தில் காசர்கோடு - திருவனந்தபுரம், சென்னை - விஜயவாடா, நெல்லை - சென்னை ஆகிய 3 வந்தே பாரத் ரயில்கள் இயக்கப்படுகிறது.

இதற்கான தொடக்க விழா நெல்லை சந்திப்பு ரயில் நிலையத்தில் நடைபெறுகிறது. நெல்லை-சென்னை வந்தே பாரத் ரயில் முதல் கட்டமாக விருதுநகர், மதுரை, திண்டுக்கல், திருச்சி ஆகிய இடங்களில் நின்று செல்லும். மேலும் சில இடங்களில் நின்று செல்ல பயணிகள் கோரிக்கை வைத்துள்ளர். அதுகுறித்து பரிசீலனை செய்யப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

# மகளிர் இடஒதுக்கீடு மசோதாவை உடனே அமல்படுத்த வேண்டும்
## சோனியா காந்தி வலியுறுத்தல்

**புதுடெல்லி, செப். 21-**

மகளிர் இடஒதுக்கீடு மசோதாவை நாங்கள் ஆதரிக்கிறோம் என்று காங்கிரஸ் மூத்த தலைவர் சோனியா காந்தி தெரிவித்துள்ளார். மேலும் மகளிர் இந்த இடஒதுக்கீடு மசோதாவை உடனடியாக அமல் படுத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

பாராளுமன்ற சிறப்பு கூட்டத்தொடர் கடந்த 3 நாட்களுக்கு முன் தொடங்கியது. அதில் வரலாற்று சிறப்புமிக்க முடிவுகள் எடுக்கப்படும் என்று பிரதமர் மோடி கூறியிருந்தார். எனவே, மக்களவை மற்றும் மாநில சட்டசபைகளில் மகளிருக்கு 33 சதவீத இடஒதுக்கீடு அளிக்கும் மசோதா நிறைவேற்றப்படும் என எதிர்பார்ப்பு எழுந்தது. பிரதமர் மோடி தலைமையில் மத்திய மந்திரிசபை கூட்டம் நடந்தது. அதில், மகளிர் இடஒதுக்கீடு மசோதாவுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டதாக தகவல் வெளியானது.

புதிய பராளுமன்றத்தின் முதல் அலுவலாக மகளிர் இடஒதுக்கீடு மசோதா தாக்கல் செய்யப்பட்டது. மத்திய சட்ட அமைச்சர் அர்ஜுன்ராம் மேக்வால், மசோதாவை தாக்கல் செய்தார். மகளிர் இடஒதுக்கீடு மசோதா, 15 ஆண்டுகளுக்கு மக்களவை மற்றும் மாநில சட்டசபைகளில் மகளிருக்கு 33 சதவீத இடஒதுக்கீடு அளிக்க வகை செய்கிறது. பெண்களுக்கு ஒதுக்கப்படும் தொகுதிகளில் எஸ்.சி., எஸ்.டி. பிரிவினருக்கு உள்ஒதுக்கீடு அளிக்கப்படும்.

இந்நிலையில், பராளுமன்ற சிறப்பு கூட்டத்தொடரின் 3ம் நாளான நேற்று மகளிர் இடஒதுக்கீடு மசோதா மீதான விவாதம் தொடங்கி நடைபெற்று வருகிறது. விவாதத்தின்போது மகளிருக்கு 33 சதவீத இடஒதுக்கீடு வழங்கும் மசோதாவுக்கு காங்கிரஸ் ஆதரவு அளித்துள்ளது. மகளிர் இடஒதுக்கீடு மசோதாவுக்கு ஆதரவு தெரிவித்து பேசிய காங்கிரஸ் மூத்த தலைவர் சோனியா காந்தி, மகளிருக்கு இடஒதுக்கீடு வழங்கும் மசோதாவுக்கு இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி சார்பில் நான் ஆதரவு அளிக்கிறேன்' என்றார்.

விவாதத்தில் காங்கிரஸ் மூத்த தலைவர் சோனியா காந்தி பேசியதாவது., "சட்டமன்றத்திலும், பராளுமன்றத்திலும் பெண்களுக்கு 33 சதவீத இட ஒதுக்கீடு வழங்கும் 'நாரி சக்தி வந்தன்' (பெண் சக்திக்கு வணக்கம்) மசோதாவை காங்கிரஸ் ஆதரிக்கிறது. எனது தனிப்பட்ட வாழ்க்கையிலும் இது ஒரு உணர்வுப்பூர்வமான தருணம். பெண்களுக்கு உள்ளாட்சித் தேர்தலில் இட ஒதுக்கீடு கொண்டு வர முதல்முறையாக முயன்றவர் எனது கணவர் ராஜிவ் காந்தி. ஆனால், அந்த மசோதா மாநிலங்களவையில் 7 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடிக்கப்பட்டது. அதன் பிறகு பி.வி. நரசிம்ம ராவ் ஆட்சிக் காலத்தில் அந்த மசோதா நிறைவேற்றப்பட்டது. இதன் மூலம், இன்று நாட்டில் 15 லட்சம் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண் தலைவர்கள் உருவாகி இருக்கிறார்கள். இதன் மூலம் ராஜிவ் காந்தியின் கனவு ஓரளவு நனவானது. சட்டமன்றம் மற்றும் பராளுமன்றத்திலும் பெண்களுக்கு 33% இட ஒதுக்கீடு வழங்கும் இந்த சட்டம் நிறைவேறினால்தான் அவரது கனவு முழுமையாக நனவாகும்.

இந்த மசோதா நிறைவேறுவதில் நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம். அதேநேரத்தில், காங்கிரஸ் தலைமையிலான முந்தைய ஆட்சிக்காலத்தில் இந்த மசோதா மாநிலங்களவையில் நிறைவேற்றப்பட்டது. அவ்வாறு நிறைவேற்றப்பட்டு 13 ஆண்டுகளாக இந்திய பெண்கள் காத்திருக்கிறார்கள். இன்னும் எத்தனை ஆண்டுகளுக்குக் காத்திருப்பது? இந்திய பெண்களை இவ்வாறு காத்திருக்க வைப்பது சரியா? இந்த மசோதா நிறைவேற்றப்பட்டு உடனடியாக அமல்படுத்தப்பட வேண்டும். அதேநேரத்தில், சாதி வாரி கணக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும். அதன் அடிப்படையில் எஸ்.சி., எஸ்.டி., மற்றும் ஓ.பி.சி. சமூகங்களைச் சேர்ந்த பெண்களுக்கு இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும்" என தெரிவித்தார்.

# கர்நாடக அணைகளில் இருந்து காவிரியில் நீர் திறப்பு அதிகரிப்பு

**சேலம், செப். 21-**

கர்நாடக அணைகளில் இருந்து காவிரி ஆற்றில் தண்ணீர் திறப்பு நேற்று காலை வினாடிக்கு 4,674 கன அடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

கர்நாடகாவில் உள்ள கிருஷ்ணராஜசாகர் அணைக்கு நீர்வரத்து நேற்று காலை 6 ஆயிரத்து 16 கன அடியாக இருந்தது. அணையில் இருந்து 2 ஆயிரத்து 674 கன அடி தண்ணீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. அணையின் நீர்மட்டம் 97.08 அடியாக உள்ளது. கபினி அணைக்கு நேற்றுகாலை நீர்வரத்து 3 ஆயிரத்து 166 கன அடியாக இருந்தது. அணையில் இருந்து 2000 கன அடி தண்ணீர் காவிரியில் திறந்து விடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இந்த அணையில் இருந்து 1,663 கன அடி நீர் திறக்கப்பட்டது. நேற்று சற்று அதிகரிக்கப்பட்டுள்ளது. அணையின் நீர்மட்டம் 75.97 அடியாக உள்ளது. 2 அணைகளில் இருந்தும் நேற்று முன்தினம் தண்ணீர் திறப்பு 3 ஆயிரத்து 834 கன அடியாக இருந்த நிலையில் நேற்று காலை 4 ஆயிரத்து 674 கன அடி தண்ணீரை கர்நாடகம் திறந்து விட்டுள்ளது. இந்த நீர்வரத்தை கர்நாடக - தமிழக எல்லையில் உள்ள பிலிகுண்டு பகுதியில் மத்திய நீர்வளத்துறை அதிகாரிகள் கண்காணித்து வருகின்றனர்.



**விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு மதுரை மாசி வீதிகளில் பிரம்மாண்ட விநாயகர் ஊர்வலம் நடைபெற்றது.**



● சென்னை தலைமைச்செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறையின் நிர்வாக கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களில் பணிபுரிந்து ஓய்வுபெற்ற திருக்கோயில் பணியாளர்களுக்கு துறை நிலையிலான ஓய்வூதிய திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு வந்த ஓய்வூதியத்தை ரூ.3,000-லிருந்து ரூ.4,000-மாகவும், குடும்ப ஓய்வூதியத்தை ரூ.1,500-லிருந்து ரூ.2,000-மாகவும் உயர்த்தி அதற்கான காசோலைகளை வழங்கிடும் அடையாளமாக ஓய்வு பெற்ற 5 திருக்கோயில் பணியாளர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறும் 5 பணியாளர்களின் குடும்பத்தினருக்கு ஓய்வூதியத்திற்கான காசோலைகளை வழங்கி, முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார். அருகில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமைச்செயலாளர் சிவ்தாஸ் மீனா உள்ளனர்.

### உயர்த்தப்பட்ட குடும்ப ஓய்வூதியம்:

# கோவில் பணியாளர்களுக்கு வழங்கி திட்டத்தை துவக்கி வைத்தார் முதல்வர்

சென்னை, செப்.21-

சென்னை தலைமைச் செயலகத்தில் நேற்று முதல்வர் மு.க .ஸ்டாலின், இந்து சமய அறநிலையத் துறையின் நிர்வாக கட்டுப்பாட்டிலுள்ள திருக் கோயில்களில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற திருக் கோயில் பணியாளர்களுக்கு துறை நிலையிலான ஓய்வூதியத் திட்டத்தின் கீழ், வழங்கப்பட்டு வந்த ஓய்வூதியத்தை ரூ.3,000/-லிருந்து ரூ.4,000/-மாகவும், குடும்ப ஓய்வூதியத்தை ரூ.1,500/-லிருந்து ரூ.2,000/-மாகவும் உயர்த்தி அதற்கான காசோலைகளை வழங்கிடும் அடையாளமாக, ஓய்வு பெற்ற 5 திருக்கோயில் பணியாளர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறும் 5 பணியாளர்களின் குடும்பத்தினருக்கு ஓய்வூதியத்திற்கான காசோலைகளை வழங்கி, தொடங்கி வைத்தார்.

2023-2024-ம் ஆண்டிற்கான இந்து சமய அறநிலையத்துறை சட்டமன்ற அறிவிப்பில், துறை நிலையிலான ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் ஓய்வு பெறும் திருக்கோயில் பணியாளர்களுக்கு வழங்கப்படும் மாத ஓய்வூதியம் ரூ. 3000/- ஆகும். இவ்வரசின் தொலைநோக்கு பார்வை திட்டத்தின் கீழ் அறிவித்தவாறு துறைநிலையிலான ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் ஓய்வு பெறும் திருக்கோயில் பணியாளர்களின் நலன் கருதி அவர்களுக்கு வழங்கப்படும் மாத ஓய்வூதியம் ரூ.3000/-லிருந்து ரூ.4,000/- ஆக உயர்த்தி வழங்கப்படும் என்றும், ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் பெற்று வந்த பணியாளர் இறந்து விட்டால் அவரின் வாரிசுதாரருக்கு மாதந்தோறும் ரூ.1500/- குடும்ப மாத ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாண்டு முதல் குடும்ப ஓய்வூதியம் ரூ.1500/-லிருந்து ரூ.2000/-ஆக உயர்த்தி வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்புகளை செயல்படுத்திடும் வகையில், முதல்வர், துறை நிலையிலான ஓய்வூதியத் திட்டத்தின்கீழ திருக்கோயில்களில் பணிபுரிந்து ஓய்வுபெற்ற திருக்கோயில் பணியாளர்களுக்கு உயர்த்தப்பட்ட ஓய்வூதியத் தொகையான ரூ.4,000/- மற்றும் உயர்த்தப்பட்ட குடும்ப ஓய்வூதியத் தொகையான ரூ.2,000/- ஆகியவற்றிற்கான காசோலைகளை ஓய்வுபெற்ற திருக்கோயில் பணியாளர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறும் பணியாளர்களின் குடும்பத்தினருக்கு வழங்கினார். இதன்மூலம் ஆண்டொன்றுக்கு 2,454 ஓய்வூதியதாரர்களும், 304 குடும்ப ஓய்வூதியதாரர்களும் பயன்பெறுவர்.



● பேரறிஞர் அண்ணாவின் 115-வது பிறந்தநாளை முன்னிட்டு, மதுரை மாநகர் மாவட்ட அ.தி.மு.க. சார்பில், மேற்கு 6-ம் பகுதி செயலாளர் விளாங்குடி கே.ஆர்.சித்தன் தலைமையில், விளாங்குடியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ சிறப்புரை ஆற்றினார். இந்நிகழ்ச்சியில் நிர்வாகிகள் வில்லாபுரம் ராஜா, எம்.எஸ்.பாண்டியன், ஆர்.அண்ணாதுரை, பா.குமார், சக்திமோகன், பரவை ராஜா, வி.பி.ஆர்.செல்வகுமார், கு.திரவியம், எம்.எஸ்.கே.மல்லன், சோலைராஜா, பைக்காரா கருப்புசாமி, முத்துவேல், மார்கெட் மார்நாடு, இளைஞரணி கண்ணன், மலைச்சாமி, பைக்காரா செழியன், கரிசல்பட்டி சேகர், முத்துமுருகன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# காவிரி நீர் விவகாரத்தில் தமிழ்நாட்டின் கோரிக்கையை கர்நாடகா ஏற்றதில்லை

## அமைச்சர் துரைமுருகன் குற்றச்சாட்டு

சென்னை, செப்.21-

காவிரி நீர் விவகாரத்தில் தமிழகத்தின் கோரிக்கையை எக்காலத்திலும் கர்நாடகா ஏற்றதில்லை என்றும், தண்ணீர் வைத்துக்கொண்டே தர மறுக்கிறார்கள் என்றும் அமைச்சர் துரைமுருகன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

தமிழ்நாட்டில் காவிரி தண்ணீரை கர்நாடகம் முறையாக திறந்து விடாத நிலையில் மத்திய அரசு இதில் தலையிட்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழக அரசு வலியுறுத்தி வருகிறது. இதற்காக மத்திய நீர்வளத்துறை அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத்தை நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் தலைமையில் தமிழக அனைத்துக்கட்சி எம்.பி.க்கள் குழுவினர் நேற்று முன்தினம் சந்தித்து பேசினார்கள். கோரிக்கை மனுவும் அளித்தனர். ஆனால் மத்திய அமைச்சர் தமிழகத்துக்கு திருப்தி அளிக்கும் வகையில் பதில் சொல்லவில்லை. 5 ஆயிரம் கன அடி தண்ணீரை திறந்து விட கர்நாடகாவில் சொல்வதாக தெரிவித்தார். காவிரி தொடர்பான வழக்கு இன்று விசாரணைக்கு வரும் நிலையில் கர்நாடக அரசு அவசர மனுவை தாக்கல் செய்து உள்ளது.

இந்தநிலையில் அமைச்சர் துரைமுருகன் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:- கர்நாடக அணைகளில் தண்ணீர் இருக்கிறதா? இல்லையா? என்பதை காவிரி நீர் ஒழுங்காற்று குழுதான் உறுதி செய்ய வேண்டும். தமிழ்நாட்டின் எந்த கோரிக்கையையும், இது வரை கர்நாடக அரசு ஏற்றுக்கொண்டதில்லை. காவிரி விவகாரம் தொடர்பாகத் தீர்ப்பாயம் அமைக்கலாம் என்று கூறினோம், அதை அவர்கள் மறுத்தார்கள். நாம் பெற்ற அனைத்து உரிமையும் சுப்ரீம் கோர்ட் மூலமே பெறப்பட்டது. தமிழகத்தின் கோரிக்கை குறித்து மத்திய நீர்வளத்துறை அமைச்சரிடம் முறையிட்டோம். காவிரி விவகாரத்தில் சுப்ரீம் கோர்ட் தான் ஒரே தீர்வு. கர்நாடகம் தண்ணீரை வைத்துக்கொண்டு திறந்து விட மறுக்கிறது என்று அவர் தெரிவித்தார்.



● சென்னை தலைமைச்செயலகத்தில், முதல்வர் மு.க.ஸ்டாலினை நேற்று, அமைச்சர்கள் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், என்.கயல்விழி செல்வராஜ், தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், சட்டமன்ற உறுப்பினர்கள் காதர்பாட்சா முத்துராமலிங்கம், தமிழரசி, சண்முகையா, செ.ஸ்டாலின்குமார், செ.முருகேசன், க.சிவகாமசுந்தரி, ராஜா ஈஸ்வரன் ஆகியோர் சந்தித்து, தியாகி இம்மானுவேல் சேகரனாருக்கு பரமக்குடியில் திருவுருவச்சிலையுடன் கூடிய மணிமண்டபம் அமைக்கப்படும் என்று அறிவித்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

# சென்னை பல்கலைக்கழக துணைவேந்தரை தேர்வு செய்ய குழு அமைத்தது தமிழக அரசு

சென்னை, செப்.21-

சென்னை பல்கலைக் கழக துணைவேந்தரை தேர்வு செய்ய தேடுதல் குழு ஒன்றை தமிழக அரசு அமைத்துள்ளது.

கர்நாடக மத்திய பல்கலை. துணைவேந்தர் பட்டு சத்தியநாராயணா தலைமையில் 3 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது. ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி தீனபந்து, பாரதிதாசன் பல்கலை. பேராசிரியர் ஜெகதீசன் ஆகியோர் குழுவில் இடம் பெற்றுள்ளனர்.

துணைவேந்தர் நியமனத்திற்கு கவர்னர் ஏற்கனவே தேடுதல் குழு அமைத்த நிலையில் தமிழக அரசும் குழு அமைத்துள்ளது. யு.ஜி.சி. பிரதிநிதியை நிராகரித்து தமிழக அரசு தனியாக தேர்வுக் குழு அமைத்து அரசாணை வெளியிட்டுள்ளது. சென்னை பல்கலைக் கழக துணைவேந்தர் தேர்ந்தெடுக்க, கவர்னர் ரவி அமைத்த குழுவை மாற்றி அமைத்து தமிழக அரசு நடவடிக்கை எடுத்துள்ளது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

# மத்திய அரசின் தேர்தல்...(1-ம் பக்க தொடர்ச்சி)

அக்கறையில் 100-ல் 1 விழுக்காடு கூட மகளிர் மசோதாவை நிறைவேற்ற மோடி அரசு காண்பிக்காதது ஏன்?

பெரும்பான்மை பலம் இருந்தும் கடந்த 9 ஆண்டு காலமாக பாராமுகமாக இருந்து விட்டு, தேர்தல் நேர வண்ணஜாலம் காட்டி ஏமாற்ற நினைக்கும் முயற்சியை மக்கள் புரிந்துகொள்வார்கள்.

மக்கள் தொகைக் கணக்கெடுப்பு எப்போது நடத்தப்படும் என்ற உத்தரவாதம் இல்லை. நடைபெறாத மக்கள்தொகை கணக்கெடுப்பு, அதன் அடிப்படையிலான தொகுதி மறுவரையறை - அதன் பேரில் 2029-ல் அமலுக்கு வரப்போவதாக கூறப்படுவதற்கு இப்போது சட்டம் நிறைவேற்றும் விசித்திர தந்திரம் - எல்லாம் தோல்வி பயம் ஏற்படுத்தும் தேர்தல் மாய்மாலம்.

தொகுதி மறுவரையறை என்ற பெயரில் தென்னிந்திய மக்களை, குறிப்பாக தமிழ்நாட்டு மக்களின் மக்களவைப் பிரதிநிதித்துவத்தை குறைக்கும் பேராபத்து - சூழ்ச்சி முளையிலேயே கிள்ளி எறியப்பட வேண்டும். தமிழ்நாட்டை வஞ்சிக்க மாட்டோம் என்ற உத்தரவாதத்தை மத்திய அரசு இப்போதே தர வேண்டும். தென்னிந்திய மக்களை ஆட்கொண்டுள்ள அச்சத்தை போக்கிட வேண்டும் என பிரதமர் நரேந்திர மோடியை வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறேன். பிற்படுத்தப்பட்ட - மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயப் பெண்களுக்கும் இடஒதுக்கீடு வழங்க வேண்டும் என்ற கோரிக்கையில் உள்ள நியாயத்தை பா.ஜ.க. அரசு பரிசீலிக்க வேண்டும். என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



● இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேற்று, விபத்தில் பாதிக்கப்பட்ட மதுரை மாவட்டத்தை சேர்ந்த ஜூடோ விளையாட்டு வீரர் ஆர்.பரிதி விக்னேஸ்வரனை நேரில் சந்தித்து, தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை சார்பில் ரூ.2 லட்சம் நிதியுதவியை வழங்கினார். அருகில் விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாதரெட்டி உடனிருந்தார்.





● சென்னை கீழ்ப்பாக்கம், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றிய அலுவலகத்தில், கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில், கூடுதல் பதிவாளர்கள், அனைத்து மண்டல இணைப்பதிவாளர்கள் ஆகியோர்களுடனான ஆய்வுக்கூட்டம் நேற்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் உணவுத்துறை செயலாளர் ஜகந்நாதன், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர்கள் ந.சுப்பையன், ஜெ.விஜயராணி, சிறப்புப்பணி அலுவலர் எம்.பி.சிவன் அருள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# மகளிர் இடஒதுக்கீடு...(1-ம் பக்க தொடர்ச்சி)

இன்னும் எத்தனை ஆண்டுகளுக்குக் காத்திருப்பது? இந்திய பெண்களை இவ்வாறு காத்திருக்க வைப்பது சரியா? இந்த மசோதா நிறைவேற்றப்பட்டு உடனடியாக அமல்படுத்தப்பட வேண்டும். அதேநேரத்தில், சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும். அதன் அடிப்படையில் எஸ்.சி., எஸ்.டி., மற்றும் ஓ.பி.சி. சமூகங்களைச் சேர்ந்த பெண்களுக்கு இடஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும்'' என்று வலியுறுத்தினார்.

## 2029-ல் அமலுக்கு வரும்?

**தற்போதைய நிலையில் மகளிர் இடஒதுக்கீடு மசோதா நிறைவேற்றப்பட்டாலும் உடனடியாக சட்டமாக ஆகாது. நாடு முழுவதும் தொகுதி மறுவரையறை செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டு, அதன் பிறகே இந்தச் சட்டம் அமலுக்கு வரும் என மசோதாவில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, இந்த மசோதா குறைந்தபட்சம் 2029 பாராளுமன்றத் தேர்தலுக்கு முன்தான் அமலுக்கு வரும் என சட்ட நிபுணர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். மேலும் இந்த மசோதாவுக்கு நாடு முழுவதும் உள்ள சட்டப்பேரவைகளில் 50 சதவீத சட்டப்பேரவைகள் இந்த மசோதாவுக்கு ஒப்புதல் வேண்டும் என்பதையும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.**

### வாக்கெடுப்பு...

விவாதங்களுக்கு பிறகு, மகளிர் இடஒதுக்கீடு மசோதா மீது மக்களவையில் வாக்கெடுப்பு நடைபெற்றது. எம்.பி.க்களுக்கு வாக்குச்சீட்டு அளிக்கப்பட்டு வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இந்த மசோதாவுக்கு ஆதரவாக 454 வாக்குகளும், எதிராக 2 வாக்குகளும் பதிவாகின. இதன் மூலம் மக்களவை மற்றும் மாநில சட்டப்பேரவைகளில் பெண்களுக்கு 33 சதவீத இட ஒதுக்கீடு வழங்கும் மகளிர் இட ஒதுக்கீடு மசோதா மக்களவையில் நிறைவேற்றப்பட்டது.

பாராளுமன்றம், சட்டமன்றங்களில் மகளிருக்கு 33 சதவீத இடஒதுக்கீடு அளிக்க மசோதா வழிவகை செய்யும். வாக்குசீட்டின் மூலம் நடைபெற்ற வாக்கெடுப்பில் பிரதமர் மோடியும் பங்கேற்றார்.

### கடந்து வந்த பாதை:

கடந்த 1996-ம் ஆண்டு அப்போதைய பிரதமர் தேவகவுடா தலைமையிலான ஆட்சியின்போது முதல்முறையாக மகளிர் இடஒதுக்கீடு மசோதா பாராளுமன்றத்தில் அறிமுகம் செய்யப்பட்டது.

ஆனால் மசோதா தோல்வி அடைந்ததால் பாராளுமன்ற கூட்டுக் குழு பரிந்துரைக்கு அனுப்பப்பட்டது. அதே ஆண்டு மக்களவை கலைக்கப்பட்டதால் மசோதா காலாவதியானது.

1998-ல் முன்னாள் பிரதமர் வாஜ்பாய் ஆட்சிக் காலத்தில் மகளிர் இடஒதுக்கீடு மசோதா மீண்டும் அறிமுகம் செய்யப்பட்டது. அப்போதும் போதிய ஆதரவு இல்லாததால் மசோதா காலாவதியானது. கடந்த 1999, 2002, 2003-ம் ஆண்டுகளில் மசோதா தாக்கல் செய்யப்பட்டு நிறைவேறாமல் போனது.

கடந்த 2010-ல் மகளிர் இடஒதுக்கீடு மசோதா மாநிலங்களவையில் நிறைவேற்றப்பட்டது. ஆனால் மக்களவையில் நிறைவேற்ற முடியவில்லை. சுமார் 27 ஆண்டுகளுக்குப் பிறகு தற்போது பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான ஆட்சியில் மகளிர் இடஒதுக்கீடு மசோதாவை நிறைவேற்ற தீவிரம் காட்டப்படுகிறது.